# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 268 ஆவணி 05ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 21 ஓகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# வடகிழக்கு அபிவிருத்திச் செயலணியின் கூட்டத்துக்கு கூட்டமைப்புக்கும் அழைப்பு

## மைத்திரியின் பணிப்புக்கு அமைவாக 16 எம்.பிக்களுக்கும் கடிதம் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 21
வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான அரச தலைவர் அபிவிருத்திச் செயலணியின் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு அபிவிருத்திச் செயலணிக்கான குழுவில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்கி அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்காதபோதும், அரச தலைவர் மைத்திரிபாலவின் பணிப்புக்கு அமைவாக கடிதம் அனுப்பி வைக்கப்பட் >> 22

## இந்தியாவுக்குப் பதில் இலங்கையே பலாலி அபிவிருத்தியை தொடங்கும்

### இன்று அமைச்சரவைப் பத்திரம் முன்நகர்த்தப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 21
பலாலி வானூர்தித் தளத்திலிருந்து தமிழகத்துக்கு உடனடியாக வானூர்திச் சேவைகளை ஆரம்பிப்பதற்குரிய அடிப்படை அபிவிருத்திகளை முன்னெடுக்கும் பணியை இந்தியாவே மேற்கொள்வதாக இருந்த நிலையில் அந்தப் பணிகளை இலங்கை அரசின் பொது வானூர்தித் திணைக்களத்தின் ஊடாகத் தொடங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 900 மில்லியன் ரூபா >> 25

## யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்

# குடாக்கடலில் கொட்டப்படுகின்றன சுத்திகரிக்கப்படாத கழிவுகள்

### மாநகர சபை அமர்வில் நேற்றுச் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட். 21
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆபத்தான கழிவுகளான உயிரியல் கழிவுகளை அகற்றும் தனியார் நிறுவனம் அவற்றைச் சுத்திகரிப்புச் செய்யாது கடலுக்குள் நேரடியாகக் கொட்டுகின்றது என்று யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதாக >> 25

## சம்பந்தனின் அரசியலுக்கு இப்படியும் ஒரு விளக்கம்

கொழும்பு, ஓக. 21
போரை வெற்றி கொண்ட மகிந்தவினால் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை. சிங்கள மக்களின் ஆதரவுடன் தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று சம்பந்தன் கூறுகின்றமையே எமது நல்லாட்சி அரசின் வெற்றி.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலரும் அமைச் >> 24

## விக்கியின் கூற்றை மறுக்கின்றார் குரே

யாழ்ப்பாணம், ஓக. 21
வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்தபின்னர் கிளிநொச்சியில் இரு விகாரைகள் கட்டுவதற்கு ஆளுநர் திட்ட >> 24

## வடமராட்சி கடலட்டைப் பிரச்சினை அமைச்சர்களுடன் இன்று பேச்சு

### அதன் பின்னரே மைத்திரிக்கு முன்பான போராட்டம் பற்றி முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 21
வெளி மாவட்டங்களில் இருந்து வந்து வடமராட்சிக் கடலில் கடலட்டை பிடிப்பவர்கள் தொடர்பான பிரச்சினையால் அங்கு ஏற்பட்டுள்ள முறுகல் நிலை பற்றி கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா மற்றும் பிரதி அமைச்சர் எம்.எஸ்.அமீர் அலி ஆகியோர் மீனவர்களுடன் பேச்சு நடத்த இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர். அவர்களுடனான பேச்சின் பெறுபேறுகளைப் பொறுத்தே நாளை அரச தலைவரின் வருகையின்போது நடத்துவதற்குத் திட்டமிடப்பட்ட போராட்டம் குறித்த முடிவு இறுதி செய்யப்படும் என்று மீனவர்கள் அறிவித்துள்ளனர்.
அத்துமீறி வடமராட்சியில் கடலட்டை பிடிக்கப்படுவதற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படஇருந்தது. கடல் அட்டையை இரவில் பிடிக்கக்கூடாது என்பது உள்ளிட்ட சில விதிமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று உள்ளூர் மீனவர்களுக்கு அரச பிரதிநிதிகளால் உறுதி >> 24

# இயலாத் தன்மையை மூடி மறைக்கவே பொய்யுரைக்கிறார் முதலமைச்சர் விக்கி

### குற்றஞ்சுமத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா

யாழ்ப்பாணம், ஓக. 21
மாகாணசபையின் வினைத்திறனற்ற செயற்பாட்டைச் சுட்டிக் காட்டுவதை, தேர்தலை நோக்காகக் கொண்டது என்று வடக்கு முதலமைச்சர் கூற முனைவது இயலாத் தன்மையை மூடி மறைப்பதற்கான வர்ணம் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா.
"வடக்கு மாகாண சபையில் உள்ள வெற்றிடங்கள் தொடர் >> 25

# யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் நேற்று போராட்டம்

### சகாவின் வீடு தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து



யாழ்ப்பாணம், ஓக. 21
கொக்குவிலில் மருத்துவர் ஒருவரின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் நடத்தப்பட்ட தாக்கு >> 25



## உயிரிழந்த நிலையில் இருவர் மீட்பு

வவுனியா, ஓக. 21
வவுனியாவில் நேற்று இருவர் உயிரிழந்த நிலையில் கண்டு >> 24

## இலங்கையில் சீன முதலீடு ராணுவ நோக்கம் கருதியது;

### பென்ரகன் கூறுகின்றது

கொழும்பு, ஓக. 21
இராணுவமூலோபாயத்தின் ஓர் அங்கமாகவே சீனா அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வசப்படுத்தியுள்ளது என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிக்கையிட்டுள்ளது.
அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸுக்கு இராணுவ ஆற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்கள் தொடர்பாக பென்ரகன் சமர்பித்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்ப் >> 24

# வட, கிழக்கை ஆள அரசு நினைப்பதால் நாம் எதுவுமே செய்ய முடியாத நிலைமை

### ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடம் தெரிவித்தார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக. 21
வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற அரசின் எண்ணத்தால் எம்மால் எதையும் செய்ய முடியாத நிலைமை உள்ளது என்பதை ஐரோப்பியக் குழுவினருக்குச் சுட்டிக்காட்டினேன் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர். >> 22

## கேக் விற்பனைக் கடையில் மீண்டும் சிக்கியது 'மாவா'

### ஐந்து சந்தியில் நேற்றும் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் உள்ள கேக் விற்பனை நிலையம் ஒன்றில் இருந்து மாவா போதைப் பொருள் மீண்டும் கைப்பற்றப்பட்டது. அதை விற்பனைக்காக வைத் >> 24

# கட்டாக்காலி நாய்களால் யோகேஸ்வரியிடம் மாட்டிக் கொண்ட மாநகர மேயர் ஆர்னோல்ட்

யாழ்ப்பாணம். ஒக. 21
யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் முதல்வர் யோகேஸ்வரியின் கேள்விகளில் இருந்துதப்பித்து. யோகேஸ்வரியை பல்லுப் பிடுங்கிய பாம்பைப்போல் ஆக்கிய மாநகர சபை முதல்வர் ஆர்னோல்ட் அவரிடம் கட்டாக்கலி நாய்களால் வசமாக மாட்டிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் செலருடன் காரசாரமாக மோதிக்க கொண்ட சம்பம் சிறுபிள்ளைத் தனமானது என்றுசபையில்இருந்துவெளியேறிய அதன் உறுப்பினர்களானறெமீடியஸ். மற்றும்முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி ஆகியோர் தாங்களும் சிறுபிள்ளைகள் போல் வெளியேறி சில மிடங்களிலேயே மீண்டும் சபைக்குள் வந்து அமர்ந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம்மாநகரசபையின் அமர்வுமாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட் தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமாகியது. இந்தஅமர்வின் ஆரம்பத்திலேயே ஈபிடிபி கட்சியைச் சேர்ந்தசெல்வவடிவேல் இந்தியாவின்தமிழக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் மறைவுக்கான இரங்கல்தீர்மானம்ஒன்றைமுன்மொழிந்தார். முதல்வர் சபை நடவடிக்கையை ஆரம்பிக்க தயாரானார். மாநகரசபையில்எப்போதுமே ஆசனத்தில் இருந்துகொண்டு பேசும் உறுப்பினா ஜோகேஸ்வரி மாநகர முதல்மீது கேள்விகளைத் தொடுத்தார். நல்லூர் ஆலய மகோற்சவத்தின் காலத்தில் துப்பவரவு தொழிலாளர்களை என்ன அடிப்படையில் நியமித்தீர்கள் என்றார். இதற்குப் பதில் அளிக்க முடியாது. அனைத்தும்சபையில்பேசப்பட்டுஅங்கீகாரம் பெற்றே இடம்பெற்றது. எம்மிடம் பதிவு செய்யப்பட்டுள்ள ஊழியர் சங்கத்தில் இருந்தே ஆளணி தற்காலிகமாக எடுக்கப்பட்டுள்ளது. மகோற்சவம் முடிவடைந்ததும் அவர்களின் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு விடும் என்று முதல்வர் பதிலளித்தார். முதல்வரை முடக்க யோகஸ்வரி மீண்டும் முனைந்தார். "மகோற்சவத்துக்காக சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இணைக்கப்படத்தில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனீ என தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தஒப்பந்தத்தின் ஊடாக ஒருதொழிலாளியை இணைக்க 20 ஆயிரம் ரூபாய் வேண்டப்பட்டுள்ளது என்று தகவல் கிடைத்துள்ளது" என்றார் யோகேஸ்வரி

இதற்குப்பதில்அளித்தஆர்னோல்ட். அவ்வாறு யாரும்கட்னம் அறவிடவில்லை. இது தொடர்பாக இலஞ்ச ஊழல் பிரிவுக்கு உங்கள் தகவலை கூறி நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்றார். பல்லுப் பிடுங்கிய பாம்புபோல் உட்கார்ந்திருந்தார் யோகேஸ்வரி

சுகாதாராகுழுவின் அறிக்கையைசபையின் அனுமதிக்குகொண்டுவரப்பட்டது. சுகாதாரத் தொழிலாளர்கள் விடையத்தில் வாயடைத்த யோகேஸ்வரி மீண்டும் கொக்கரித்தார். "நாய்களைப் பிடிக்கின்றார்கள் அதனை என்னசெயகிண்றீர்கள் என்றார். அவர் முகத்தில் அறைந்தாற்போல் முதல்வர் பதிலளித்தார். "நீங்களா ஆள்களை வைத்து நாய் பிடிக்கிண்றீர்கள்? நாம்பிடிக்கவில்லை. நாய்களுக்கான காப்பகம் அமைத்துப் பராமரிப்பது என்றேசபையில் பேசப்பட்டது என்றார் முதல்வர். எனினும் எப்படியோ யோகேஸ்வரியால் முதல்வர் வசமாக மாட்டிக் கொண்டார். "நல்லூர்மகோற்சவத்தின்போது ஆலயச்சூழலை அண்டிய பகுதிகளில் உள்ள வீட்டுக் கிணறுகளுக்கு குளோரின் போடப்படுவது வழக்கம் அது இம்முறை நடக்கவில்லைஎன்று உறுப்பினர் யோகேஸ்வரி குற்றம் சாட்டினார். மறுத்த சுகாதார மருத்துவ அதிகாரி "நாம் இம்முறையும்கிணறுகளில் குளோரின் போட்டுள்ளோம். அத்துடன் அப்பிரதேசங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்துகளையும் வளங்கியுள்ளோம். ஆலயத்தை அண்டிய பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள்பிடிக்கப்பட்டுதூர இடத்தில்விடப்பட்டுள்ளன என்றார். சுகாதார மருத்துவ அதிகாரியின் பதிலால் முதல்வர் வசமாக மாட்டிக் கொண்டார். தப்பிக்க முடியாத முதல்வர் ஆர்னோல்ட்" கல்லுண்டாய் வெளியில் நாய்கள் விடப்படுகின்றன" என்றார்.

"கடந்த அமர்வில் சுகாதார தொழிலாளர்கள் 38 பேர் தங்களால் பணியில் ஈடுபட முடியாத நிலைஉள்ளதுஎனகடிதம்கொடுத்திருந்தனர். அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு அழைக்கப்பட்டபோதும் அவர்கள் செல்லாது கள்ளம்அடித்துவருகின்றனர். இதனை நான் சுட்டிக்காட்டிய பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன" என்று உறுப்பினர் தர்சானந்தன் கேள்வியெழுப்பினார். "பத்துக்கும் குறைவான தொழிலாளர்கள் மட்டுமே பரிசோதனைக்கு வந்தனர் மிகுதிப் பேர் வரவில்லை" என்றார் சுகாதார மருத்துவ அதிகாரி. "இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் மருத்துவ பரிசோதனை செய்யாத அத்தனை தொழிலாளர்களும்எவ்விதபாரபட்சம்இன்றிதற்காலிகமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்படுவார்கள் என முதல்வர் சபையில் அறிவித்தார். இதற்கு உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்தனர். பின்னர் பழக்கடைகள் பற்றிய விவாதம் இடம்பெற்றது. மாநகர சப உறுப்பினர்கள் சபையில் பேசும் விடையங்கள் அறிக்கையில்வருவதில்லைஎன்றகுற்றச்சாட்டுகள் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் இது தொடர்பில் உறுப்பினர்கள் சிலருக்கும். சபைச்செயலருக்கும் இடையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. ஈ.பி.டி.பி கட்சியைப் பிரதிநித்துவப் படுத்தும் உறுப்பினர் றெமீடியஸ். மற்றும் யோகேஸ்வரி இந்தச் சின்னச் சண்டையைப் பொறுக்க முடியாது சபையில் இருந்து வெளியேறினர். எனினும் மீண்டும் தாங்களாகவே வந்து அமர்ந்து கொண்டனர்.

### திலீபனின் தூபிக்கு

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்துக்கு வேலி அமைத்தவர்களுக்கு புலனாய்வாளர்களால் ஏற்பட்ட அச்சறுத்தல் தொடர்பில் நேற்று சபயில் பேசப்பட்டது. "நினைவிடத்துக்கு வேலி அமைக்க எமது தொழிலாளர்களை அழைத்தபோது அவர்கள்பின்னாடித்தார்கள். பின்னர் ஒருவாறாக அவர்கள் அங்கு வந்தார்கள். எனினும் சிறிது நேரத்திலேயே அங்கிருந்து சென்று விட்டார்கள். நான் விசாரித்தபோது எமது தொழிலாளர்களை வேலைத்தளத்துக்குள் வந்துபுலனாய்வுத்துறையினர் மிரட்டி உள்ளனர். அதுமட்டுமன்றி அவர்களின் வீடுகளுக்குச் சென்றும் மிரட்டியுள்ளனர். இதனாலேயே அவர்கள் வரவில்லை" என்று சபையின்பொறியியலாளர்தெரிவித்தார். எனினும் நினைவுத்தூபிக்கு வேலி அமைப்பது தொடர்பிலும் உறுப்பினர்கள் மோதிக் கொண்டனர். "தூபிக்கு மாநகர சபையின் நீதியோ ஆளணியோ பயன்படுத்தப்படவில்லை. மாறாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நிதி ஒதுக்கீடு செய்தார். அந்த நிதியில் தான் எப்போதோ வேலி செய்யப்பட்டது. நினைவுத் தூபியானது நல்லூர்த் திருவிழாக் காலத்தில் அதன் புனிதத்தைப் பேணவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டதால் அந்த வேலி அங்கு போடப்பட்டது என்று முதலவர் விடயத்தை முடிவுக்கு கொண்டுவந்தார்.

### முதல்வர் வகுப்பு

முத்திரை வரியில் கிடைக்கும் வருமானத்தில் நாம் திட்டங்களை கொடுத்தால் அதனை முதன்மைச்செயலர் நிராகரித்துள்ளார் என்று சபை உறுப்பினர்கள் நேற்றுக் குற்றஞ்சாட்டினர். இது தொடர்பில் முதல்வர் உறுப்பினர்களுக்குவகுப்பெடுத்தார். முதன்மைச்செயலர் உங்கள்திட்டத்தைநிராகரிக்கவில்லை. மின்விளக்குக் கொள்வனவு. வீதி சீரமைப்பு என சிறு வேலைத்திட்டங்களைத் தராது பாரிய வேலைத்திட்டங்களைசமர்ப்பியுங்கள் என்று கோரியுள்ளார். இதனை விளங்கிக்கொள்ளுங்கள் என்றார் முதல்வர்.

வடக்குமாகாண சபை மாநகரசபையின் அதிகாரங்களைப் பிடுங்கும்வகையில் செயற்படுகின்றது. எனவே மாநகர முதல்வர் உங்களிடம் உள்ள சட்ட வல்லுநர்களைக் கொண்டு மாநகரசபையில் மாகாணசபை தேவையில்லாமல் தலையிடுவதை தடுக்க வேண்டும் என்று உறுப்பினர் றெமீடியஸ் போர்க்கொடி தூக்கியார்.

### புராதனச் சின்னங்களைப் பாதுகாத்தல்

வடக்கில் உள்ள முக்கிய உள்ளூராட்சி சபையாக யாழ்ப்பாணம். மாநகர சபை திகழ்கின்றது. எனவே இந்தச்சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

இதனால்யாழ். மாநகரஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புராதானச் சின்னங்களை சபையின்நிர்வாகத்தின்கீழ்எடுத்து. அதனை சுற்றுலாத் தளமாக மாற்றி அதன் ஊடாக வருமானத்தை ஈட்ட முடியும். குறிப்பாக யாழ். கோட்டையை எமதுகட்டுப்பாட்டுக்குள் எடுக்க வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வை. கிருபாகரன் பிரேரணை முன்வைத்தார்.

கொழும்பு அரசு இங்குள்ள புராதனச்சின்னங்களைதமதுகட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரும் முயட்சியைச் செய்து வருகின்றார்கள். அதனைத் தடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது புராதனச் சின்னங்கள் எமக்கு இல்லாமல் அழிக்கப்பட்டுவிடும். அல்லது வரலாறு மாற்றப்பட்டுவிடும். முதலில் யாழ். கோட்டையை மாநகர நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து சுற்றுலா தளமாக மாற்ற வேண்டும் என்றுஉறுப்பினர்தனுஜன்கருத்துரைத்தார். கொழும்பு அரசால் கையகப்படுத்தப்படும் யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள புராதனசின்னங்களைசுற்றுலாத்தளமாகமாற்றி சபையின்நிர்வாகத்தின்கீழ்கொண்டுவரப்பட வேண்டும்என்றுமாநகரசபையில்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையில் ஒவ்வொரு உறுப்பினர்களும் குப்பை கொடுத்தப்படுகின்றது. பற்றை வெட்டப்படவில்லை. வீதி போடப்படவில்லை போன்ற விடயங்களை சபையில் பேச சபை குறைகேள் அரங்காகமாறியது. இதனைஅவதானித்த சபை முதல்வர் அமர்வின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாலான விடயங்கள் அடுத்த அமர்வில்பேச இடமளிக்கப்படாது எனத்தெரிவித்துஉறுப்பினர்களின்குறைகளுககுப்பதில் வழங்கிச்சபையை ஒத்திவைத்தார். (21.8)

## நிபுணர்கள் அறிக்கைபெற்றே திட்டங்களுக்கு கொடுப்பனவு

### *யாழ். மாநகர சபையில் முடிவு*

யாழ்ப்பாணம். ஒக. 21
யாழ். மாநகர சபையால் மேற்கொள்ளப்படும்வேலைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன் அவை தொடர்பான துறைசார் நிபுணத்துவ முடைய சுயாதீன குழுவின் அறிக்கை பெறப்படும் என்று யாழ். மாநஙர சபையில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் அமர்வு மாநகர மேயர் இ. ஆர்னோல்ட்தலைமையில் நேற்றுஇடம்பெற்றது. அதில் யாழ்ப்பாணம் சீனியர் ஒழுங்கையில் உள்ள உப வீதி செப்பனிடல் தொடர்பில் மாநகர சபை உறுப்பினர் [illegible] முறைப்பா[illegible] சபையில் முன்வைத்தார்.

அந்த வீதி தரமற்றுள்ளது என்றும். மழை காலத்தில் அந்த வீதி இடிந்து குண்டும் குழியுமாக மாறும் அபாயமுள்ளது என்றும் மாநகர சபைஉறுப்பினர் இரா. செல்வவடிவேல் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாநகர சபை உறுப்பினர் ம. அருள்குமரன். கட்டுமாணவேலைகள் மற்றும் திட்டங்கள் முடிவடைந்த பின். வேலைகளை மதிப்பீடு செய்து. வே[illegible]களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன் அந்தந்தத் துறைசார் நிபுணத்துவமுடைய சுயாதீன குழுவின் அறிக்கை பெறப்[illegible] வேண்டும் [illegible] [illegible] அதனை வழிமொழிய சபை அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. (ந-8)

## யாழ். பழக் கடைகளில் மருந்தடித்த பழங்கள்!

### நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறார் யோகேஸ்வரி



யாழ்ப்பாணம். ஒக. 21
யாழ்ப்பாணம்நகரில்உள்ளபழக்கடைகளில்மருந்துசெலுத்தப்பட்ட பழங்களே அதிகம் விற்பனை செய்யப்படுகின்றன. அந்தவியாபாரிகளுக்குஎதிராகநடவடிக்கைஎடுக்கவெண்டும் என்றுயாழ்ப்பாணம்மாநகரசபையின்ஈ.பி.டி.பி. உறுப்பினர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கோரிக்கை விடுத்தார். யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதி[illegible] அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். [illegible] நகர்ப்பகுதியி[illegible] மருந்து நிலையத்துக்கு அண்மையில் அமைந்துள்ள பழக்கடைகளில் மருந்துகள் செலுத்தப்பட்டபழவகைகள்விற்பனைசெய்யப்படுகின்றன. சுகாதார பரிசோதகர்கள் அவர்கள்மீதுசட்டநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதற்குப் பதில் அளித்த சுகாதார வைத்திய அதிகாரி, மாநகர சபையின் சுகாதார பரிசோதகர்கள் பழுதடைந்த பழங்கள் விற்பனை செய்வது தொடர்பில்நடவடிக்கை எடுத்து வருகின்றனர். ஆனால் மருந்துசெலுத்திய பழங்களை விற்பனை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது நாம் ஆதாரம் இல்லாதுசட்டநடவடிக்கைஎடுககமுடியாது. அவற்றைஆய்வு செய்யஎம்மிடம் ஆய்வுகூட வசதி இல்லை[illegible] சுட்டிக்காட்டினார். இதற்குபதில்அளித்தசபைஉறுப்பினர் [illegible] ஆய்வு கூடம் அமைக்க நாம என்ன செய்ய வேண்டும். அதற்கான நிதியை எங்கிருந்துபெறலாம் என்பவற்றை ஆராயுங்கள் என கூற இந்த விடயம் முடிவுக்கு வந்தது.

அந்த பழக்கடைகளை மூடச்சொல்லுகின்றீர்களா? அவர்கள் விற்பனை செய்யும்போது அவ்வழியால்செல்லும்வாகனங்களின்புகைகள் பழங்கள் மீது படுகின்றன. இவ்வாறு பல பிரச்சனைகள் உள்ளன. நாம் அந்த வியாபாரிகளுக்கு தேவையான கட்டட வசதியை ஏற்படுத்த வேண்டும். பின்னர் அவர்கள் பிழை செய்தால்நாம்நடவடிக்கைஎடுக்கலாம்என்று மாநகர முதல்வர் கூறினார் - என்றார்.

பழங்களில்உள்ளவாகனபுகையைதண்ணீரில் கழுவினால் போய்விடும். ஆனால் உள்ளேசெலுத்தப்படும்மருந்தால்மக்களுக்கு பாதிப்புக்கள்ஏற்படுகின்றனஎன்றுசபைஉறுப்பினர் ரெமிடியஸ் தெரிவித்தார்.

(ந-8)

# மன்னார் சதொச மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி மீண்டும் ஆரம்பம்

மன்னார், ஓக 21

மன்னார் நகர நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருந்த பழைய சதொச கட்டடம் உடைக்கப்பட்டு புதிய கட்டடத்துக்கான அத்திபாரா வேலைகள் ஆரம்பிப்பதற்காக வெட்டப்பட்டமண், விற்பனைக்காகஎமில்நகர்வீடொன்றில் கொட்டப்பட்டது.



அந்த மண்ணில் மனித எச்சங்கள் காணப்படுகின்றன என்று வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் அங்கு சென்று ஆராயந்து, குறித்த விடயத்தை மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர்.

இதனால்மார்ச்27 ஆம்திகதிமுதல்தொடர்ச்சியாகமூன்று நாள்கள் முன்னாள் மன்னார் நீதிவான் ஏ.ஜீ அலெக்ஸ் ராஜாமற்றும்சட்ட மருத்துவ அதிகாரிகள் வீட்டுவளாகத்தினுள் பரப்பப்பட்ட மண்ணிலிருந்து சந்தேகத்துக்கு இடமான எலும்புத்துண்டுகளை மீட்டனர். இதனால் கட்டடப்பணிகள் இடைநிறுத்தப்பட்டு எலும்புகளை அகழும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் எழுபத்தியிரண்டுஎலும்புக்கூடுகள்அடையாளப்படுத்தப்பட்டு,66 எலும்புக்கூடுகள்வெளியேற்றப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டநிலையில்

கடந்த பத்தாம் திகதி 52 ஆவது நாளுடன் மீளவும் புதை குழி அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது

நேற்றையதினம்மீண்டும்சிறப்புச்சட்டமருத்துவஅதிகாரி டபிள்யு.ஏ.ஆர்.எஸ் ராஜபக்ஸ மற்றும் பேராசிரியர் ராஜ் சோமதேவா அவரது குழுவினர் சகிதம் சதொசஎலும்புகள் அகழும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஊடகவியலாளர்களுக்கு புதை குழியை ஒளிப்படம் மற்றும் கானொலிப்பதிவு செய்து செய்தி சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் புதைகுழி அகழ்வுப்பணி இடம்பெறும் இடத் துக்குச் சென்றனர்.

அவ்வேளையில்நேற்றைய தினத்தில்புதிதாகஎச்சங்கள் தடயப்பொருள்கள் காணப்பட்டனவா என்று ஊடகவியலாளர்கள் சார்பில் கேட்கப்பட்ட போது:

அதற்குகருத்துத்தெரிவித்த சிறப்புசட்ட மருத்துவ அதிகாரி ராஜபக்ஸ : ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் கானொலிப் பதிவுகள் செய்து கொள்ளலாம். தகவல்களை நாம் ஊடகவிலாளர்கள் சந்திப்பில் மட்டுமே கூறமுடியும் என்று தெரிவித்தார்.

இதனுடன் தொடர்புபட்ட செய்தியாக இந்த மாத முற்பகுதியில் சதொச வளாக எலும்புகள் அகழ்வுப் பணியைஒளிப்படம்மற்றும்கானொலிப்பதிவுசெய்யவும் அவற்றைப்பார்வையிடவும்உள்ளூர்மற்றும்வெளிஊடகவியலாளர்களுக்கு நீதிமன்றினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதை எதிர்த்து மன்னார் ஊடகவியாளர்கள், சட்டத்தரணிகள் ஊடாக நகர்த்தல் பிரேரணை தாக்கல் செய்திருந்தார்கள். நகர்த்தல் பிரேரணையை ஏற்றுக்கொண்ட நீதிவான் டி.ஜே. பிரபாகரன் குறித்த புதை குழி சம்பந்தமாக செய்தி சேகரிப்பதற்கும், அகழ்வுப்பணி இடம்பெறும்பகுதியைஒளிப்படம்மற்றும் கானொலிப்பதிவு செய்வதற்கும் அனுமதியளிக்கப்டுவதாகதீர்ப்பளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மாணவர் சிகை அலங்காரத்தை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானம்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களில்மாணவர்களுக்குநவநாகரிகம்என்றபெயரில்முடிவெட்டும் சிகைஅலங்கரிப்புநிலையங்களைத் தடை செய்யவேண்டும் என உறுப்பினர் வ. பார்த்தீபன் முன்மொழிந்த பிரேரணை திருத்தங்களுடன்ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை தற்போது மட்டக்களப்பு காத்தான்குடி சபையும் நிறைவேற்றியுள்ளது. அதேபோல்ஏனைய சபையும்கொண்டுவரலாம். இந்த நடைமுறையையேபின்பற்றவேண்டும்என வடக்குமாகாணகல்விஅமைச்சு சுற்று நிரூபம் அனுப்பபட்ட போதும் அதை மீறி தற்போதும் சிகை அலங்கரிப்புகள் நடக்கின்றன. விதிமுறையை மீறி சிகை அலங்கரிப்பு பணியில் ஈடுபடும் மாநகரசபைஎல்லைக்குஉட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களை தடை செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தத்தீர்மானத்தைஉறுப்பினர் ந. லோகதயாளன் வழிமொழிந்தார். இது வரவேற்க வேண்டிய திட்டம். அதனை நடைமுறைப்படுத்தவேண்டும். மாணவர்களுக்கு இவ்வாறுதான் சிலை அலங்கரிப்பு மேற்கொள்ள முடியும் என சகல சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுக்கு இந்த சபையும் அறிவுறுத்தி கண்காணிக்கவேண்டும். (ந,8,105)




# ஓ.எம்.பி. கூட்டம் நடைபெறாததால் வவுனியாவில் நேற்றுக் குழப்பம்

வவுனியா, ஓக. 21



காணாமல் ஆக்கப்பட்டோருக்கானபணியகத்தின்(ஓ.எம்.பி.) கூட்டம் நடைபெறவுள்ளது என்று வவுனியா மாவட்ட செயலகத்தால் காணாமல் ஆக்கப்பட்டோரின்உறவினர்கள்நேற்று அழைக்கப்பட்டிருந்த நிலையில் கூட்டம் நடைபெறாததால் குழப்ப நிலைமை ஏற்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவினர்களுடனான கூட்டம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தால்நேற்றுஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. அதில்கலந்துகொள்ள வேண்டும்என்று வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் தி. திரேஸ்குமாரால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. கலந்துரையாடல் 10 மணியில் இருந்து 12.30 மணிவரை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வதற்காக வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் கணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வந்திருந்தனர். எனினும் 10 மணி தாண்டியபோதும் கூட்டம் நடப்பதற்கான எந்த ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குழப்பமடைந்த மக்கள் கோபத்துடன் நகர சபைமண்டபவளாகத்தில்குழப்பத்தில்ஈடுபட்டனர். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியக அலுவர்களையும், தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும் கண்டவாறு திட்டித்தீர்த்தனர். பின்னர்நகரசபைமண்பத்தில் இருந்து கண்டி வீதி வழியாக வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு ஊர்வலமாகக் கோசங்கள் எழுப்பியவாறு சென்றனர்.

செயலகத்தின் முதன்மைவாயில் ஊடாக உட்செல்லஅனுமதிக்கப்படாததால்அவர்கள்கோபமடைந்துகதவைத்திறந்துஉள்செல்லமுயன்றனர். பின்னர் மாவட்டச்செயலக அதிகாரிகள் பணித்தமைக்கு அமையக் கதவு திறக்கப்பட்டது. அவர்களை உதவிமாவட்டச் செயலர் ந. கமலதாஸ், மற்றும் உதவிதிட்டமிடல்பணிப்பாளர் வி. கிருபாசுதன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தூர இடங்களில் இருந்து பலத்த சிரமத்துக்கு மத்தியில் வந்துள்ளோம். கூட்டம் நடைபெறாது என்றால் எமக்கு அறிவித்திருக்கவேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அவர்களுடன் தர்க்கித்தனர்.

அவர்களை திட்டமிடல் பணிப்பாளர் சமாதானப்படுத்த முயற்சித்தபோதும் பயனளிக்கவில்லை.

உங்களுக்கான தீர்வுகளை வழங்கவேண்டும்என்றேநாமும்செயற்பட்டோம். காணமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்திலிருந்து கூட்டம்நிறுத்தப்பட்டதாக எமக்கு அறியத்தரப்பட்டுள்ளது. நாம்கடந்த 9ஆம்திகதிஅனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அதுதொடர்பாக கடிதம்மூலம்தெரியப்படுத்தியுள்ளோம். எனினும் மக்களுக்குஉரிய முறையில் தகவல் கிடைக்கவில்லை அதுதவறானது. அதற்காக அனைவர்சார்பாகவும்நான்மன்னிப்புகேட்டுக்கொள்கின்றேன் என்று அவர் தெரிவித்தார்.

அதைஏற்காதகாணாமல்ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்கோபத்துடன்கருத்துக்கள்தெரிவித்தவாறு அங்கிருந்துகலைந்துசென்றனர்.

இதுதொடர்பாகவவுனியா, வவுனியாவடக்கு, செட்டிகுளம் பிரதேச செயலர்களிடம் கேட்டபோதுமாவட்டச்செயலகத்தில்இருந்துதகவல் கிடைத்தமைக்கு அமைவாக நாம் கிராம அலுவலர்கள் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியிருந்தோம் என்று தெரிவித்தனர். (ந-110)



# மக்கள் நலனை முன்னிறுத்தி செயற்படுமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 21

கிடைக்கப்பெறுகின்ற வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாகச் செயற்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது செய்திப் பிரிவு அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் வாழ்வியல் தேவைப்பாடுகளை வெற்றி கொள்வதற்கான முயற்சிகளை ஒவ்வொரு வரும் முன்னெடுக்க வேண்டும். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை எல்லாம் எமது மக்களின் நலன்களுக்கானதாக மாற்றி அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். பல சாதகமான வழிகளை உருவாக்கி அவற்றினூடாகவும் எமது மக்களின் நலன்சார் தேவைகளைப் பூர்த்திசெய்துகொடுக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சிறந்த பண்ணையாளர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர்

## தெரிவுக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 21

வடக்கு மாகாணத்தில் பாற்பசு, ஆடு, கோழி ஆகியவற்றை வளர்க்கும் பண்ணையாளர்களும் பெறுமதிசேர் பாற்பொருள்களை உற்பத்தி செய்யும் பண்ணையாளர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

கால்நடை வைத்தியப்பிரிவுரீதியாகவும் மாவட்டரீதியாகவும் சிறந்த பண்ணையாளர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி அவர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர் என்று திணைக்கள மாகாணப் பணிப்பாளர் கலாநிதி சி. வசீகரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சு அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும் பண்ணையாளர்கள் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பப்படிவங்களை அருகில் உள்ள கால்நடை வைத்திய நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும். பண்ணையாளர்கள் படிவங்களை நிரப்பி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்ட கால்நடை வைத்திய நிலையத்தில் அடுத்த மாதம் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (4)

# மக்கள் நடமாடும் இடங்களில் போர் வாகனங்கள் வேண்டாம்

யாழ்ப்பாணம், ஒக. 21

போர் முறைகளில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மக்கள் நடமாடும் இடங்களில் பயன்படுத்த முடியாது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்த செய்திக் குறிப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

போரில் பயன்படுத்தப்படும் வாகனங்களை மக்களின் வாழ்விடங்களில் பயன்படுத்த முடியாது. அண்மையில் கிளிநொச்சியில் மக்கள் அதிகம் நடமாடும் பகுதியில் இராணுவட்ரக் வாகனத்தால் 51வயது மதிக்கத்தக்க 5பிள்ளைகளின் தந்தை நசித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த இராணுவ வாகனத்தில் பல குறைபாடுகளுடன் நிறுத்து வதற்குரிய தொழில்நுட்பம் குறைவாக இருந்தன என்று தெரியவந்துள்ளது. எனவே அத்தகைய வாகனங்களைச் சனநடமாட்டம் அதிகமுள்ள வீதிகளில் இராணுவத்தினர் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

அவர்கள் இவ்வாறான வாகனங்களைப் பயன்படுத்துவதாயின் மக்கள் நடமாட்டம் இல்லாதவேளைகளில் மட்டும் பயன்படுத்தலாம்.

இராணுவ வாகனங்களின் போக்குவரத்து. அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்து கூட்டரசின் சட்டம் ஒழுங்கு, பாதுகாப்பு அமைச்சர் கூடுதல் கரிசனை எடுக்க வேண்டும்-என்று அவர் தெரிவித்துள்ளார். (4,50)

# வன்னியர் நாகதம்பிரான் வருடாந்தப் பொங்கல்

கொடிகாமம், ஒக. 21

கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் அமைந்திருக்கும் வன்னியர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

கிராமிய முறைப்படி சிறப்புப் பூசைகளான வளந்துப் பொங்கல் வைத்து, சுவாமி வீதியுலா வந்து அன்னதானம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை சிறப்புப்பூசைகள் இடம்பெற்று பாரம்பரிய வழி வெட்டு நடைபெறவுள்ளது. (159)

# நல்லூரில் இன்று

நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று வயலினிசை மற்றும் இசைக்கச்சேரி என்பன இடம்பெறும்.

வயலினிசையில் வயலின் பத்மநாதன் சியாமகிருஷ்ணா, மிருதங்கம் வ. ரமணா, கடம் கு. ரவிசங்கர், முகர்சிங்க. நந்தகுமார் இசைக்கச்சேரி பாட்டு ஜெகதீஸ்வரன் மாதுரிசன், வயலின் கே. வேலதீபன், மிருதங்கம் ஞா. வசந்த், செஞ்சிரா எஸ். சன்முகப்பிரியன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்

** ** ** ** **

நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் "வேலுண்டு வினைதீர்க்க" என்ற தலைப்பில் சொற்பொலிவு இடம்பெறும். சைவசின்மயர் செ. பாலச்சந்திரன் சொற்பொழிவாற்றுவார். நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45 வரை இடம்பெறும்

# செல்வச்சந்நிதியில்


தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இன்று மாலை கதாப்பிரசங்கம்- பொலிகண்டி அறநெறி மாணவர்கள். பேச்சு- "கந்தபுராணம் தந்த கச்சியப்பர்"- பிரதிக்ஷா உமாமகேசன் பொலிகண்டி அறநெறி மாணவி. சொற்பொழிவு- "கந்தபுராணமும் சைவ சித்தாந்தமும்" ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அதிபர் சைவப்புலவர் செ. பரமேஸ்வரன்.

** ** ** ** **

வடமராட்சி, ஒக. 21

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த திருவிழாவை யொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம் மண்டபத்தில் தினமும் முற்பகல் 10 மணியளவில் சிறப்பு ஆன்மீக நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை இறைசிந்தனை என்னும் தலைப்பில் சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் சொற்பொழிவாற்றுவார். (173)



மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடி பிள்ளையார் கோவில் மூன்றாம் நாள் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விநாயகப் பெருமான் கைலாச வாகனத்தில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார். (159)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி. அகிலதாஸ் 2017ஆம் ஆண்டு வேலைத் திட்ட ஒதுக்கீடான இரண்டு மில்லியன் நிதியில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மூன்று குடும்பங்களுக்கு தலா ஏழு லட்சம் பெறுமதியான 3 கல் வீடுகள் அமைக்க நிதி வழங்கினார். மழையிலும் வெயிலிலும் வாழ முடியாதவர்களுக்கு ஓலைக் குடிசையில் வறுமையில் வாழ்ந்த அல்வாய் கிழக்கு பட்டிஓடையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மங்களேஸ்வரி என்ற பயனாளியின் வீடு புகுமனைப் புகுவிழா அண்மையில் இடம்பெற்றபோது அதில் உறுப்பினர் கலந்து கொண்டிருந்தார். (26)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின்கீழ், கோப்பாய் கிராமத்தில் உள்ள மாணவர்கள் சிலருக்கு கற்றல் உதவிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 2009 உயர்தரபிரிவு பழையமாணவர்களால் வழங்கப்பட்ட நிதிஉதவி மூலம் தாய் அல்லது தந்தையரை இழந்து நலிவான பொருளாதார சூழலில் வாழ்ந்துவரும் 7 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும், பாடசாலை காலணிகளும் வழங்கப்பட்டன. (114)

# மிருசுவில் பத்திரகாளிக்கு இன்று பொங்கல் இடம்பெறும்

கொடிகாமம், ஒக. 21

வடக்கு மிருசுவில் பத்திரகாளி அம்பாள் பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

சிறப்புப் பூசைகள் காலை 7 மணிக்கு ஆரம்பமாகிறது. அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (159)

# போராட்டம் இரட்டிப்பாகியுள்ளபோதும் இரண்டும் இடிபாட்டுக்குள் சிக்கியுள்ளன

## வடக்கு அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 21

எங்களுடைய போராட்டம் இப்போது இரட்டிப்பாகியிருக்கின்றது. ஒன்று எங்களுடைய இழந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம், மற்றையது எமது உரிமைக்கான போராட்டம். இந்த இரண்டுமே இப்போது இடிபாட்டுக்குள் சிக்கியிருக்கிறன என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



தனக்கான குறித்தொதுக்கப்பட்ட மூலதன நன்கொடை நிதியிலிருந்து பயனாளிகளுக்கான உதவித்திட்டங்களை புத்தூர்பிரதேசசபையில்நேற்றுமுன்தினம் பயனாளிகளுக்கு வழங்கினார்.

அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்லாயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்திருக்கின்றோம். சொந்தங்களை இழந்திருக்கின்றோம். வாழ்வாதாரங்களை இழந்திருக்கின்றோம். எங்களுடைய போராட்டம் இப்போது இரட்டிப்பாகியிருக்கின்றது. ஒன்று எங்களுடைய இழந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம் மற்றையது எமது உரிமைக்கான போராட்டம்.

இந்த இரண்டுமே இப்போது இடிபாட்டுக்குள்சிக்கியிருக்கிறது. இப்போதுஒருபுறம் நாங்கள்அரசுடன்எமதுஉரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் அதே வேளை சமாந்தரமாக எமது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டிய போராட்டத்திலும் ஈடுபடவேண்டியர்களாக இருக்கின்றோம்.

எங்களைப் பட்டினிபோட்டு இரண்டு கைகளையும் உயர்த்தி தங்களிடம் பிச்சைகேட்கவேண்டும்என்கிறமனோநிலையிலேயே சிங்கள இனவாதம் செயற்பட்டுவருகின்றது.

ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில்அமைச்சராக இருந்தசிறில்மத்தியூஸ் என்பவர் நாடாளுமன்றத்தில் பச்சையாகவே பேசினார். தமிழர்கள் முழந்தாழிட்டு இரண்டு கைகளையும் உயர்த்தி எங்களிடம் உணவுக்குப் பிச்சை கேட்க வேண்டும் என்றார். அதனையே பின்னாளில் மகிந்த அரசு வன்னியில் மக்களை இடம்பெயர வைத்து அவர்களைசெட்டிகுளத்தில்கம்பிவேலிக்குள்அடைத்துவைத்துவிட்டுபாண்துண்டுகளை வீசி எறிந்தார்கள். எமது மக்கள் அந்தப் பாண் துண்டுகளைப் பொறுக்கி எடுப்பதற்கு முண்டியடித்து மிதிபட்டு கையேந்திநின்றார்கள். ஆகவேசிங்கள இனவாதம் என்பது தங்களை நோக்கிக் கையேந்துபவர்களாக இருக்க வேண்டும்என்றே விரும்புகின்றது.

போர் நடந்த காலப்பகுதியில் உங்களுக்குத் தெரியும் எமது உரிமை பற்றியே பேச்சுகள் நடைபெற்றுவந்தன. போர்முடிந்த பிற்பாடுசலுகைகள்பற்றியே அரசதலைவரும் தலைமை அமைச்சரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இங்குஎன்ன அபிவிருத்தி நடக்கிறது. தமிழர் தாயகப்பகுதிகளில் நாள்தோறும் பௌத்த விகாரைகளே அமைக்கப்பட்டு வருகின்றன. ஆகவேபோர்முடிந்திருந்தாலும்எமதுஉரிமைக்கான போராட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த போராட்டத்தை நாங்கள் வெற்றி கொள்ள வேண்டுமாக இருந்தால் நாங்கள் அனைவரும் எமது உழைப்பில் சொந்தக்காலில் நிற்கவேண்டும். அதற்காகவே உங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த உதவிகளை நீங்கள் அனைவரும் உச்சமாக பயன்படுத்த வேண்டும் - என்றார்.

நிகழ்வில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், மாகாணக் கல்வி அமைச்சின் தலைமைக் கணக்காளர் சிவரூபன்.மாகாணகல்விஅமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அனந்தராஜ். மாகாண விளையாட்டுத்திணைக்கள நிர்வாகஉத்தியோகத்தர்ஆனந்தகுமார். வலிகாமம்கிழக்குபிரதேசசபைத்தவிசாளர் நிரோஸ். வலி.கிழக்கு பிரதேசசபையின் செயலாளர் ஜெலிபன். நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் கிரிதரன் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உறுப்பினர்சசிகரன். வலிகாமம்கிழக்குபிரதேச சபையின் உறுப்பினர் உதயகுமார் ஆகியோர் உதவிப்பொருள்களைவழங்கினார்.

(4)

# ஒளிராத விளக்குகள் பற்றி அறிவிக்கவும்

## தவிசாளர் கோரிக்கை.

அச்சுவேலி, ஒக. 21

வலி.கிழக்குப்பிரதேசசபைப் பிரிவில் 38 இலட்சம் ரூபா செலவில் புதிய வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. ஒளிராத வீதி விளக்குகள் தொடர்பான விபரங்களைப் பொதுமக்கள்உடனடியாகத் தெரிவிக்குமாறு வலி.கிழக்குப்பிரதேசசபையின்தவிசாளர்தி.நிரோஷ்கேட்டுள்ளார்.

இதற்கான இணைப்பு வேலைகள் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளன என்றும்அவர்தெரிவித்தார்.

ஒளிராமல் இருக்கும் வீதி விளக்குகளைத் திருத்தி அமைத்து ஒளிரச் செய்யும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வலி.கிழக்குப் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் வாழுமிடம். சமகாலச் சமூகச் சூழலில் வீதி விளக்கு இணைப்புச் செய்ய வேண்டியது மிக அவசியம். இந்த வகையிலேயே பிரதேச சபை உறுப்பினர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா என்ற வகையில் 38 உறுப்பினர்களுக்கு 38இலட்சம் ரூபா வீதி விளக்கு இணைப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய நியமங்களுக்கு அமைய வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இந்தவகையில் வட்டாரநிலையில்பொருத்தமான அளவு வீதி விளக்குகளை இணைப்புச் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

வீதிவிளக்குகளைப்பொருத்தும் விடயத்தில் இலங்கை மின்சார சபை ஒத்துழைப்பு வழங்குவதில் தடங்கல் நிலை காணப்படுகின்றது.

ஒளிராத வீதி மின் விளக்குகளை உடனடியாகத்திருத்தி அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமது பகுதியில் ஒளிராமல் இருக்கும் வீதி விளக்குத் தொடர்பான விவரங்களைப்பொது மக்கள் தமது வட்டார உறுப்பினர்களிடம் அல்லது பிரதேச உப அலுவலகங்களில் அல்லதுதலைமைப்பணியகத்தில் எழுத்து மூலம் தெரியப்படுத்தலாம். அவை உடனடியாக திருத்தி அமைக்கப்படும் - என்றார். (4.11)

# உந்துருளியில் சென்றவர் மோதிவிட்டு ஓட்டம்

சாவகச்சேரி, ஒக. 21

வீதியில்ஈருருளியில்சென்ற குடும்பத்தலைவரை அந்த வழியே சென்ற உந்துருளியில் சென்றவர் மோதிவிட்டு தப்பியோடியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. பாதிப்புக்குள்ளானகுடும்பத்தலைவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் சங்கத்தானை முதன்மை வீதியில் நேற்றுமுன்தினமிரவுஇடம்பெற்றுள்ளது.

மீசாலை தெற்கைச் சேர்ந்த இராசதுரை ஜெயகாந்தன் (வயது 57) என்பவரே காயமடைந்து சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர்போதனாவுக்கு மாற்றப்பட்டார்.

மீசாலையில் நடைபெற்ற மற்றொருவீதிவிபத்தில்அளவெட்டி மேற்கைச் சேர்ந்த கந்தசாமிரவீந்திரன் (வயது 47 ) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (4.9)

# வீதியில்குப்பைவீசியோருக்கு நீதிமன்று 5,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஒக. 21

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் குப்பை கொட்டினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 குடியிருப்பாளர்களுக்கு நேற்றுத் தலா 5 ஆயிரம்ரூபாதண்டம்விதித்ததுயாழ்ப்பாணம்நீதிவான் நீதின்று.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நகர வீதி ஓரங்களில் குப்பை கொட்டினர் என்ற குற்றச்சாட்டில்5குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றில்தனித்தனியேவழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தன. குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குக் குற்றப்பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. அவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர்.

அவர்களை எச்சரித்த நீதிவான் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

அதே வேளை, டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக குடியிருப்பை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் குடியிருப்பாளர்கள் 3 பேருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவை நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தைஏற்றுக்கொண்டனர். அவர்களை எச்சரித்த நீதிவான் தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தார். (ந37,114)

# வீதியில் நின்ற கும்பல் தாக்கி மூவர் காயம்

தென்மராட்சி, ஒக. 21

வீதியில்நின்ற கும்பல்தாக்கியதில்ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயங்களுக்குஉள்ளானார்கள்.

சம்பவம் வரணி குடமியனில்நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலையத்தில் பொருள்கள் வாங்கிவந்த தன்னைவீட்டுக்கு அருகில் வழிமறித்த கும்பல் தாக்கினர். சத்தம்கேட்டு எனது தாயாரும் மாமாவும் ஓடி வந்தனர். அவர்களையும் அந்தக் கும்பல் தாக்கியது என்று தாக்குதலுக்கு உள்ளான இளைஞன்தெரிவித்தார்.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (4.9)

# மின்சாரத்தில் தகனம் செய்யும் மயானமாக பிப்பிலி மாறவுள்ளது

யாழ்ப்பாணம், ஒக. 21

மானிப்பாய்ப்பட்டினத்தில்அமைந்துள்ளபிப்பிலி மயானம் மக்களின் நலன்கருதி மின்சாரத்தால்தகனம்செய்யும்மயானமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை தவிசாளர் அ.ஜெபநேசன் எடுத்துள்ளார்.

இதற்கான நிதியுதவியை வழங்குமாறு தவிசாளர்வடக்குமாகாணமுதலமைச்சரைக் கோரியுள்ளார். இதற்குப் பச்சைக்கொடி காட்டியுள்ள முதலமைச்சர் திட்டத்துக்கான சாத்தியக்கூற்றுஅறிக்கையைப்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் பெற்று அனுப்பிவைக்குமாறு கோரியுள்ளார்.

மின்சாரத்தகனநிலையம்அமைக்கவேண்டிய அவசியம்குறித்துதவிசாளர் முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வலிகாமம்தென்மேற்குப்பிரதேசசபைக்குச் சொந்தமான பிப்பிலி மயானம் குடிமனைகளின்நடுவேஅமைந்துள்ளதுடன்பெரும்பாலான மக்களின் பாவனைக்கு உட்பட்ட மயானமாகவும் காணப்படுகின்றது.

தற்போதுஎமதுசபைக்குட்பட்ட மயானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. பிப்பிலி மயானம் எமது சபைக்குட்பட்ட பாரம்பரிய மயானம் என்பதுடன் பெரும்பகுதி மக்களின்பாவனைக்குட்பட்டதாகவும்காணப்படுகிறது. இந்தமயான அபிவிருத்தியில் சபை கூடிய கவனம் எடுத்துவருகின்றது.

இந்தமயானத்தைச் சூழ குடிமனைகள் அடர்த்தியாகக்காணப்படுகின்றன. மயானத்தில் இயற்கையாகத் தகனம் செய்வதைத் தவிர்த்து மின்சாரம் மூலமாக அல்லது எரிவாயு மூலமாகத் தகனம் செய்யவேண்டிய தேவை உள்ளது. பிரதேச மக்களின் வேண்டுகோளும் இதுவாகவே அமைந்துள்ளது. இருப்பினும்சபையின்நிதிவளம்போதாமை காரணமாக இந்த மக்களின் அவசிய கோரிக்கையை சபையால் நிறைவேற்றமுடியாதுள்ளது.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி பிப்பிலிமயானத்துக்குமின்சாரம்மூலம்அல்லது எரிவாயுதகன நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியுள்ளார். அதற்கே சாதகமான பதில் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(4.115)



## சிலம்பாட்டம் பயிற்சிப்பட்டறை

வவுனியா ,ஓக 21
பசுமைக்கான புரட்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் தமிழரின் தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பாட்டம் பயிற்சிப் பட்டறை மடுக்குளம் சிறி முத்துமாரியம்மன் ஆலய விளையாட்டுத்திடலில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

தமிழரின் பாரம்பரியம் மீட்போம். எனும் தொனிப்பொருளில் பசுமைக்கான புரட்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ந.வினோதனால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வுக்கு இலங்கை சிலம்புச் சம்மேளனத்தின் செயலர் கே.ஆர் .திவாகரன் ஆசிரியர் பயிற்றுவிப்பாளராகப் பங்கு கொண்டிருந்ததுடன். 40 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைக் கற்றுகொண்டனர். பயிற்சியின் நிறைவில் சான்றிதழும் வழங்கிவைக்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வுக்கு ஜேர்மன் நம்பிக்கையொளி அமைப்பு. தமிழ் விருட்சத்தை சேர்ந்த கண்ணன். மாணிக்கம் ஜெகன், வழக்கறிஞர் நாகேந்திரன் ஆகியோர் நிதி அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (110)



## பளை பொலிஸாரின் அதிரடியான நடவடிக்கை மண் அகழ்ந்த டிப்பர்களும் சாரதிகளும் கைது

கிளிநொச்சி, ஓக . 21
பளை பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 6 டிப்பர் வாகனம் மற்றும் 2 உழவியந்திரங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக பளைபொலிஸ்நிலையதகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப்பொலிஸ்பிரிவுக்கு உட்பட்டபகுதியில் மணல் அகழ்வு அதிகரித்துள்ளதாகவும் , அதற்காக சிறப்பு அதிரடிப்படையினரின், சேவைக்கு மக்கள் அழைப்பு விடுத்திருந்த நிலையில் நேற்று மற்றும் நேற்று முன்தினமும் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நிலைய பொறுப்பதிகாரியின் வழிநடத்தலின் கீழ் பொலிஸ் குழு அமைக்கப்பட்டுச் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தர்மக்கேணி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் வாகனம் மற்றும் ஒரு உழவியந்திரம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும். அதேபோல் முகமாலைப் பகுதியில் இரு டிப்பர் வாகனங்களும். அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறிய இரு டிப்பர் வாகனங்கள் எழுதுமட்டுவாள் பகுதியிலும், தம்பகாமம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய உழவியந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டு. பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். அத்தோடு வரும் 5 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துவ தற்கான நடவடிகைக எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக அதிரடி நடவடிக்கையாக மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் எனப் பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)



### அரசதலைவர், தலைமை அமைச்சர் புகைப்படங்கள்

# மன்னார் நகரசபையில் உறுப்பினர்கள் சலசலப்பு

**மன்னார் ,ஓக 21**
**இந்த நாட்டின் அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரது புகைப்படங்கள் மன்னார் நகர சபையின் சபா மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை, மன்னார் நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் முன் வைத்த நிலையில் சபை அமர்வில் சற்றுச் சலசலப்பு ஏற்பட்டிருந்தது.**

மன்னார் நகர சபையின் 6 ஆவது அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை காலை10.30மணியளவில்மன்னார் நகரசபையின்தலைவர்ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில்நகரசபையின்சபாமண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் நகர சபை உறுப்பினர்என்.நகுசீன் பிரேரணைகளைமுன்வைத்தபின்உரையாற்றினார். இதன் போதே சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டது. நகர சபை உறுப்பினர் என்.நகுசீன் பிரேரணையை முன் வைத்து உரையாற்றுகையில் அனைத்து உள்ளூராட்சி மன்ற மண்டபங்களிலும் இந்த நாட்டின் அரசதலைவர் ,தலைமை அமைச்சர் உள்ளிட்டஅரசியல்தலைவர்களின்புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மன்னார் நகர சபையின் சபா மண்டபத்திலும் அவர்களின் புகைப்படங்கள்காட்சிப்படுத்தப்படவேண்டும். முன்னாள்நகரபிதாவின்புகைப்படம் இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கு நாங்கள் எந்த வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை . ஒரு நாட்டின் அரசதலைவர் .தலைமை அமைச்சர்.வடக்குமுதலமைச்சர்ஆகியோரது புகைப்படங்கள் இங்கே காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

யாராகஇருந்தாலும்அவர்களுக்கான மதிப்பைவழங்கவேண்டும்எனநகர சபை உறுப்பினர் என்.நகுசீன் தெரிவித்தார்.

இதற்குப் பதில் வழங்கிய நகர முதல்வர் உள்ளூராட்சி அமைச்சு வடமா



காண சபைக்கள் இருக்கின்றது.

எனவே முதலாவதாக முதலமைச்சரின் புகைப்படமே காட்சிப்படுத்தப்பட வேண்டும். எனினும் அதற்கு எமக்கு உடன்பாடில்லை. முதலாவது நகர பிதா என்ற வகையில் அவருடைய புகைப்படம் இங்கே வைக்க வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

தொடர்ந்து வருகின்றநகர முதல்வர்களுடைய புகைப்படங்களும் இங்கே வைக்கப்படும்.இதுசபைக்கானமரபு. எனவே நகர சபையின் தலைவர் என்ற வகையில் இங்கே அரசதலைவர் .தலைமை அமைச்சர் ஆகியோரது புகைப்படங்களை வைப்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றார்.

முதலில்வடமாகாணமுதலமைச்சரை முன்னுரிமைப்படுத்தவில்லை. ஆனால் அரசதலைவர் ,தலைமை அமைச்சர் ஆகியோரது புகைப்படங்களை இங்கே காட்சிப்படுத்த பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போதைக்கு எவருடைய புகைப்படங்களையும் இங்கே வைப்பதற்கு அனுமதி இல்லை. சபையின் தலைவர் என்ற வகையில் இதனை எதிர்க்கின்றேன்.எனத் தெரிவித்தார்.

இதன் போது சபையின் உறுப்பினர்கள்சிலர்புகைப்படங்கள்காட்சிப்படுத்துவதற்குதமதுஎதிர்ப்பைத்தெரிவித்தனர். இதன் போது அங்கு உரையாற்றிய நகர சபை உறுப்பினர் மைக்கல் கொலின்:

அரசதிணைக்களங்களில்முக்கியமாக வைக்கப்படவேண்டியஅரசதலைவர் .தலைமைஅமைச்சர்புகைப்படங்கள் எங்கேயோஒருமூலையில்வைக்கப்பட்டுள்ளது.எனவே கட்டாயம் புகைப்படம்வைக்கவேண்டும்என்றதேவை இல்லை.நாம் மக்களுக்குச் சேவை செய்யவே வந்துள்ளோம்.

இங்கே காட்சிப்படுத்தப்படுகின்ற புகைப்படங்கள் மக்களுக்குச் சேவை செய்யப் போவதில்லை.இங்குள்ள 16 உறுப்பினர்கள்மாத்திரமேஇங்குள்ள புகைப்படங்களை பார்க்கப்போகின்றோம்.வேறு யாரும் பார்க்கப்போவதில்லை. எனவே புகைப்படங்கள் காட்சிப்படுத்துவது தொடர்பில் சபையில் பிரச்சினைகளை கொண்டு வராமல் எமது வேலையை நாங்கள் சரியாகச் செய்வோம்.இது என்னுடைய தனிப்பட்ட கருத்து என அவர் தெரிவித்தார்.

இதன்போதுசபையில்சிறிதுசலசலப்பு இடம்பெற்றதோடு.சபையில்தொடர்ந்து பல்வேறு விடையங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு.உறுப்பினர்களின்பிரேரணைகளும்முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (56)

## காட்டு விநாயகர் சி.க. கூட்டுறவு சங்கத்தின் பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு .ஓக 21
முள்ளியவளையில் அமைந்துள்ள காட்டு விநாயகர் சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 28ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் அதன் தலைவர் குணசிங்கம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் சிக்கன கடன் உதவிக் கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலர் யோசப் ஸ்ராலின் , சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.தயாளன்,பாண்டியன்குளம் துணுக்காய் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் ஞா.றொபின் தயாளசீலன் திருமுகபுரம் சி.க.கூ சங்கத் தலைவர் ந.சிவதாஸ், செம்மலை உதயதாரகை சி.க.கூ சங்கத் தலைவர் செ.இரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு.பரிசில்களையும் வழங்கிவைத்துள்ளார்கள். (ரி3)

## முன்பள்ளிக் கட்டடங்கள் திறந்துவைப்பு

முல்லைத்தீவு ,ஓக 21
சைல்ட்பன்ட் சிறி லங்காவால். முல்லைத்தீவில் இரண்டு புதியஆரம்பப் பிள்ளைப் பராயவிருத்தி மையங்கள் ஒகஸ்ட் 14 மற்றும்15 ஆம் திகதிகளில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதியமையங்கள் சைல்ட்பன்ட் கொரியாவின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியினைமுன்னிட்டு இடம்பெற்றதுடன் முன்பள்ளிக்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கும் நிதியுதவி வழங்கி வருகின்றது.



இந்த இரண்டுகட்டடங்களைதிறந்து வைத்த சைல்ட்பன்ட் கொரியாவின் உப தலைவர் வோன் மன் யுங் ,கட்டடங்களைத் திறந்துவைத்து உரையாற்றுகையில்,'தாம் இந்தமண்ணில் நின்று தமது 70 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூருவதையிட்டு மகிழ்வதாகவும். மிகநீண்டகாலமாக இலங்கையில் அபிவிருத்தித்திட்டங்களில் ஈடுபட்டுவருவதாகவும், அதன் இன்னோர் அங்கமாகமுல்லைத்தீவில் 16 முன்பள்ளிகள் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவும் தெரிவித்தார். போருக்கு பின்னர் சமுதாயத்தில் உளவியல் ரீதியான விளைவினைக் கருத்திற்கொள்கையில் கருத்திட்டமானது பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும் உளச் சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவினையும் கொண்டுள்ளது.

அத்துடன் உணர்வுரீதியானபிரச்சினைகளைக் கொண்டுள்ள அல்லது அங்கவீனத்தினைக் கொண்டுள்ள பிள்ளைகளை அடையாளம் காண்பதை இயலுமாக்குவதற்கு ஆசிரியர்களுக்கானபயிற்சியினையும் வளங்கியுள்ளது.

ஏற்கனவே இருக்கின்றமுன்பள்ளிக் கட்டடங்களில் ஒன்று பெரியளவிலாக திருத்தவேலையும், 10 சிறிய அளவிலானதிருத்தவேலைகளையும் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது - என்றார்.



## மகாவிஸ்ணு வி. கழகத்துக்கு புதிய விளையாட்டு மைதானம் திறப்பு

வவுனியா, ஓக 20
வவுனியா, கோவில்ப்புதுக்குளம் மகாவிஸ்ணு விளையாட்டுகழகத்தினரின்வேண்டுகோளுக்கு அமைவாக, நகரசபையின் முன்னாள் உபநகர பிதாவும்நகரசபைஉறுப்பினருமானக. சந்திரகுலசிங்கத்தின் முயற்சியால் பொது அமைப்புக்களின்அனுசரணையுடனும். அப்பகுதியில்உள்ள இரண்டு ஏக்கர்காணி பெறப்பட்டு சீரமைப்புச் செய்யப்பட்டு நேற்று முன்தினம் வைபரீதியாக கழகத்திற்கு வழங்கப்பட்டதுடன் விளையாட்டு நிகழ்வுகளும் ஆரம்பித்துவைக்கபட்டன.

# வாக்காளர் விவரங்களை சரி பார்த்துக்கொள்ளுங்கள்

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

**முல்லைத்தீவு ,ஓக 21**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்களார்கள் தங்கள் பதிவுகளைச் சரி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் க.காந்தீபன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல்திணைக்களத்தினால் வாக்காளர்கள் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவைமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
2017ஆம்ஆண்டுநடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது 72 ஆயிரத்து 961 பேர்வாக்களிப்புநிலையங்கள் ஊடாகவாக்களித்துள்ளனர்.
இந்த நிலையில் புதிய வாக்காளர்கள் பலர் வாக்காளர் இடாப்பில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
அதன்படி புதிய வாக்காளர்களின் புதிய விவரங்கள் 136 கிராமஅலுவலர்பிரிவுகளிலும் வைக்கப்பட்டுள்ளதுடன், பிரதேச செயலகங்கள் ,பிரதேச சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் திணைக்களத்திலும் வைக்கப்பட்டுள்ளது.
செப்ரெம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் இதனைப் பார்வையிட்டு இதில் வாக்காளர்களின் பெயர்கள்மற்றும்மாற்றங்கள் செய்யவேண்டுமாக இருந்தால் மாற்றம் செய்து கொள்ளலாம் என்றும் முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் க. காந்தீபன் தெரிவித்துள்ளார். (ரி3)



## வீதியில் முறிந்த மரங்கள் போக்குவரத்து பாதிப்பு

வவுனியா, ஓக 21
செட்டிகுளத்தையும்வவுனியாவையும் இணைக்கும் கிளை வீதியான துடரிக்குளம் வீதியில் மரங்கள் முறிந்துவீழ்ந்துகிடப்பதால் போக்குவரத்துக்குப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
கடும் காற்றுடன் கூடிய காலநிலைநிலவுவதன்காரணமாகவே மரங்கள் முறிந்து வீழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (222)



## கற்றல் கருவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக. 21
முல்லைத்தீவு - மாமூலை, மகாவிஸ்ணு அறநெறிப் பாடசாலைச் சிறார்களுக்குப் புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் கந்தப் பிள்ளை திலீபனின் நிதி உதவியில் நேற்று முன்தினம்கற்றல்கருவிகள் வழங்கிவைக்கப் பட்டுள்ளது.
இந்த நிகழ்வில்வடமாகாணசபைஉறுப்பினர் துரைராசா ரவிகரன்மற்றும்கரைதுறைப்பற்று பிரதேசசபைஉறுப்பினர் சின்னராசா-லோகேசுவரன், மாமூலை மகாவிஸ்ணு கோவில் பூசகர் கிருபாகர குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (113)



## உலர்உணவுப்பொதிகள்வழங்கல்


மன்னார், ஓக 21
மன்னார் மாவட்டத்தின் கல்விக்கான தனது சேவையினை ஆற்றிவரும்துரையம்மாஅன்பகத்தின்10 ஆம்ஆண்டுநிறைவைமுன்னிட்டு மாந்தை மேற்குப்பிரதேசச்செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 16 குடும்பங்களுக்குப் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.
மாந்தை மேற்குப் பிரதேசச் செயலர் பிரிவில் உள்ள கள்ளியடி கத்தாளம்பிட்டிக்கிராமத்தில்தெரிவுசெய்யப்பட்டபயனாளிமாணவர்களின் 16 குடும்பங்களுக்குப் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (56)

## சிறுவர் பூங்காவுக்கு அடிக்கல் நடப்பட்டது

பூநகரி, ஓக 21
முழங்காவில் விநாயகர் இளைஞர் கழகத்தினரின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் .விளையாட்டுக்கழகத்தின் காணியில் ஒரு. சிறுவர் பூங்காவை அமைப்பதற்காக கழகத்தால் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டது. அந்த இடத்தில் ஆரம்ப அடிக்கல் நடும் நிகழ்வுநேற்று முன்தினம் மாலை 3. 30 மணியளவில் இடம் பெற்றது. பூங்காவுக்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், சிறப்பு விருந்தினராகப் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு. சுரேன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
பூநகரிப் பிரதேசசபை உப தவிசாளர் சி. சிறிரஞ்சன், முழங்காவில் கிராம அலுவலர் பா. நகுலேஸ்வரன், முழங்காவில் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் யோ. தனராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (204)



# கடல்சார் விளையாட்டுப் போட்டிகள்



யாழ்ப்பாணம், ஓக. 21
சுப்பர்மடம்கடலோடிகள்ஐக்கியசமூக சேவைகள் அமைப்பால் கடந்த சனிக் கிழமை கடல்சார் விளையாட்டுக்கள் நடாத்தப்பட்டது.
சுப்பர்மடம்கடலோடிகள்ஐக்கியசமூக சேவைகள் அமைப்பின் தலைவர் இளையதம்பி குமாரசுவாமி தலைமையில்நடைபெற்றஇந்தபோட்டிகள் பருத்தித்துறை கடற் பகுதிகளில் இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.
படகோட்டம் , நீச்சல் ஆகிய கடல்சார் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.
பல்வேறுபட்ட கடற்றொழிலாளர் சங்கங்களைச் சார்ந்த போட்டியாளர்கள் இந்தவிளையாட்டுக்களில்பங்குபற்றினர். முதன்மைவிருந்தினராககலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர் கொடி அசைத்து போட்டிகள் அனைத்தையும் தொடக்கிவைத்தார்.
படகோட்டப் போட்டிகள் முதலாவதாக இடம்பெற்றன. இதில் 25 பரி வலு கொண்ட இயந்திரப் படகுகளுக்கான மற்றும் 9. 9 பரி வலு கொண்ட இயந்திரப்படகுகளுக்கான போட்டிகள் வெவ்வேறாக நடைபெற்றது.
25பரிவலுகொண்ட இயந்திரப்படகுகளுக்கான போட்டிகள் பருத்தித்துறையில் இருந்து தொடங்கி நாகர்கோவில் வரையில் நடைபெற்றது.
இந்த போட்டியில் இன்பார்சிட்டி கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த வி. சிவசங்கரன் முதலாமிடத்தையும், சுப்பர்மடம் கடற்றொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த பு. மோகனராசா இரண்டாம் இடத்தையும், சுப்பர் மடம் கடற்றொழிலாளர்சங்கத்தைச்சேரந்த த. கணேசலிங்கம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.
தொடர்ந்து 9. 9 பரிவலுகொண்டஇயந்திரப்படகுகளுக்கானபோட்டிகள் இடம் பெற்றன.
இந்த போட்டி பருத்தித்துல்றயில் தொடங்கி வல்வெட்டித்துறை வரையில் இடம்பெற்றது.
இந்த போட்டியில் நாகர்கோவில் கடற்றொழில் சங்கத்தை சேர்ந்த த. அருந்தவராசா முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தை பலாலி கடற்றொழில் சங்கத்தைச்சேர்ந்த அ. அகிலன் , இன்பர்சிட்டிகடற்றொழில்சங்கத்தைச்சேர்ந்த இ. விசுவலிங்கம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.
படகுப் போட்டியை அடுத்து நீச்சல் போட்டிகளும் நடைபெற்று வெற்றியாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.
மேலும் இந்த போட்டிகளைத் தொடர்ந்து 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகுடத்தனைப்பகுதியில் இருந்து சுப்பர் மடம் வரையிலரான சுமார் 10 கிலோ மீற்றர் வீதியோட்டம் (மரதன்) நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசில் நேற்று முன் தினம் வழங்கி வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் சுப்பர் மடம் கடலோடிகள் ஐக்கிய சமூக சேவைகள் அமைப்பின்செயளர்செல்லத்துரைநற்குணம், பொருளாளர் வேலும்மயிலும் விசுவலிங்கம் ஆகியோரோடு கடற்றொழிலாளர்கள், பார்வையாளர்கள் என பலரும்கலந்திருந்துகொண்டனர். (113)

## ஈருருளிகள் வழங்கல்

கிளிநொச்சி, ஓக. 20
கிளிநொச்சிமாவட்டத்தைசேர்ந்தவறியமாணவர்களுக்கும், தூரப் பிரதேசங்களில் இருந்து பாடசாலைக்குத் தினமும் சென்று வருவதற்கு பலத்த நெருக்கடிகளைச் சந்திக்கும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை இலகுவாக்கும் நோக்கோடு, கடந்த 18 ஆம் திகதி , கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் , முன்னாள் வடக்கு மாகாண சபையினுடைய கல்வி அமைச்சரும், தற்போதைய வட மாகாண சபையின் உறுப்பினருமான த. குருகுலராஜாவினுடைய . மாகாண சபைகுறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்துமாணவர்களுக்கான ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டது.
26 மாணவர்களுக்கான ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)



## தமிழரின் பூர்விகத்தை மாற்றவே வெடுக்குநாறியில் வழிபடத்தடை

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.விசனம்

வவுனியா, ஓக. 21
தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்தவர்கள் என்ற நிலையை மாற்றுவதற்குரிய செயற்பாடாகவே வெடுக்குநாறிமலைச் சிவன் கோவிலில் வழிபடத் தடை விதிக்கப்பட்டதைப் பார்க்கவேண்டியுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குபதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெடுங்கேணி வெடுக்குநாறிமலையைத் தொல்பொருள்திணைக்களம்சொந்தம்கொண்டாடுகின்றது. அங்குமட்டும்இல்லைவடக்குகிழக்குப் பகுதிகள் எங்கும் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் போன்றனதிட்டமிட்டுஎமது மக்களுடையநிலங்களை அபகரிக்கும்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக அரசதலைவரிடம் பலமுறை முறைப்பாடுசெய்திருக்கின்றோம். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் தீர்மானங்கள் எடுத்துள்ளோம். ஒன்றும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. சில இடங்களில் நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் நட்டிருந்த கற்களை அகற்றியிருக்கிறார்கள். நெடுங்கேணியில்நடைபெற்றசெயற்பாடுஅத்துமீறியதகாவே உள்ளது. மன்னாரிலும் ஒரு விளையாட்டு மைதானம் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. ஒரு பானையும், செங்கல்லையும் கண்டுவிட்டே இவ்வாறுஅவர்கள்மைதானத்தைஅபகரித்துள்ளார்கள். இதன்மூலமாகஎமதுமக்களின்வளங்களைச் சூறையாடும் நிலை காணப்படுகிறது.

தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்தவர்கள் என்ற நிலமையை மாற்றுவதற்குரிய செயற்பாடே இவை. மக்களின் சொந்தக்காணிகள், குளங்களுக்குள்ளேயே வனவளத் திணைக்களம் எல்லைபோடுகின்றது. தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாது.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம் பன்னாடுகளுக்கும்தெரியப்படுத்தி இருக்கிறோம். எதற்கும் ஒரு முற்றுப்புள்ளி இருக்கிறது. இறுதி என்ற நிலை இருக்கிறது - என்றார். (4.110)

# தொல்பொருள் திணைக்களம் வெடுக்குநாறியைப் பறிக்கிறது

### தடுக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று அந்தணர் ஒன்றியம் அழைப்பு



**வவுனியா, ஓக. 21**
**வெடுக்குநாறி மலையைச் சிங்கள, பௌத்தமயமாக்கும் திட்டத்தின் அங்கமாகவே அந்தப்பிரதேசத்தைத் தொல்லியல் திணைக்களம் மக்களிடமிருந்து பறித்து தங்கள் திணைக்களத்தின் பகுதி எனக் கூறி அங்கு செல்லத் தடை செய்துள்ளது. அதைக் காக்க வேண்டிய கடமை எமக்குண்டு. அனைவரும்தங்கள்உணர்வுகளைஇதில்வெளிப்படுத்தி எமது நிலங்களை நாங்கள் காப்பதற்கு முன்வர வேண்டும்.**

இவ்வாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

வன்னிப் பெரும் இராசதானியை ஆட்சி செய்தவன் மாவீரன் பண்டார வன்னியன். இதுஅனைவருக்கும்தெரிந்தஒன்று. அப்படிப்பட்ட வீரம் செறிந்த போரியல் வரலாறுகளைக் கொண்டது வன்னி இராச்சியம். வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குபிரதேசசெயலகபிரிவுக்குஉட்பட்ட ஒலுமடுக்கிராமப்பகுதியில்அந்தஒலுமடுப் பிரதேசத்தின் நைநாமடுக் காட்டை ஊடறுத்து உட்செல்லும் பகுதியில் உள்ளது இந்த வெடுக்குநாறிமலை.

இந்த மலைப்பகுதி அமைந்துள்ள பகுதி தமிழர்களின் தொன்மையான பூமி. வ்ரலாற்றுக்காலம் தொடக்கம் தம் இருப்புகளை இங்கே நிலைநாட்டியவர்கள் தமிழர்கள். அதைத் தற்போது சிங்கள பௌத்தமயப்படுத்தும் திட்டத்தின் அங்கமாக அந்தப் பிரதேசத்தைத் தொல்லியல் திணைக்களம் மக்களிடமிருந்து பறித்து தங்கள் திணைக்களத்தின் பகுதி எனக்கூறித்தடைசெய்துள்ளது. அதாவது அந்தப் பகுதி தமிழர்களுக்கு உரியது என்பதை நிராகரிக்கும்நடவடிக்கையைத்தொடங்கியுள்ளது. ஒவ்வொரு அரசுகளும் மக்கள் மீதுதமதுமத, இன, இருப்புகளைத்திணிப்பது வரலாற்றுக் காலம் தொடக்கம் நாம் கண்டவையே. இலங்கை சுதந்திரமடைந்து60ஆண்டுகள்கடந்தநிலையிலும் போர் முடிவுற்று 9 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையிலும் இவ்வளவு காலமாக கண்ணுக்குத் தெரியாத இந்த நிலம் இப்போது இவர்களின்கண்ணைஉறுத்துவதுஏன்? மலையுள்ள இடமும் அரசுள்ள நிலமும் பௌத்தத்துக்கு உரியது என்று தவறாக எண்ணிவிட்டார்கள். அவர்கள் அந்த மாயையில் இருந்து மீண்டுவரச் சொல்லுங்கள். இந்த நாடு இலங்கை என்று அறிய முன்னர் ஈழம் என்று அறியப்பட்டிருக்கிறது. இலங்கையில் தேவநம்பிய திஸ்ஸமன்னன்காலத்திலேதான்பௌத்த மதம் வருகின்றது.

அதனை இலங்கையில் ஏற்படுத்தியவர்கள் மகிந்தரும் சங்கமித்தையும். அது கி.மு 247 ஆம் ஆண்டில் நடைபெற்றது: அதுவரைக்கும் இங்கு வாழ்ந்த அனைவரும் இந்துக்களே. இந்துப் பண்பாட்டுடனேயே வாழ்ந்தனர்.

அதுவரை பௌத்தமதம் என்றால் அது என்னவென யாருக்கும்தெரியாது. வேறு மதங்களும்கிடையாது. அதுபோலவிஜயனின் வருகையின் பின்னரே கி.மு 283 காலப்பகுதியில் சிங்கள மக்கள் தங்கள் இன இருப்பை இங்கே நிலை நிறுத்த முற்பட்டனர். விஜயன்அவர்களின்முன்னோர் அல்லஎன்றுபலஇடங்களில்கூறப்படுகிறது. அவர்களின் மொழி உலக மொழிகளில் முதல்மொழி அல்லஎன்பதும்வரலாற்றுச் சான்று. தமிழ், சமஸ்கிருதம், பாளி, ஆகியவற்றின் கலப்பே இந்தச் சிங்கள மொழி.

தமிழர்களின்இருப்புஇன்றுபலவழிகளில் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் எதேச்சைத்தனமாகவும்கையகப்படுத்தப்பட்டும் வருகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் அனைத்தையும் இழந்த சமூகமாக, இனமாக மாறிவிடும். இவை காலத்தின் தேவை. எம் இருப்புகளை நாமே காப்பாற்ற வேண்டிய காலகட்டத்தில் இன்று இருக்கின்றோம். வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்துக்கும் எமது அந்தணர் ஒன்றியத்துக்கும் நெருங்கிய உறவுண்டு, தொடர்புண்டு.

எனவே அதைக்காக்கவேண்டியகடமை எமக்குண்டு. அனவரும் தங்கள் உணர்வுகளை இதில் வெளிப்படுத்தி எமது நிலங்களைநாங்கள்காப்பதற்குமுன்வரவேண்டும் - என்றுள்ளது. (4.110)

## மோட்டாரில் தண்ணீர் பெறும் கிணறுகளுக்கு மீன்குஞ்சுகள்



### தேவையானவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்து

தென்மராட்சி ஓக. 21
தென்மராட்சிப் பிரதேசத்தில் மின்மோட்டர் மூலமாகத் தண்ணீர் பெறும் கிணறுகளில் டெங்கு நுளம்பு பெருகுவதால், அத்தகைய கிணறுகளில் மீன்குஞ்சுகளைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

மின்மோட்டர்கள் பாவித்துத் தண்ணீர் பெறும்கிணறுகளில்டெங்குநுளம்புஉற்பத்தியாகாமல் தடுக்கக்கூடிய மீன்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தேவையானோர் அவற்றை சாவகச்சேரி சுகாதார மருத்துவஅதிகாரிபணியகத்தில்பெறலாம். சனிக்கிழமைகளில் மீன்குஞ்சு விடவுள்ள கிணற்றுத் தண்ணீரைப் போத்தலில் அடைத்துக்கொண்டு வருமாறும் அறிவித்துள்ளனர்.

கடந்தவாரம் மீசாலையில் நடத்தப்பட்ட டெங்கு ஒழிப்புப்பரிசோதனையின்போது அங்குள்ள கிணறுகளில் தண்ணீர் பெற்று பூச்சியியல் உதவியாளர்கள் ஆய்வுகள் நடத்தியிருந்தனர். அதன்போதே மின் மோட்டர்கள் பயன்படுத்தும் கிணறுகளில் டெங்குநுளம்புஉற்பத்தியாகின்றமைகண்டறியப்பட்டது.

இதனையடுத்து மின்மோட்டர்கள் பயன்படுத்தும் கிணறுகளில் தினமும் ஒரு தடவையாவது வாளியால் தண்ணீர் அள்ளுமாறு கட்டாய அறிவுறுத்தலாக பூச்சியியல் நிபுணர்கள் வலியுறுத்திக் கூறியிருந்தனர்.

அப்படிச்செய்வதன் மூலமாகத் தண்ணீர் ஓரிடத்தில் நிற்காது அசைந்து, மேலும்கீழும் எழுவதன் மூலமாக நுளம்புக் குடம்பிகள் ஏற்படாதவாறு தெடுக்கலாம் என்றும் பூச்சியியல் நிபுணர்கள் கூறியிருந்தனர். பிரதேசத்தில் குறிப்பாக வீட்டுக்காரர்களுக்கு நுளம்புஅச்சுறுத்தல்ஏற்படுவதைத்தடுக்க, நுளம்புபெருகுவதைத்தவிர்க்கஇந்தநடைமுறையைக்கட்டாயம்பின்பற்றவேண்டும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

சில குடியிருப்புகளில் கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாத குடும்ப அங்கத்தவர்கள் வசித்து வருகின்றனர்.

அவர்களின் நலன்கருதி மீன்குஞ்சுகள் கிணறுகளில்விடுவதற்குமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினர் மீன்குஞ்சுகளைக் கொள்வனவு செய்து தமது பணியகத்தில் உள்ளநீர்த்தொட்டியில்விட்டுள்ளனர். மீன் குஞ்சுகள்தேவைப்படுவோர்பணியகத்தில் நேரடியாக வந்து பெற்றுச் செல்லுமாறும் அறிவித்துள்ளனர்.

அவர்கள் மட்டுமன்றி, டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களாக இனம் காணப்படும்நீர்நிலைகளைப்பயன்படுத்துவோரும் அவற்றில் விடுவதற்குத் தேவையான மீன் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (4.9)



சாவகச்சேரியில் விரைவு அஞ்சல் சேவையை அஞ்சல் அதிபர் மற்றும் பணியாளர்கள் ஆரம்பித்து வைக்கின்றனர்.

## விரைவு அஞ்சல்சேவைகள் யாழில் நேற்று ஆரம்பம்

### 10 மணிக்கு முன்னர் அஞ்சல்களை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல்

தென்மராட்சி, ஓக. 21
யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான விரைவு அஞ்சல்சேவைகள்நேற்றுஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக இயன்றளவு அந்தந்த நாள்களிலேயே தபால்கள் விநியோகிக்கப்படவுள்ளன. அதனால்தினமும் முற்பகல்10 மணிக்கு முன்னர் அவசர தபால்களைதத்தமது பகுதிகளிலுள்ள அஞ்சல் பணியகங்களில் ஒப்படைக்குமாறு தபால் திணைக்களத்தினர் அறிவுறுத்துகின்றனர்.

இந்தச் சேவைகள் பருத்தித்துறை, அச்சுவேலி, காங்கேசன்துறை, வேலணை, சுழிபுரம், மானிப்பாய், சாவகச்சேரிமற்றும் யாழ்ப்பாணம் முதன்மை அஞ்சல் பணியகங்களில்நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த எட்டு அஞ்சல் பணியகங்களுக்குக் கடந்தமாதம்விரைவுஅஞ்சல்சேவையை நடத்த உந்துருளிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்த அஞ்சல் பணியகங்களுக்கு, திட்டமிட்டபடி அறிவுறுத்தப்பட்ட அஞ்சல் பணியகங்களில் அஞ்சல்களைப் பெற்று அன்றன்றே விநியோகிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை தினமும்கொழும்பிலிருந்துயாழ்ப்பாணத்துக்குவாகனத்தில்அனுப்பப்படும்விரைவு அஞ்சல்களும் அன்றைய தினமே விநியோகிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இதுவரைகாலமும்அஞ்சல்பணியகங்களில் வழங்கப்படும் விரைவு அஞ்சல்கள் மறுநாளே விநியோகிக்கப்பட்டன. விரைவு அஞ்சல் மூலமாக அஞ்சல்கள் அன்றன்றே விநியோகிக்கப்பட வுள்ளன என்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (4,9)

# கடற்றொழிலில் புதிய உத்திகள் இல்லை அவற்றை 'சமுத்திர'வில் பயில வாருங்கள்

## வடமாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் கூறுகிறார்

வடமராட்சி, ஓக. 21

**எமது மீனவர்கள் பலருக்குக் கடலட்டை பிடிக்கத் தெரியாது. கடற்றொழிலில் எமதுமீனவர்கள்புதிய உத்திகளைக்கையாளவேண்டும். இதற்குத்தொழிற்பயிற்சி அவசியம். யாழ்ப்பாணத்தில் இயங்கும் சமுத்திர பல்கலைக்கழக வளாகத்தில் பயிற்சிகளை மேற்கொள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர். ஜெயசேகரம் அறிவுறுத்தியுள்ளார்.

வடமராட்சி ஐக்கிய கடலோடிகள் சங்கத்தின்முதலாம்ஆண்டுவிழாவும் பரிசளிப்பும் பருத்தித்துறை கடற்கரைமைதானத்தில்பருத்தித்துறைப்பிரதேசசபைஉறுப்பினர் த.சந்திரதாஸ்தலைமையில்நடைபெற்றது. அதில் மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம் கலந்துகொண்டுஉரையாற்றினார்.

அவர்தனதுஉரையில்தெரிவித்ததாவது:

எமது மீனவர்கள் பலருக்குக் கடலட்டை பிடிக்கத் தெரியாது. ஒரு சிலருக்குத்தான் தெரியும். அதனால் எமது கடலில் கடலட்டை பிடிக்க எம்மவர்கள் அனுமதி கோருவதுமிகக்குறைவு. இதனாலேயே வெளியூர் மீனவர்கள் இங்கு படையெடுக்கின்றனர்.

கடற்றொழில் பயிற்சிகளை வழங்க சமுத்திர பல்கலைக்கழகத்தின்ஒருபிரிவுயாழ்ப்பணத்தில் இயங்கிவருகிறது. அந்தப் பல்கலைக்கழகத்தில் மீன்பிடி தொடர்பாகப்புதியஉத்திகளுக்குப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடலுக்குள் சுழியோடுதல் உள்ளிட்ட 5 பயிற்சி நெறிகள் அங்கு இடம்பெற்றுவருகின்றன. இதற்குக் கல்வித்தகைமை பெரியளவில் தேவையில்லை. 7 ஆம் வகுப்பு படித்தால் போதுமானது. எமது இளைஞர்கள் இங்கு மீன்பிடித்தொழில்நவீனமுறைகளைத்கற்றுக் கொள்ள வேண்டும். இங்கு பயிற்சி பெற்றால் எமது கடற்பகுதியில் கடலட்டை பிடிக்கமுடியும். கடலோடிகள் அமைப்பில்மேலும் அங்கத்தவர்களை இணைத்துப் பலப்படுத்த வேண்டும். பலமாக இருந்தால்தான் எதையும்சாதிக்க இலகுவாக இருக்கும்.

வெளியூர் மீனவர்களின் அத்துமீறல்களைக்கண்டித்துநாயாற்றில் எமது மக்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டதனால்அவர்கள்வெளியேற்றப்பட்டார்கள். அதேபோல் வடமராட்சிக்கடலில்இடம்பெறும் அத்துமீறல்களுக்கு எதிராக நாம அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டால் அவர்களை வெளியேற்றமுடியும்.

பருத்தித்துறைதொடக்கம்காங்கேசன்துறை வரையான பாக்குநீரிணை கடற் பகுதியில் முருகைக் கற்களைச்சுனாமிசின்னாபின்னமாக்கிவிட்டது. கரையோரத்தில் பாதுகாப்புக்காக அந்தக் கற்களை வரிசையாக அடுக்கவேண்டும். இதற்குபெருமளவுநிதிவேண்டும். இதற்கான நிதியை வரவு- செலவுத்திட்டத்தில்பகுதிபகுதியாகஎன்றாலும் ஒதுக்கவேண்டும். அதற்காக நிதி அமைச்சக்கு இந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினரும்பருத்தித்துறைநகரசபையின் உறுப்பினருமான வின்சன் டி போல் உரையாற்றுகையில்,

### கடலோர மக்களிடம் ஒற்றுமையில்லை

கடலோர மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை. ஒன்று பட்டால் எதனையும் சாதிக்க முடியும். வடமராட்சிகடலில்சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த மீனவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தடைசெய்யப்பட்டகடற்றொழிலைகடலோர மக்கள் ஒற்றுமையாக நின்று தடுக்க முடியாதது ஏன்?

வெளியூர் மீனவர்கள் எமது கடலில் காலுன்ற எம்மில் சிலர் துணைபோகிறார்கள். அதைநாம் அனைவரும் ஒன்று திரண்டு எதிர்க்க வேண்டும். இதற்குத் தொண்டைமானாறு தொடக்கம் கேவில் வரையான வடமராட்சிக் கரையோரமீனவர்கள்ஒற்றுமையாகஓரணியில்செயற்படவேண்டும் - என்றார்.

எங்கள் மத்தியில் மனத்தாக்கங்கள், குற்றம் குறைகள் இல்லாமல் எல்லோரையும் ஒன்று சேர்த்து ஒற்றுமையோடுகடலோடிகள்சங்கம் பயணிக்கவேண்டும். இத்தகைய பயணத்தின் மூலமாகவே எதிர்காலத்தில் சிறப்பாகச்செயற்படமுடியும்என்றுயாழ்ப்பாணமாநகரமுதல்வர்இ.ஆர்னோல்ட்தெரிவித்தார்.

வடமராட்சி கடலோடிகள் சங்கம் ஓராண்டு ஆனாலும் பெரியோர்களாலேயே நடத்தப்படுகின்றது. இந்தஅமைப்பில்இளைஞர்அணியையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோரும் உரையாற்றினர். பெற்றோர்களுக்கு ஆர்னோலட் பரிசுகளை வழங்கினார். (4.173)

## யாழ்.முயற்சியாளர் 2018 – விற்பனையும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஓக. 21

யாழ்பாணம்மாவட்டத்தில்சிறுதொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும்நோக்கில் "யாழ்முயற்சியாளர் 2018" விற்பனையும் கண்காட்சியும் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என்று மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 24,25,26 ஆம் திகதிகளில் நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சிறுதொழில்முயற்சியாளர்களின் உற்பத்திபொருள்களைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றின் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இந்தக் கண்காட்சி வழிவகுக்கும்.

ஆகவே இந்தக் கண்காட்சியைப்பார்வையிட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு, உற்பத்திப்பொருள்களைக்குறைந்தவிலையில்கொள்வனவுசெய்யமுடியும்என்றும்தெரிவிக்கப்பட்டது. (4.7.147)

# வலி.கிழக்கு சபைக்கென்று தனியாக கீதம் உருவாக்கம்

அச்சுவேலி, ஓக. 21

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குத் தனியான கீதம் உருவாக்கப்பட்டு பிரதேசசபையோடுதொடர்பான நிகழ்வுகளில் இசைக்கப்படும்என்று வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கான கீதம் இயற்றுவது தொடர்பாகப் பகிரங்க விளம்பரம் செய்யப்பட்டுதுறைசார் கலைஞர்களிடம் இருந்து பெறப்படும் கீதங்களில் இருந்து குறித்த குழுவினால் கீதம் தெரிவு செய்யப்படும். அது பின்னர் பிரதேச சபையோடு தொடர்பான நிகழ்வுகளில்கீதம் இசைக்கப்படும்என்று மேலும் தெரிவித்தார். (4,11)


# தென்மராட்சியின் அபிவிருத்திக்கு இரண்டு எம்.பிக்கள் நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஓக. 21

தென்மராட்சிப்பிரதேசத்தில்அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளநாடாளுமன்றஉறுப்பினர்களான ஈ.சரவணபவன் 12 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், மா.சோ.சேனாதிராசா5லட்சத்து 25ஆயிரம்ரூபாவும்ஒதுக்கியுள்ளனர். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து இவற்றை ஒதுக்கியுள்ளனர்என்றுமாவட்டச்செயலகத்தினர் தெரிவித்தனர்.

நாடாளுமன்றஉறுப்பினர் ஈ.சரவணபவன் கெற்பேலி மத்தி அம்பாள் முன்பள்ளிக்கு உபகரணங்கள் வழங்க 50 ஆயிரம் ரூபா, தென்மராட்சிபிரதேசசெயலக பிரிவில் சாரதிய அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்க 2 லட்சத்து50ஆயிரம்ரூபா, தென்மராட்சிபிரதேசத்தில்மின்விளக்குகள் பொருத்த 4 லட்சம் ரூபா, மட்டுவில் மத்தியில் விவசாய வீதி அமைக்க 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, மட்டுவில் மத்தி ஐங்கரன்விளையாட்டுக்கழகத்துக்கு உபகரணங்கள் வழங்க 30 ஆயிரம் ரூபா, மீசாலை வீரசிங்கம்மத்தியகல்லூரிபழைய மாணவர்சங்கத்துக்குப்பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்க 40 ஆயிரம் ரூபா, கெற்பேலி சிவசக்தி முன்பள்ளிக்கட்டடசீரமைப்புக்கு 2 லட்சம் ரூபா, மீசாலைகிழக்கு நாவலர் முன்பள்ளிக்கு உபகரணங்கள் வழங்க 25 ஆயிரம் ரூபாவைஒதுக்கியுள்ளார்என்று தெரிவிக்கப்பட்டது

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா, நுணாவில்மேற்குஅம்பாள்சனசமூக நிலையத்துக்குப் பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்க ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா, கைதடி விநாயகர் சனசமூக நிலைய அபிவிருத்தி மேம்பாட்டுக்கு 2 லட்சம் ரூபா, கைதடி சேதுகாவலர் வித்தியாலய அபிவிருத்தி மேம்பாட்டுக்கென 2 லட்சம் ரூபாவைஒதுக்கியுள்ளார்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,9)



சாவகச்சேரிசுகாதாரமருத்துவஅதிகாரிபணியகஅலுவலர்களுக்கான முதலுதவி பற்றிய கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அலுவலர்களால் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இன்று பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முதலுதவிப் பயிற்சிக் கருத்தரங்குநடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# உள்ளூரிலுள்ள கலைஞர்களின் வளர்ச்சிக்கு உதவவேண்டும்

## 'களை' ஈழத்துத் திரைப்பட வெளியீட்டில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 20

உள்ளூர்கலைஞர்களின்வளர்ச்சிக்கு மாகாண சபை போன்ற அமைப்புகள் முன்வந்து ஊக்குவிக்க வேண்டும் என்று ஈழத்து இயக்குநர் கார்த்திக் சிவாகோரியுள்ளார்.

'களை' ஈழத்துத் திரைப்படம் யாழ்ப்பாணம் செல்வா திரையரங்கில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

அதன்போதே அந்தத் திரைப்பட இயக்குநர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

ஈழத்துத் திரைப்படத் துறையில் சாதிக்கநினைக்கும்ஒவ்வொருவரும் தமது ஆக்கங்களை வெளிக்கொணரும்போது பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

அனைவரினதும் ஆதரவும் கிடைக்கும்போது எமதுநாட்டுக் கலைஞர்கள்முன்னுக்குவரமுடியும். முக்கியமாகபடத்தை வெளியிடும்போதுஉருவாகின்றசிக்கல்கள் இறுக்கங்களை மாகாண சபை மற்றும் திரையரங்குகள் தகர்த்துக்கொள்ளவேண்டும்.

எம்மவர்களின் ஆக்கங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் இந்தச் சமூகத்துக்கு நல்ல ஆரோக்கியமான கருத்துகளைக் கொடுக்கக் கூடிய திரைப்படங்களை உருவாக்கவும் வெளியிடவும் முடியும் - என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது பெரிதும் புளக்கத்தில் காணப்படும் கஞ்சாவும் அது நாட்டுக்குள் ஊடுருவும் விதம், மக்களிடையே பரப்பப்படும் விதம் என்பவற்றை எடுத்துக்காட்டுவதுடன்ஏதோஒரு தேவைக்காக பணத்துக்கு ஆசைப்பட்டு தவறான வழியில் செல்கின்ற மாணவர்களையும் அதனால் சமூகத்தில் உருவாக்கப்படும் பிரச்சினைகளையும் மையப்படுத்தியதாக 'களை' திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் வெளியிட்டு வைத்தார். அவர் அதன் போது உரையாற்றுகையில்,

ஒவ்வொரு திரையரங்குகள், கலைக்குழுமங்கள்என்பனஉள்ளூராட்சி மன்றங்களுக்கு விடுகின்ற கோரிக்கை மூலமாகவும் நாங்கள் எடுக்கின்ற முயற்சிகள் மூலமாகவும்தான் இந்த வரிவிலக்குகளைப் பெறமுடியும்.

திரைப்படங்களை வெளியிடும் போதுசமூகத்துநல்லகருத்துள்ள திரைப்படங்களாக உருவாக்கி வெளியிட வேண்டும் என்றார்.

இந்தத் திரைப்பட வெளியீட்டில் பலர் கலந்துகொண்டனர். ஈழத்துக் கலைஞர்களின் தயாரிப்பில் உருவாகிய இந்தத் திரைப் படத்துக்குப் பலரும் ஆதரவு தெரிவித்திருந்தனர். (4,114)

## நினைவேந்தல் நிகழ்வு

கொழும்பு,ஓக 21

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும் மறைந்த க.மு.தர்மராஜவின் நினைவேந்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தமிழ்சங்கத் தலைவர் ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் இடம்பெறும்.

## தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை

கொழும்பு,ஓக 21

ஹம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் தமிழ்ப் பாடங்கள் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் தமிழ்ப்பாடம் கற்பிப்பது அத்தியாவசியமாக்கப்பட்ட போதிலும் அது சாத்தியமில்லை என இந்தப் பகுதியைச் சேர்ந்த சில தலைமை ஆசிரியர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாகத் தனியார் கல்வி நிறுவனங்களில் தமிழ் கற்பிப்பதற்குப் பெருந் தொகையான பணம் அறவிடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்கு

## நாட்டிலுள்ள இளையோர்கள் முன்வராவிட்டால் பன்னாட்டுத் தொழிலாளர்கள் வரவேண்டிவரும்

### நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிக்கிறார்

கொழும்பு,ஓக 21

**நாட்டிற்குள் நிலவும் சில தொழில்வாய்ப்புகளை இளைஞர்கள் நிராகரிப்பார்களாயின் அத் தொழில் வாய்ப்புகளுக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரவேண்டி வரும் என்று நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்**

"இன்டபிரைஸ் சிறிலங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுக்கு கடனுதவி வழங்கும் நிகழ்வு மாத்தறை உயன்வத்தையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசு தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்காக அமைச்சர்களின் காரியாலயங்களுக்கு முன்னால் மக்கள் காத்துக்கொண்டிருக்கும் கலாசாரத்தை மாற்றியமைக்கவேண்டும். மக்களுக்கு அரச தொழில்வாய்ப்பு வழங்குவதற்கு வெற்றிடம் இல்லை. அந்தளவுக்கு அரச திணைக்களங்கள் அனைத்திலும் தொழிலாளர்கள் நிரம்பியுள்ளனர். ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்க வேண்டிய அரச திணைக்களங்களில் 3 ஆயிரம் தொழிலாளர்கள் வரையில் உள்ளனர். அவ்வாறான வேலைத்திட்டத்தில் நானும் கடந்த காலங்களில் பங்காளராகியுள்ளேன். உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பின்னர் வெற்றிடம் இல்லாத தொழில் வாய்ப்புகளுக்கும் தமது ஆதரவாளர்களை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றனர். அதன்மூலம் அத்திணைக்களங்கள் மீண்டும் நட்டநிலைக்குச் சென்று விடுகின்றன.

மத்திய கிழக்கு நாடுகளில் வழங்கப்படும் சம்பளத்தையும் விட அதிகளவான சம்பளம் பெறும் சாதாரண தொழில் வாய்ப்புகள் நாட்டில் உள்ளன. எனினும் அத்தொழில்வாய்ப்புகளை வகிப்பதற்கு எம்மவர்கள் வெட்கப்படுகின்றனர். இருந்தபோதிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று கூலித்தொழில் செய்கின்றனர். இவ்வாறு சென்றால் நாட்டில் நிலவும் தொழில்துறைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படும்.

மேலும் சிலர் அரச தொழில்வாய்ப்புகளை எதிர்பார்க்காது முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாகவும் ஏனைய சுயதொழில்களிலும் ஈடுபடுகன்றனர்.

என்னைப் பொறுத்தவரை முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாக தொழில்புரிபவர்கள் 35 வயதைப்பூர்த்திசெய்திருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டுடன் முரண்படுகிறேன்.

ஏனெனில் தமக்கு தொழில்வாய்ப்பு இல்லாத சந்தர்ப் பத்தில் முச்சக்கர வண்டியையாவது ஓட்டித் தொழில் செய்து வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு அவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும் - என்றார்

## மகிந்தவின் வாதம் மக்களை மீண்டும் ஏமாற்றுவதற்கான முயற்சி

கொழும்பு.ஓக 21

கூட்டு எதிர்க் கட்சியில் அரச தலைவர் வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ள முடியாத வறுமை நிலையை மறைப்பதற்கே மகிந்த ராஜபக்ச தனக்கு மீண்டும் போட்டியிட முடியும் என வாதிட்டு வருகின்றார் என்று சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கட்சியின் உள்ளே காணப்படும் பிரச்சினையை மறைப்பதற்கே இந்த நடவடிக்கையை அவர் ஆரம்பித்துள்ளார். இதனால், மக்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றப் பார்க்கின்றார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கண்டி எசல பெரஹரவை முன்னிட்டு பாதுகாப்புக்கு 4 ஆயிரம் பொலிஸ்

கொழும்பு. ஓக 21

கண்டி எசல பெரஹரவை முன்னிட்டு 4 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் சிறப்பு அதிரடிப் படையினர்கள். மோப்பநாய் பொலிஸ் பிரிவினர்கள். உளவுப் பிரிவு அதிகாரிகள். உயிர் பாதுகாப்பு மற்றும் குதிரைப் பொலிஸ் பிரிவினர் ஆகிய பாதுகாப்புக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கான மேற்பார்வைஅதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட பொலிஸ் பிரிவு அத்தியட்சகர் என்.எம். சிசிர குமார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்டி மாவட்டத்தைத் தவிர ஏனைய வெளி மாகாணங்களில் இருந்து மேலதிகமான 2ஆயிரம் பேர் கண்டிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

பொது மக்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்க கூடுதலான முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது- என்றார்.

## சிங்கப்பூர் உடன்படிக்கையின் பின்னணியில் அர்ஜூன் உள்ளார்: நிரூபிக்கவும் தயார்

### பந்துல குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு,ஓக 21

சிங்கப்பூர் உடன்படிக்கையின் முதன்மை மூளையாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் செயற்பட்டு வருகிறார் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

புஞ்சிபொரளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலான பேச்சுவார்த்தையில் அர்ஜூன் மகேந்திரன் பங்கேற்றிருந்தார்.

யாரேனும் அதனை இல்லை எனக் கூறினால், சந்திப்பில் அர்ஜூன் மகேந்திரன் பங்கேற்ற புகைப்படங்களை என்னால் ஆதாரமாக காண்பிக்க முடியும். அர்ஜூன் மகேந்திரன் சிங்கப்பூரைச்சேர்ந்தவர் என்பதனால், சிங்கப்பூர் அரசுடன் நெருங்கிய தொடர்புகள் அவருக்கு உண்டு. இதன் காரணமாகவே அவரை இலங்கைக்கு அழைத்து வந்து மத்திய வங்கியின் ஆளுநர் பதவியில் அமர்த்தியது இந்த அரசு. சிங்கப்பூரில் இருந்து கொண்டே இலங்கையின் கைத்தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை நிர்வாகம் செய்யும் அதிகாரம் இந்த உடன்படிக்கையின் மூலம் அர்ஜூன் மகேந்திரனுக்கு கிடைக்கும்.

மத்திய வங்கி பிணை முறி மோசடிகளின் பின்னர் அர்ஜூன் நாட்டை விட்டு தப்பிச் சென்றார்.

அதன் பின்னர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலான பேச்சுவார்த்தைகளில் அவர் பங்கேற்றிருந்தார்.

சிங்கப்பூர் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் இலங்கை அந்நாட்டின் குப்பை மேடாக மாறும். தற்போது சட்டவிரோதமான முறையில் இந்த உடன்படிக்கை அமுல்படுத்தப்படுகின்றது. என்றார்.

### நல்லிணக்க அரசை வைத்துக் கொண்டு

## பௌத்த மதத்தை அழிக்க சிலர் முயற்சி

### ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு



கொழும்பு,ஓக 21

நல்லிணக்கம் என்ற பெயரில் அரசை வைத்துக் கொண்டுபௌத்தமதத்தை அழிப்பதற்கு ஒரு சிலர் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். நாட்டில் பௌத்த தர்மத்தைப் பாதுகாக்க அரசு முன்வர வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவர் ஓமல்பே சோபிததேரர்தெரிவித்தார்.

வஜிரராம அறநெறி பாடசாலையின் நூற்றாண்டு விழா நேற்றுமுன்தினம் கொழும்புபண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்படத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன், தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க ஆகியோர்கலந்துகொண்டிருந்தனர்.

அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

புத்தர் சிலை வைப்பதற்கு வடக்கில் இடம் இல்லை. கிழக்கிலும்பிரச்சினைஉள்ளது. ஆனால் தற்போது மேல்மாகாணத்திலும்பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது வரை காலமும் கொழும்பு மாநகர சபையில் இருந்த புத்தர் சிலையை தற்போதைய மேயர் அகற்றியுள்ளார். கொழும்பு மேயராக அந்நிய மதத்தவர்கள் பலர் இருந்துள்ளனர். எனினும் எவரும் புத்த சிலையை நீக்கவில்லை.

இலங்கையின் அரசியலமைப்பில்9ஆவதுசரத்தில் பௌத்தமதத்திற்குமுன்னுரிமை வழங்குவதுடன் பாதுகாப்போம் என கூறப்பட்டுள்ளது. எனினும்இந்த சரத்தில் எமக்கு தெளிவில்லாத நிலைமை உள்ளது.

தற்போது நாட்டில் 9176 விகாரைகள் உள்ளன. எனினும் 23 ஆயிரத்துக்கும் அதிகமான மதுபான வியாபார நிலையங்கள் உள்ளன. இதுவே எமது நாட்டின் நிலைமையாக உள்ளது. பௌத்த கொள்கையை நாம் பாதுகாக்க வேண்டும். விகாரைகளை பாதுகாக்கவேண்டும். அப்படியாயின்அரசும்மகாசங்கத்தினருமே இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

நல்லிணக்கம் என்ற பெயரில் அரசை வைத்துக் கொண்டுபௌத்தமதத்தை அழிப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். என்றார்

## இந்தியாவிலுள்ள ஈழ ஏதிலிகள் தாய்நாட்டுக்குத் திரும்புங்கள்

### அழைப்பு விடுக்கிறார் பிரதி அமைச்சர்

கொழும்பு. ஓக. 21

இலங்கையில் தற்போது சமாதானம் நிலை நாட்டப்பட்டுவிட்டது. ஆகவே இந்தியாவிலுள்ள ஈழ ஏதிலிகள் காலதாமதம் செய்யாமல் தாய் நாட்டுக்குத் திரும்பி வாருங்கள் என்று தேசியஒருங்கிணைப்பு மற்று அரச கரும மொழிகள் பிரதியமைச்சர் அல் சகீர் மௌலான கோரியுள்ளார். இலங்கை நிலைபற்றி நீங்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும்அவர் கூறியுள்ளார்.

திருச்சியிலுள்ள ஜமல் மொகபட் பாடசாலையில் நடந்த ஒரு நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர்.இந்திய வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலும் கிழக்கிலுமுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டன. இலங்கை அரசு நாடுதிரும்பும் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்ய ஆவலுடன் காத்திருக்கிறது. இலங்கையில்இப்போது சமாதான நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு படையினரின் அளவும் மாற்றப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களும் இலங்கைக்கு வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். அவர்கள் இனி இலங்கைக்குத் திரும்பலாம். மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்க அரசு சகலஉதவிகளையும் செய்து தரத் தயாராக உள்ளது.

நாடு திருப்புபவர்களுக்காக அரசு 50 ஆயிரம் வீடுகளை அமைக்கவும்இந்த ஏதிலிகள் மீள்குடியமர்ந்தபின்னர் மேலும் 25 ஆயிரம்வீடுகளை அமைக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மக்களுக்கானபோக்குவரத்து வசதிகள், பொருளாதார நிதியுதவிகளுடன் அவர்களின் வாழ்வாதாரத்துக்குத்தேவையான உதவிகளையும் அரசு வளங்கவுள்ளது. என்றார்.

## போதைப்பொருள் விற்பனை மருந்தக உரிமையாளர் கைது

கொழும்பு,ஓக. 21
போதைப்பொருள் மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மருந்தகம் ஒன்றின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் இப்பாகமுவ பிரதேசத்தில் இடம் பெற்றது.
குறித்த மருந்தகத்தில், போதைப்பொருள் மாத்திரை விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, கொக்கரெல்ல பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே, இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை, குருநாகல்நீதவான்நீதிமன்றில்முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 21
சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.
களுத்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது,
மதரீதியாகவும்அரசியல்ரீதியாகவும்வேறுபாடுகள் இருப்பின்நாட்டைமுன்னேற்றமுடியாது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் ஜப்பான் மற்றும் இலங்கைநாணயங்களுக்கு இடையில்வேறுபாடுகள் இருக்கவில்லை.
சுதந்திரம் கிடைத்து 70 வருடங்கள் கடந்தபோதும் இறந்த காலத்தை உற்று நோக்கும் போது நாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இனங்களுக்கும் பல்வேறு குழுக்களுக்கும் இடையில் காணப்பட்ட முரண்பாடுகளால்பயங்கரமானபோர் நிலையை சந்திக்க நேர்ந்தது. அதனடிப்படையில் இறந்த காலத்தை உற்று நோக்கி அப்போது ஏற்பட்ட தவறுகளை இனங்கண்டுஎதிர்கால சந்ததியினருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்றார்

## சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல்


கொழும்பு,ஒக.21
சிறைச்சாலைகளில் இருந்து போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபின்னர்சிறைச்சாலை அதிகாரிகள்சிலரிற்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
இவ்வாறானகொலைமிரட்டல்களையும்மீறிசிறைச்சாலைகளை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பேன்.
சிறைக்குள்உள்ளசிலர்வெளியில்உள்ளநபர்களை வைத்து மேற்கொள்ளும் போதைப்பொருள் வர்த்தகம் காரணமாக நாட்டிற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை தடுப்பதற்காக அவசரநடவடிக்கையொன்றை எடுக்க நேர்ந்தது.
சிறைச்சாலைகள் புலனாய்வு பிரிவினை களைத்து விட்டு இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றில் முதல்தடவையாக சட்ட அதிகாரங்களுடன் கூடிய பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.
சிறைச்சாலைகள் புலனாய்வு பிரிவு 2010 இல் உருவாக்கப்பட்டது எனினும் அந்த பிரிவின் நடவடிக்கைகளிற்குபொறுப்பேற்கும்எவரும்இருக்கவில்லை, அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் சில அதிகாரிகளின் தலையீட்டினால் மாற்றப்பட்டுள்ள இதற்கு அனுமதிக்க முடியாது -என்றார்

# 2020 க்கு பின் கூட்டரசுக்கு ஒப்பந்தம் தேவையில்லை

*கூறுகிறது சிறிலங்கா சுதந்திரக் கட்சி*

கொழும்பு,ஒக.21
தேசிய அரசின் பங்காளி கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் ஆட்சியை முன்னெடுப்பது தொடர்பில் ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமற்றது. ஒப்பந்தங்கள் இன்றி 2020 ஆம் ஆண்டுக்கு பின்னரும் இதே புரிந்துணர்வுடன் ஆட்சியை முன்னெடுப்போம் என்று சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயளாலர் றோஹண லக்ஷ்மன் பியதாச தெரிவித்தார்.

தேசிய அரசின்ஒப்பந்தம்நிறைவடைந்துள்ள நிலையில் மீண்டும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படாமை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்தும்தெரிவிக்கையில்,
ஒப்பந்தம்செய்துகொள்ளப்படாமல்இரு ஆண்டுகள் தேசிய அரசு செயற்பட்டுக் கொண்டிருகின்றது. சிறிலங்கா சுதந்திர கட்சிமற்றும்ஐக்கியதேசியகட்சிஎன்பன புரிந்துணர்வுடனும் ஒற்றுமையுடன் செயற்படுவதன் காரணமாக எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றுக்கான அவசியம் ஏற்படவில்லை.
மேலும்2020வரைமாத்திரமல்லாமல் அதற்குபின்னரும்இதனைதொடர்வதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. அரசு வெளியில் இருந்து கொண்டு அதனைவிமர்சிப்பவர்களேஅரசுக்குள் பிளவுகள் காணப்படுவதாக வதந்திகளை பரப்பி வருகின்றனர்.
இவ்வாறான செயற்பாடுகள் ஆட்சியை கவிழ்ப்பதற்குமேற்கொள்ளப்படும்நடவடிக்கைகளாகும்.
எவ்வாறிருப்பினும் கூட்டரசின் ஆட்சியை கவிழ்க நினைபவர்களின் எண்ணம் நிறைவேறாது. நாம் நாட்டில் தொடர்ச்சியாக அபிவிருத்திகளை மேற்கொண்டு வெற்றிப் பாதையில் முன்னோக்கிச்செல்வோம் என்றார்



(நன்றி: டெய்லிமிரர்)

## அம்பாந்தோட்டை துறைமுகம்: சீனா மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக 21
அம்பாந்தோட்டை துறைமுகத்தை பலவந்தமாக தன்வசம்வைத்துக் கொள்வதற்கு சீனா நடவடிக்கை எடுத்துள்ளது. பிராந்தியத்தின் வலுவான நாடாக மாறுவதற்கும் தமது படைப்பலத்தை வெளிநாடுகளுக்கு திணிப்பதற்கும் சீனா முற்படுவதாக அமெரிக்காவின் பாதுகாப்பு நிறுவனமான பென்டகன், காங்கிரஸ் சபையில் சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
பிராந்தியத்தின் வலுவான நாடாக மாறுவதற்கு சீனா முன்னெடுத்துள்ள திட்டங்கள் தொடர்பில் குறித்த அறிக்கையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
இதன்படி படைத் தளங்களை அமைப்பதற்காக சீனா செயற்பட்டு வருகின்றது. கடந்த வருடம் அம்பாந்தோட்டை துறை முகத்தை தன்வசம் பலவந்தமாக சுவீகரிக்க முற்பட்டுள்ளது.
இலங்கையை போன்று பாகிஸ்தான் போன்ற நாடுகளையும் சீனா தன்வசம் வைத்துக் கொள்ள முயற்சிப்பதாக அமெரிக்கா பென்டகன் நிறுவனத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனினும் சீனா பாதுகாப்பு அமைச்சு இந்த அறிக்கையை முழுமையாக நிராகரித்துள்ளது.
குளிர்காலயுத்த மனநிலையில் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

*மீனவர்கள் கைது:*

## வீதியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக. 21
திருகோணமலை புடவைக் கட்டு மீனவர்களால் டைனமற் (வெடி மருந்து) பாவித்து மீன்கள் பிடிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டில் சிறப்பு அதிரடிப் படையினரால் இருவர் கைது செய்யப்பட்டனர்.
மீன்களுடன் பாரவூர்தி கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், தமது மீன்கள் அவ்வாறு பிடிக்கப்படவில்லை. வேண்டும் என்றே இது திட்டமிடப்பட்ட சதி என்று கூறி நேற்றுக் காலை திருகோணமலை புல்மோட்டை வீதியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
குறித்த பிரச்சினை அறிந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர், அப்பகுதிக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டு திருகோணமலைமூத்தபொலிஸ் அத்தியட்சகர், குச்சவெளி பிரதேசத்திற்கான பொலிஸ் அத்தியட்சகர், குச்சவெளிபொலிஸ் தலைமை அதிகாரி, திருகோணமலை மாவட்ட மீன்பிடி உதவி பணிப்பாளர் உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.
இதன் அடிப்படையில் எதிர்வரும்வாரம் திருகோணமலை மாவட்டச் செயலர் தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீன்பிடி திணைக்கள பணிப்பாளர், அரசியல் பிரமுகர்கள், புல்மோட்டை, குச்சவெளி, புடவைக்கட்டு, சலப்பையாறு, இரக்கண்டி, நிலாவெளி மீன்பிடி சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் கூட்டம் இடம்பெற உள்ளது.
அதுவரைவதந்திகளைபரப்பி மீன்களைபறிமுதல்செய்யும் நடவடிக்கை குறித்து எதிர்வரும் வாரம் வரை பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றும் புடவைக்கட்டு பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கொழும்பிலிருந்தபடி முடிவை எடுக்காதீர்கள்

வலி. வடக்கில் இராணுவம் வசம் இருந்து, பின்னர் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரை நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முன்முயற்சிகளை எடுத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன. கிட்டத்தட்ட 30 வருடங்களுக்குப் பின்னர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய அந்தப் பகுதி மக்கள், தற்போதுதான் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பி வரும் நிலையில், அவர்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதை நிறுத்தி அரை நிரந்தர வீடுகளை வழங்குவதற்கு கொழும்பின் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவுக்கு உதயன் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்துகொள்கிறான்.

உடல் உழைப்புக்குப் பெயர்போனவர்கள் இந்தப் பகுதி மக்கள். பெரும்பாலானவர்கள் கடல் மற்றும் நில விவசாயிகள். 1950களில் சிறிமாவோ, மூடிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்தபோது, தமது நிலத்தில் பாடுபட்டு உழைத்துச் சேர்த்த காசில் கல்வீடு கட்டிக்கொண்டவர்கள் இந்தபகுதியைச் சேர்ந்த விவசாயிகள் என்று கூறப்படுவதுண்டு. அப்படி தமது மண்ணில் உழைப்பைச் சிந்தி அவர்கள் கட்டியெழுப்பிய கல் வீடுகளில் முக்கால்வாசியும் போரால் சேதமடையவில்லை. போர் முடிந்த பின்னர் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன.

அந்தப் பகுதியைத் தமது உயர் பாதுகாப்பு வலயமாக வைத்திருக்கும் நோக்கத்துக்காகச் செய்யப்பட்டன. வீடுகள் இருந்தால், அவற்றை உரிமை கோரிக்கொண்டு மக்கள் வருவார்கள், அதனைத் தடுத்த நிறுத்த முடியாது என்பதால், அவர்களின் சொத்துக்களை இடித்து அழித்துத் தரைமட்டமாக்கி விட்டால் தமது காணி நிலத்தை மீட்கும் ஆசையை அவர்களிடம் இருந்து அழித்துவிடலாம் என்கிற எண்ணத்தோடு இந்தப் பயங்கரச் செயல் புரியப்பட்டிருக்கலாம்.

அந்த மக்கள் கடும் உழைப்பின் மூலம் சிறுகச் சிறுகச் சேமித்து உழைத்துக் கட்டிய கல் வீடுகளை கொழும்பு அரச படைகளே உடைத்த நிலையில் அவர்களுக்கு அரை நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுப்பது என்று கொழும்பு அரசு எடுத்திருக்கக்கூடிய முடிவு அபத்தமானது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத்தான் அரசுகள் முன்வரவேண்டுமே தவிர, இப்படி இருந்த வீட்டை உடைத்துத் தரமட்டம் ஆக்கிவிட்டு அரை நிரந்தர வீடுகள் கட்டிக்கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை இன்னமும் கீழ் நிலைக்குக் கொண்டு செல்லக்கூடாது.

அதற்கும் மேலாக, போர் ஓய்வுக்கு வந்து ,மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முயற்சித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், வீடுகள் அற்றவர்களுக்கு நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் பல திட்டங்கள் கொழும்பு அரசாலேயே யாழ்ப்பாணத்திலும், வடக்கிலும் நாடு முழுவதிலும்கூட முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அப்படியிருக்கும் நிலையிலும் வலி. வடக்கில் மீளக்குடியமர்பவர்களுக்கு அரை நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு எடுக்கும் முயற்சி பலத்த சந்தேகத்தையும் கிளப்புகின்றது.

இந்தப் பகுதிகளில் தற்போதைக்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டாலும், எதிர்வரும் காலங்களில் அவை மீண்டும் இராணுவத்தினராலோ மற்றைய படையினராலேயோ கபளீகரம் செய்யப்படப்போகின்றனவா என்பது அதில் மிக முக்கியமான சந்தேகம். அப்படிக் கபளீகரம் செய்யப்படப்போகும் காணிகளில் எதற்கு நிரந்தர வீடுகளை அமைக்கவேண்டும் என்று மீள்குடியேற்ற அமைச்சு நினைக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. மீளக்குடியமரும் மக்களுக்கு நிரந்தர வீடுகளையே அமைத்துக் கொடுக்கும்படி யாழ். மாவட்டச் செயலகம் பரிந்துரைத்து முன்மொழிவுகளையும் கொடுத்த பின்னரும் அமைச்சு அரை நிரந்தர வீடுகளுக்கு அடித்தளம் இடுவதன் பின்னணி அலசி ஆராயப்படவேண்டியதொன்றே!

அதையும் தாண்டி, மீள்குடியேற்ற அமைச்சர் எம்.சுவாமிநாதன் முன்னர் அறிமுகப்படுத்த முயன்ற 60 ஆயிரம் பொருத்து வீட்டுத்திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தடுத்து நிரந்தர வீடுகள்தான் வேண்டும் என்று கேட்டதற்குப் பழி வாங்குவதற்காக, இப்போது வலி. வடக்கு மக்களுக்கான நிரந்தர வீடுகளை தடுத்து நிறுத்தி அரை நிரந்தர வீடுகளைக் கொடுப்பதற்கு அமைச்சர் திட்டமிடுகிறாரோ என்ற சந்தேகத்தையும் தவிர்க்க முடியவில்லை.


எல்லாவற்றுக்கும் மேலாக, களத்தில் நிலமையை நன்கு மதிப்பிடாமல் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து முடிவுகளை எடுத்தால் இப்படித்தான் ஏடாகூடமான வகையில் அவை அமையும் என்பதற்கும் இது ஒரு முன்னுதாரணமாகியுள்ளது. எனவே அங்கிருந்தபடி முடிவுகளை எடுக்காமல் களத்துக்கு வந்து மக்களைச் சந்தித்து அவர்களின் தேவை, விருப்பங்களை அறிந்து முடிவெடுப்பதற்கு அனைவரும் தயாராக வேண்டும்.

# அரசு தன்மானத்தை இழந்து செயற்படுகிறதா?

ஆங்கில மொழி மூலம்- ரங்க ஜயசூரிய (டெய்லி மிரர்)
தமிழில்- ஆனந்த்

பணிப்புறக்கணிப்பு என்பது சில சந்தர்ப்பங்களில் திட்டமிடப்பட்ட நாசகார வேலையாக இருக்கலாம், அல்லது வேறு எந்த மார்க்கமும் இல்லாததால், கடைசி அஸ்திரமாகக்கூட பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படலாம். இலங்கையில் நடக்கும் பணிப்புறக்கணிப்புக்களில் இவை இரண்டும் கலந்த நிலையே காணப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதியன்று தொடருந்து ஊழியர்கள் முன்னறிவிப்பு எதுவுமின்றி திடீரென பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதன் காரணமாக செய்வதறியாத ஆயிரக்கணக்கான பயணிகள், பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த தொடருந்து ஊழியர்களுடன் முரண்பட்டு, கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு சேதம் விளைவித்துள்ளனர். அரசதலைவர் தொடருந்து சேவை ஊழியர்களது முக்கியமான கோரிக்கையான சம்பள உயர்வுப்பற்றி பரிசீலிப்பதற்கு ஒப்புக்கொண்டதையடுத்து ஐந்து நாள்களின் பின்னர் கடந்த 12ஆம் திகதி தொடருந்து



ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

### அரச மருத்துவர்களும்கூட பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுதல் நியாயமானதா?

இதே கால கட்டத்திலேயே அரசு மருத்துவர்களும், நோயாளிகளை அநாதரவாகத் தவிக்கவிட்டுவிட்டுப், பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மாதாந்தம் ரூபா 35 ஆயிரமாக இருக்கும் தங்களது போக்குவரத்து மேலதிக கொடுப்பனவை ரூபா 70 ஆயிரமாக அதிகரிக்கும்படி கோரியே மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்த மருத்துவர்களின் கோரிக்கைக்கு மத்தியஸ்தம் செய்ய முயன்ற ஊடகவியலாளர்கள் துரோகிகள் என முத்திரையிடப்பட்டனர். இலங்கையில் தொழில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு குறைவான சம்பளம் கொடுக்கப்படுகின்ற காரணத்தால், இலங்கையில் நடந்து கொண்டிருந்த போர் காரணமாக இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு சமமாக, இந்தக் கல்விமான்களில் பெரும் அளவிலானோர் பசுமையான, வளமான வாழ்வைத்தேடி இலங்கையைவிட்டு வெளியேறியுள்ளனர். அவர்களின் வெற்றிடத்தை நிரப்புவது பெரும் சிரமமானதொன்று.

### நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் சம்பள அதிகரிப்பு சாத்தியப்படாததொன்று

அரசசேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டாலும், நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் இந்தச் சம்பள உயர்வு என்பது அரசுக்குச் சிரமமானதொரு விடயம். முன்னைய அரசு தேவைக்கு மிஞ்சிய அளவுக்கு ஊழியர்களை அரசசேவையில் இணைத்து நாட்டின் பொருளாதாரத்தை அரித்தெடுத்துவிட்டது. இந்தப் பிரச்சினைக்கு விடைகிடையாது. தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்து அரசு அதற்கமைய சம்பளத்தை அதிகரிக்கும்போது, அது அரச சேவையார்களின் சம்பளங்களில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து வருகிறது. கடந்த தசாப்தங்களில், 2006ஆம் ஆண்டில் 6 இலட்சத்து 26 ஆயிரத்து 992 பேராக இருந்த அரச பணியாளர்களது தொகை, 2016ஆம் ஆண்டில் 8இலட்சத்து 74 ஆயிரத்து 395 பேராக உயர்ந்தமை காரணமாகவும், அரசின் செலவீனங்கள் அதிகரித்துள்ளன. இந்தக் கணக்கீட்டில் முப்படைகளைச் சேர்ந்தவர்களது கணக்கீடு சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இந்த அனாவசியமான மேலதிக அரச சேவையாளர்களினால் ஏற்படும் செலவீனங்கள் காரணமாக, நீதியாக நேர்மையாக சேவை புரிபவர்களுக்கும், நியாயமான சம்பள உயர்வு கொடுப்பது சாத்தியமற்றதாக அமைகிறது. பாடசாலைகளுக்கும், மருத்துவமனைகளுக்கும், ஒதுக்கப்படவேண்டிய நிதி ஒதுக்கீடு, வெட்டிக் குறைக்கப்படும்போது, நாட்டின் கல்வித் தராதரம் வீழ்ச்சியடையும். பல்கலைக்கழகங்களின் தரம் குறைவதற்கும் இதுவே காரணம்.

### அரச சேவையில் மேலதிக ஊழியர்தொகை குறைக்கப்படல் அவசியம்

அரசசேவைகளில் மேலதிகமாக இருப்பவர்கள் குறைக்கப்பட்டு, அதனூடாக மிச்சப்படுத்தப்படும் நிதியை பாடசாலைகளின் அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும். கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிய போதிலும், இலங்கை தொடருந்து திணைக்களமும், இலங்கைப் போக்குவரத்துச் சபையும் இன்னும்கூட பின்னடைவான நிலையில்தான் இயங்குகின்றன. எயர்லங்கா நிறுவனமும் கோடிக்கணக்கான ரூபாக்கள் நட்டத்தை உருவாக்கியுள்ளது. இவற்றை மறுசீரமைப்பதற்குப் போதுமான பொருளாதார வசதி இலங்கையிடம் இல்லை. இவற்றிலிருந்து மீண்டு வர இந்த நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதுதான் சிறந்தவழி.

இந்தத் தனியார்படுத்துவதன் வெற்றியை வெளிப்படுத்த உதாரணமொன்றைக் குறிப்பி முடியும். இலங்கை 'டெலிகொம்' நிறுவனம் அரசுடமையாக இருந்த காலகட்டத்தில், ஒரு புதிய தொலைபேசி இணைப்பைப் பெற்றுக்கொள்வது என்பது பெரிய காலதாமதமாகும் விடயமாக இருந்தது. ஆனால் தனியார் மய மாக்கப்பட்ட டெலிகொம் நிறுவனத்தின் இன்றைய நிலமை, அதற்கு எதிர்மாறாக மாறி, மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் ஒரு நிறுவனமாக அது மாற்றமடைந்துள்ளது.

ஆகவே அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவது நன்மை தரத்தக்க விடயம். இலங்கையின் தற்போதைய முக்கிய தேவைகளைத் தீர்த்து வைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களுக்கு புத்துயிர் கொடுப்பது கஷ்டமான ஒரு காரியம். குறிப்பிட்ட இந்த நிறுவனங்களை அப்படியே இயங்க அனுமதிப்பதனூடாக, நட்டத்தில் போய் முட்டிமோதிக் கொள்ளாமல் அரசு அவற்றை தனது கட்டுப்பாட்டில் வைத்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

எனினும் தனியார் மயப்படுத்துவது என்பது அரசியலில் சாமானியமான விடயமல்ல. ஏனெனில், இதன்மூலம் அரசின் பெறுமதியான சொத்துக்கள் வெளிச்செல்கிறது என்ற பொய்யான மனோபாவத்தை மக்களிடையே ஏமாற்றுவாதிகளான அரசியல்வாதிகள் முன்வைக்கிறார்கள். எதற்குமே பிரயோசனமல்லாத இந்த நிறுவனங்களை தக்கவைத்துக்கொள்ளவே தொழிற்சங்கங்கள் முனைகின்றன.

ஆயினும் அண்மையில் இடம்பெற்ற தொடருந்து சேவையாளர்களின் திடீர் பணிப்புறக்கணிப்பு, மக்களை இதுவிடயம் குறித்து தீவிரமாகச் சிந்திக்க வைத்துள்ளது. இந்த நிலமையை அரசு தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, நாட்டுக்கும் பொது சேவையாளர்களுக்கும் நன்மை தரும் விதத்தில் செயற்பட வேண்டும்.



# 'தி.மு. க ஆட்சியை ஜனநாயகத்தின் பேரிரைச்சலாக பார்த்தார் இந்திராகாந்தி'

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி -13

தேவநாயகம் தேவானந்த்

'ஈழ விடுதலைக்காக எமது கழகம் இரு தடவைகள் ஆட்சியை இழந்துள்ளது' என்று கருணாநிதி அடிக்கடி குறிப்பிடுவார்.

இந்தியாவின் கூட்டாச்சி முறையில் மாநிலங்களின் ஆட்சியை கட்டுப்படுத்துவதற்கு இந்திய அரசியல் சட்டத்தின் 356 ஆவது பிரிவு வகுக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி ஏதோவொரு காரணத்துக்காக மாநிலத்தின் ஆட்சியை மத்திய அரசு கலைத்துவிட்டு குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொண்டு வரமுடியும். இதனால் மாநிலங்களுக்கு சுயாட்சி இல்லை. மாநில சுயாட்சிஅவசியம் என்று தி.மு.க வலியுறுத்தி வந்தது. ஜனநாயக முறையில் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட ஆட்சியை இந்திய மத்திய அரசு கலைத்து விடுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று கூறி அந்த அதிகாரத்தை வழங்கும் அரசமைப்புப் பிரிவை நீக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இன்றுவரை தொடர்கின்றன.

**1976இல் கலைஞரின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது**

356ஆவது பிரிவைப் பயன்படுத்தி தி.மு.க ஆட்சி இரண்டு தடவைகள் கலைக்கப்பட்டன. மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி செய்தால், அது தேனிலவாக இருக்கும். மாறாக எதிரெதிரான ஆட்சி நடைபெற்றால் அது எந்த நேரத்தில் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தி கலைக்கப்பட்டுவிடுமோ என்ற பயம் நிலவும்.

1976 ஆம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, அவரது ஆட்சி முதல் தடவையாகக் கலைக்கப்பட்டது. அப்போது மத்திய அரசில் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தது. 'இரும்புப் பெண்' அழைக்கப்பட்ட இந்திராகாந்தி தலைமை அமைச்சராக இருந்தார். அவரது காலத்தில் இந்த ஆட்சிக் கலைப்பு நடைபெற்றது. அப்போது கருணாநிதியின் ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்றுகேட்டுக் கொண்டவர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ஆகும். தி.மு.கவின் ஆட்சியில் ஊழல், லஞ்சம் தலைவிரித்தாடுகின்றது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் தி.மு.க ஆட்சிக் கலைக்கப்பட்டது.

தி.மு.க ஆட்சி 1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 1976ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதிவரை நீடித்தது. ஆட்சி கலைப்பட்டபின்னர், குடியரசுத் தலைவரின் ஆட்சி கொண்டுவரப்பட்டு, 1977ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை அதுநீடித்தது. அதன் பின்பு தமிழ்நாட்டில் நடந்த தேர்தலில் எம்.ஜி.ஆர் அமோக வெற்றிபெற்று ஆட்சியமைத்தார். பின்னர் அவர் இறக்கும்வரை தொடர்ந்து பத்தாண்டுகள் ஆட்சிசெய்தார்.

எம்.ஜி.ஆரின் குற்றச்சாட்டுத்தான் கருணாநிதியின் ஆட்சிக்கலைப்புக்குக் காரணம் என்று சொல்லி விடமுடியாது என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள். அதற்கு இன்னுமொரு காரணமும் அடிப்படையாக இருந்தது என்கிறார்கள். இந்திராகாந்தி, தனது தோல்விப் பயம் காரணமாக, பொதுத் தேர்தலைத் தவிர்ப்பதற்காக 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதியன்று, அவசரகால நிலையைப் பிறப்பித்தார். தன்னுடன் ஒத்துழையாத தலைவர்களை, நாட்டின் பாதுகாப்பைக் காரணம் காட்டிச் சிறைப்படுத்தினார். அத்துடன் சிலரின் ஆட்சியையும் கலைத்தார்.

**இந்தியாவின் இருண்ட காலமாக இந்திராகாந்தியின் ஆட்சிக்காலம் விமர்சிக்கப்பட்டது**

இந்தியாவில் ஜனநாயகத்தின் இருண்ட காலமாக இந்திராகாந்தியின் அவசரகால ஆட்சிக்காலம் குறிப்பிடப்படுகிறது. 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1977 மார்ச் மாதம் வரை கிட்டத்தட்ட 21 மாதகாலத்திற்கு இந்த நிலைநீடித்தது.

இந்திராகாந்தி 1971 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலைச் சந்திக்கத் துணிவில்லாமல் செய்த பெரும் தேர்தல் மோசடியே அது என்று எதிர்க்கட்சிகள் அதனை வர்ணித்தன.

அந்தக் காலத்தில் முடிவடைந்த பாகிஸ்தானிய போர், எண்ணெய் நெருக்கடி போன்ற காரணங்களினால் நாடுபொருளாதார நெருக்கடியில் இருப்பதாகவும், இந்தச் சமயத்தில் அரசுப் பணியாளர்களின் போராட்டங்கள் ஜனநாயகத்தை நிலைகுலைய வைக்கும் என்பதால் அவசரகால நிலை பிறப்பிக்கப்படுவதாகக் காரணம் கூறப்பட்டது.

அப்போது அரசுக்கெதிராக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஒன்று திரண்டு பெரும் ஜனநாயகப் போராட்டத்தை நடத்தின. அதனை இந்திராகாந்தி 'ஜன நாயகத்தின் பேரிரைச்சல்' என்று வர்ணித்தார். போராட்டங்களை அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி அடக்கி ஒடுக்கினார். நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாநில அரசுகளின் செயலாட்சிகள் தள்ளிவைக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டவிதி 352 ஐக் கொண்டு வந்ததன் மூலம், இந்திராகாந்தி தனக்கென கூடுதலான சிறப்பு அதிகாரங்களைப் பெற்றார். மற்றும் குடியுரிமைகளை முடக்கினார்; எதிர்க்கட்சிகளை ஒடுக்கினார்.



**அவசரகால நிலையை பிறப்பித்து எதிர்க்கட்சிகளையும் தொழிற்சங்கங்களையும் இந்திராகாந்தி அடக்கி ஒடுக்கினார்**

இந்திராகாந்தியும் அவரது நெருக்கமான ஆலோசகரான அவரது இரண்டாவது மகன் சஞ்சய்காந்தியும், நெருக்கடி நிலை சம்பந்தமாக மற்றவர்கள் தெரிவித்த எதிர்க் கருத்துகளையும், ஆலோசனைகளையும் தவிர்த்தார்கள். ஜனநாயகப் படுகொலை அரங்கேறியது.

பல்லாயிரக்கணக்கானோர் நாடு முழுவதும் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டனர். பல முக்கிய அரசியல் தலைவர்களான ஜெயபிரகாஷ்நாராயண், ராஜ் நாராயண், மொரார்ஜி தேசாய், சரண் சிங், அடல் பிகாரி வாஜ்பாய், அத்வானி போன்றோர் கைதுசெய்யப்பட்டனர். ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புக்கள் தடை செய்யப்பட்டன. அப்போது தற்போதைய இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தலைமறைவாக வாழ்ந்தார்.

இந்தக் காலகட்டத்தில் தி.மு.க அவசரகால நிலையை எதிர்த்துப் பெரும் போராட்டங்களை நடத்தியது. இந்தத் தலையிடியைபோக்குவதற்கு இந்திராகாந்தி, எம்.ஜி.ஆரை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். கருணாநிதி ஆட்சியைக் கலைத்தார். இதேபோன்று இந்திராகாந்தியால் குஜராத் மாநில ஆட்சியும் கலைக்கபட்டது.

பின்னர் நெருக்கடிநிலை அதிகாரப்பூர்வமாக 1977ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதியன்று முடிவுக்கு வந்தது. இந்தத்தேர்தலை மக்கள் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்துக்கும் இடையிலான போட்டியாகப் பார்த்தனர்.

இதில் காங்கிரஸ் கட்சி பல இடங்களில் தோல்வி அடைந்தது. இந்திராகாந்தி மற்றும் அவரது மகன் சஞ்சய் காந்தி ஆகியோரும் தோல்வி அடைந்தனர். ஆக, ஜனநாயகத்தின் பேரிரைச்சலாகக் கருதப்பட்ட கருணாநிதி ஆட்சி, இந்திராகாந்தியால் கலைக்கப்பட்டது. இங்கு கருணாநிதி கூறியது போன்று அவரது முதலாவது ஆட்சிக் கலைப்புக்கும் ஈழப் போராட்டத்துக்கும், எந்தத் தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை.

*(தொடரும்)*

## ஆசிரியருக்கான கடிதம்

# யாழ்.மாநகர சபையின் செயற்பாடு பாராட்டுக்கு உரியதொன்று

இன்றைய எமது சமூக வாழ்வியலில் தத்தமக்கு வருமான ரீதியில் இலாபம் தரவல்ல செயற்பாடுகள் அல்லது பெயர், புகழ் ஈட்டிக்கொள்ளும் நோக்குடனான சமூக பொதுச் செயற்பாடுகளிலேயே எம்மவர்களில் பலர் ஈடுபடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் விதிவிலக்காக, உண்மையான சமூகநல நோக்குடன் மற்றும் ஆன்மிகப் பணி ஈடுபாட்டுடன் செயற்படும் ஒரு தரப்பினர் எம் மத்தியில் இல்லாமலில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

அத்தகையோரின் செயற்பாடுகளுக்கு அரசியல் நோக்கம் போன்ற வெவ்வேறு அர்த்தங்கள் கற்பித்து விமர்சிக்கும் ஒரு தரப்பினரும் எம் மத்தியில் இருக்கவே செய்கின்றனர்.

எதுஎப்படியான போதிலும், இத்தகைய சமூக நலன்சார் மற்றும் ஆன்மிக ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை முன்னெடுக்கும் தரப்பினர்களுக்கு, அவர்களது செயற்பாடுகளை மென்மேலும் ஊக்கத்துடன் மேற்கொள்வதற்கான உந்துகோலாக, நாம் எம்மாலான ஆதரவையும், மதிப்பையும் வழங்கவேண்டிய கடப்பாடு உடையவர்களாக உள்ளோம்.

அத்தகைய சமூக, சமயப் பணிகளில் அரும்பணியாற்றி வருவோரை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ்ப்பாண மாநகரசபை சைவசமய விவகாரக்குழு ஆண்டுதோறும் அத்தகைய சமூக, சமயப் பணியாளர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து யாழ்.விருது என்ற பெயரில் நல்விருதொன்றையும், பொற்கிழியையும் வழங்கி மதிப்புறுத்தி செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்கு உரியதொன்று.

அந்த வகையில் இவ்வாண்டுக்கான விருதுக்கு, சந்நிதியான் ஆச்சிரமத்தில் அடியார்களுக்கு உமுதளித்து அவர்களது பசிப்பிணி போக்கும் பெருந்தொண்டைக் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்னெடுத்துவரும் மோகனதாஸ் சுவாமிகளைத் தேர்ந்தெடுத்துக் மதிப்புறுத்த உள்ளமை, உண்மையில் யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக்குழுவுக்குப் பெருமை சேர்ப்பிக்கும் ஒன்றாகும்.

பிரதிபலனேதும் கருதாது, சமூகப்பணி, இறைபணி என்பவற்றை ஈடுபாட்டுடன் மேற்கொள்ளும் பெரியார்களை மதிப்புறுத்தி எமது நன்றிகளை வெளிப்படுத்துவது, தமிழர்களது பாரம்பரிய கலாசாரப் பண்பாடொன்றே என்பதையும் இந்த வேளையில் ஞாபகமூட்டுவது பொருத்தமானதாகும்.

*உ.சிவநாதன், நீர்வேலி.*



# தனது தலையில் தானே மண் போட்டது கேரளா!

கேரளாவில் ஏற்பட்ட வெள்ள இடரும், அதன் தொடர்ச்சியான உயிரிழப்புக்களும் குறித்து பன்னாட்டுச் சமூகம் மிகுந்த கவலையடைந்துள்ளது. எனினும், கேரள அரசு கைக்கொண்ட மிகமிக மோசமான நீர் மேலாண்மையால்தான் இந்த வெள்ள இடர் என்கின்றனர் நிபுணர்கள்.

கேரளாவில் பேரழிவு வெள்ளம் ஏற்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்பு, அந்த மாநிலம் தென்னிந்திய மாநிலங்களிலேயே நீர் மேலாண்மையில் மோசமாகச் செயற்படுகிறது என்று புதுடெல்லியின் அறிக்கை ஒன்று எச்சரித்திருந்தது. இமயமலையை ஒட்டி இல்லாத மாநிலங்களில், கேரள மாநிலம், நீர் மேலாண்மையில் 12ஆவது இடத்தில் இருந்தது. அந்த மாநிலம் பெற்ற மதிப்பெண் வெறும் 42.

நீர் மேலாண்மையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் குஜராத், மத்திய பிரதேசம் மற்றும் ஆந்திரம் முறையே 79, 69, 68 புள்ளிகளைப் பெற்று முதல மூன்று இடங்களைப் பிடித்திருந்தன. அந்த அறிக்கை வெளிவந்த ஒரு மாதத்தில், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல்கள் உண்மைதான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன்படி மோசமான பெருவெள்ளத்தில் சிக்கித் தவிக்கிறது கேரள மாநிலம்.

**அணைகளில் நீர்**

கேரள மாநிலத்தில் உள்ள 30 அணைகளில் உள்ள நீரை, அதிகாரிகள் முன்பே சீராகத் திறந்து விட்டிருந்தால் இந்த நிலமை ஏற்பட்டிருக்காது என்கிறார்கள் நிபுணர்கள்.

மழை வெள்ளம் உச்சத்தைத் தொட்டவுடன், அந்த மாநிலத்தில் உள்ள 80 அணைகளில் நீராண்து திறந்து விடப்பட்டிருக்கிறது. அந்த நீர் கேரளாவில் உள்ள 41 ஆறுகளில் சென்று சேர்ந்திருக்கிறது.

தென் கிழக்கு ஆசியா அணைகள், ஆறுகள் மற்றும் மக்கள் குழுமத்தை சேர்ந்த நீர் மேலாண்மை நிபுணர் ஹிமான் தாகூர், "மழை வெள்ளம் அதிகரித்ததுமே கேரளாவில் உள்ள இடுக்கி, இடமலயார் அணைகளிலிருந்து நீரை திறந்துவிட்டவுடன் நிலைமை மோசமாகி இருப்பது தெரிகிறது" என்கிறார். அணைகளில் நீர் அதிகரிக்கும் வரை காத்திருக்காமல், முன்பே நீரை திறந்து விட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்காது. நிலைமை மோசமானவுடன் அவர்களுக்கு நீரை திறந்துவிடுவதை தவிர வேறு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த மோசமான நிலைமை தான் பேரழிவுக்கு இட்டுச்சென்றுள்ளது" என்கிறார் அவர்.

"அவர்களுக்கு முன்பே நீரைத் திறந்துவிடுவதற்கு போதுமான நேரம் இருந்தது. அவர்கள் அப்போதே நீரை திறந்துவிட்டிருக்கலாம்" என்கிறார் ஹிமான்.

**வெள்ள பாதிப்புள்ள மாநிலம்**

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் இந்திய உள்துறை அமைச்சகம் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றில், வெள்ளப் பாதிப்புள்ள பத்து மாநிலங்களில் கேரளமும் ஒன்று. தேசிய பேரிடர் மேலாண்மை கொள்கைக்கு ஏற்றவாறு தென்னிந்திய மாநிலங்கள் பேரிடர் தடுப்ப கொள்கைகளை எடுக்கவில்லை என்று கூறப்படுப்படுகிறது.

மாநில அரசு அணைகளை திறம்பட மேலாண்மை செய்யவில்லை, பேரிடர் எதிர்ப்பிலும் சிறப்பாகச் செயல்படவில்லை என்று மாநில அரசுகளை குற்றஞ்சாட்டினாலும், இந்த விசயத்தில் புதுடெல்லி அரசிடமிருந்தும் நல்ல செய்தி ஏதும் வரவில்லை என்பதுதான் உண்மை.

அதாவது புதுடெல்லி நீர் வாரியம் கேரளாவிற்கு வெள்ள எச்சரிக்கையை முன்பே விடுவிக்கவில்லை என்கிறார்கள் நிபுணர்கள். இதனை அந்த முகமைதான் செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

வெள்ளத்தை முன்பே கணித்ததிலும், அது தொடர்பான நடவடிக்கை எடுத்ததிலும் புதுடெல்லி நீர் ஆணையம் முன்பே எடுத்த நடவடிக்கை என்ன என்ற கேள்வி எழுகிறது, என்கிறார் ஹிமான்.

இந்தப் பருவமழை காலகட்டத்தில் வழக்கமாகப் பெய்யும் மழையை விட குறைந்த காலத்தில் 37 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. குறைந்த கால இடைவெளியில் பெய்த இந்த பெருமழைதான் நிலச்சரிவு ஏற்படுத்தி இருக்கிறது. பலர் உயிரிழக்கவும் காரணமாகியிருக்கிறது. சூழலியலாளர்கள் காடழிப்பும் இந்த பேரழிவுக்கு காரணம் என்கிறார்கள். காடுகள் அழிக்கப்பட்ட பிற மாநிலங்களிலும் பெருமழையால் நிலச்சரிவு ஏற்பட்டு இருக்கிறது.

**நகரமயமாக்கல்**

நகரமயமாக்கல் விளைவுகளை சிந்திக்காமல் நீர்நிலைகள், ஏரிகள் மற்றும் சதுப்பு நிலங்களிலும் ஏற்படுத்தப்படும் உள்கட்டமைப்புகள் இது போன்ற பேரழிவுக்கு காரணமாகிறது. 2015ஆம் ஆண்டு சென்னையில் இதுதான் ஏற்பட்டது.



கேரளாவில் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள இந்தப் பெருவெள்ளம், பேரழிவு குறித்து மற்றொரு பார்வையை வழங்குகிறது. அணைகளால் ஏற்படும் ஆபத்துத்தான் அது.

அணைகளை முறையாக மேலாண்மை செய்யவில்லை என்றால், பருவநிலை மாற்றம் குறித்த ஆய்வாளர்கள் கணிப்பது போல பெருமழை அடிக்கடி பெய்தால், இனி இது போன்ற பேரழிவானது நூற்றாண்டுக்கு ஒரு முறை ஏற்படும் பேரழிவாக இருக்காது.

# இந்தோனே[ஷியாவில்] தொடர் நில[நடுக்கம்]

## அடுத்தடுத்து மூன்று

யகார்தா, ஒக். 21

இந்தோனேசியாவில் நேற்று மூன்று தடவைகள் நிலநடுக்கம் ஏற்பட்டது என்று அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இயற்கை இடர்களை அடிக்கடி சந்திக்கும் நெருப்புக்கோளம் பகுதியில் அமைந்துள்ளது இந்தோனேசியா. அந்த நாட்டின் லோம்பாக் தீவில் கடந்த வாரம் ஏற்பட்ட நில அதிர்வில் 460 பேர் உயிரிழந்த நிலையில் நேற்று மூன்று தடவைகள் அங்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

தலைநகர் ஜகார்தாவில் 6.5 ரிச்டர் அளவிலும், பெலண்டிங் நகரில் 6.3 ரிச்டர் அளவிலும், லோம்பாக் தீவில் 6.9 ரிச்டர் அளவிலும் இந்த நில அதிர்வுகள் பதிவாகின. ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று முதல் கட்டத் தகவல் நேற்று மதியம் வெளிவந்தது. உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (ம)



# கேரளாவுக்கு விரைந்து உதவ பன்னாட்டுச் சமூகம் முன்வருக

## கோருகிறார் பாப்பரசர்

புதுடெல்லி, ஒக். 21

"மிகப்பெரும் வெள்ள இடருக்கு முகம் கொடுத்துள்ள கேரள மாநிலத்துக்கு விரைந்து உதவ வேண்டும் என்று பன்னாட்டுச சமூகத்தைக் கோரினார் பாப்பரசர் பிரான்சிஸ்".

கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து பெய்த பேய மழை காரணமாக மிகப பெரும வெள்ள இடருக்கு முகம் கொடுத்துள்ளது கேரளா. வெள்ள இடருக்கு முகம்கொடுததுள்ள கேரளாவுக்கு பன்னாட்டுச சமூகம கவலை தெரிவித்துள்ளது. இநத நிலையில் கேரள மககளுக்கு உதவ பன்னாடுகள் முனவர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் பாப்பரசர் பிரான்ஸிஸ்.


"கனமழை காரணமாக கேரளா மாநிலம் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. மழையில் சிக்கியும், நிலச்சரிவாலும் பொதுமககள் பலா உயிரிழந்துள்ளனா. எனவே, கேரளா மாநிலத்தில் வெள்ள இடரில் சிக்கியுள்ள சகோதர, சகோதரிகளுக்கு பன்னாட்டுச் சமுதாயம் உறுதுணையாக நிற்க வேண்டும. அங்கு தேவைப்படும் அனைத்து உதவிகளையும் விரைந்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் கோரிக்கை வைத்தார். (ம)



# னசியாவில் லநடுக்கம்

## று தடவை அதிர்ந்தது





## உலக அளவில் உயர்கிறது நீர்மட்டம்

வொஷிங்டன். ஒக். 21
பருவநிலை மாற்றம் காரணமாக உலக அளவில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது என்று அமெரிக்கப் பல்கலைக் கழகமொன்று எச்சரித்தது. நீர் மட்ட அதிகரிப்பால் சுனாமி ஏற்படவும் அதிகளவில் வாய்ப்புள்ளது என்றும் அந்தப் பல்கலைக் கழகம் குறிப்பிட்டது.
அமெரிக்காவின் வெர்ஜீனிய நகரப் பல்கலைக் கழகமொன்று பேராசிரியர் றொபேர்ட் வெயிஸ் தலைமையில் இந்த ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்விலேயே பருவநிலை மாற்றத்தால் கடல்நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது தெரியவந்துள்ளது. குறிப்பாக தெற்கு சீனாவில் 1.5 அடி முதல் 3 அடி வரை கடல்நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் அங்கு 8.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்படவும், அதன் தொடர்ச்சியாக சுனாமி ஏற்படவும் வாய்ப்புள்ளது என்று அந்த அறிக்கை மேலும் குறிப்பிட்டது. (ம)

## நைஜீரியாவில் தாக்குதல்; 19 பேர் சாவு

நைஜர். ஒக். 21
நைஜீரியாவில் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் கிராமமொன்றை ஆயுததாரிகள் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்தியதில் 19 பேர் உயிரிழந்தனர்.
கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரிய நாட்டில் இஸ்லாமியச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வரவேண்டும் என்று போகோ ஹறம் அமைப்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் கிராமங்களை இலக்குவைத்து அந்த அமைப்பு அவ்வப்போது தாக்குதல்களை நடத்தும். அவ்வாறாக மைலாரி என்ற கிராமத்தை இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. (ம)



## பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார் அமெ. அமைச்சர் மைக் பாம்பியோ

வொஷிங்டன். ஒக். 21
அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அமெரிக்கா - பாகிஸ்தான் இடையிலான உறவில் அண்மைக்காலமாக பெரியதொரு விரிசல் ஏற்பட்டுள்ளது. "பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஆதரிக்கிறது" என்று தெரிவித்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பயங்கரவாத ஒழிப்புக்காக பாகிஸ்தானுக்கு




வழங்கி வந்த நிதியையும் அண்மையில் நிறுத்த உத்தரவிட்டார். இத்தகைய தொரு பின்னணியிலும், பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று அந்த நாட்டின் தலைமை அமைச்சராக இம்ரான் கான் பொறுப்பேற்றுள்ள நிலையிலும் அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் பாம்பியோ பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
விரிசல் ஏற்பட்டுள்ள உறவில் மீண்டும் இணக்கத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியே பாம்பியோவின் பயணம் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



இஸ்ரேலின் அடக்குமுறைகளுக்கு எதிராக இஸ்ரேல் - பலஸ்தீன எல்லைப் பகுதியான காசாவில் தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டம் ஒன்றில் கலந்துகொண்ட நபரொருவரின் ஒளிப்படமே இது.
பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டது. (ம)

## ஜெனோவா மேம்பாலம் இடிந்ததில் உயிரிழப்பு எண்ணிக்கை 46ஆனது

ரோம். ஒக். 21
இத்தாலியின் ஜெனோவா நகரில் விரைவு நெடுஞ்சாலையின் மேம்பாலம் கடந்த 15ஆம் திகதி இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46ஆக அதிகரித்தது.
இத்தாலியின் ஜெனோவா நகரின் மேற்கில் பிரபல தொழிற்பேட்டை அருகே அமைந்துள்ள ஏ10 நெடுஞ்சாலையில் இருக்கும் மோராண்டி என்னும் மேம்பாலத்தின் ஒரு பகுதி கடந்த 15ஆம் திகதி திடீரென்று இடிந்து விழுந்தது. 7 வாகனங்கள் நசியுண்டன. 12 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டத் தகவல் வெளியாகியது. தற்போது இந்த எண்ணிக்கை 46ஆக அதிகரித்தது என்கின்றன பன்னாட்டு ஊடகங்கள். (ம)





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியப் பணியை பிறர் பொறுப்பில் வழங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிதான நடைமுறை பின்பற்றுவது நல்லது சராசரி அளவில் இலாபம் இருக்கும்.

**இடபம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் பன்மடங்கு உயரும்.

**கடகம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் உருவாகிற போட்டியை சரி செய்ய கூடுதல் முயற்சி தேவைப்படும். இலாபம் சுமார்.

**சிங்கம்:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மையை பாதுகாப்பது அவசியம். பணவரவு மிதமான அளவில் இருக்கும்.

**கன்னி:** பகைவர் தொல்லை சுவடு தெரியாமல் மறையும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்ப்பு நிறைவேற வாய்ப்புண்டு. நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட பணிகள் நிறைவேற தகுந்த முன்னேற்பாடு செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் உயரும். உபரி வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணி. இடமாற்றம் பெற வாய்ப்புண்டு.

**மகரம்:** உங்களின் பேச்சில் ரசனை நிறைந்திருக்கும். அதிக உழைப்பால் தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் காண்பீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். ஆதாயம் பன்மடங்கு உயரும்.

**மீனம்:** வாக்குவாதத்தை தவிர்த்தால் மனஅமைதியை பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.



## பாரதிராஜா இயக்கும்
# 'அம்மா புரட்சித் தலைவி'



மறைந்தமுன்னாள்முதல்வர்ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு 2 திரைப்படங்களாக உருவாக உள்ளது. இந்த நிலையில், பிரபல இயக்குனர் பாரதிராஜாவும் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்க உள்ளார். ஆதித்யா பரத்வாஜ் தயாரிக்கும் இந்தப் படத்திற்கு 'அம்மா புரட்சித் தலைவி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசெம்பரில் படப்பிடிப்பு தொடங்கவுள்ள நிலையில், இந்தப்படத்திற்கு இளையராஜா இசையமைப்பார் என்று தெரிகிறது.

வெகு... தெரியும் பச்சை நிற ... க்கனல், பக்கத்தில் சென்றதும் ... பாகிவிடும்! இதுதான் 'இக்கரைக்கு அக்கரை பச்சை'!

ஞாபகம் வைப்பது மூளை உள்ளவர்களுக்குச் சுலபம்! மறப்பதுதான் இதயம் உள்ளவர்க்குக் கடினம்!

கையில் சுத்தியல் வைத்திருப்பவனுக்கு கண்ணில படுற பிரச்சினை எல்லாம் ஆணியாகவே தெரியும்!



இருக்கிறப்ப என்னதான் காம்ப்ளான், போர்ன்விட்டானு குடிச்சாலும்..



செத்தப்புறம் எல்லோருக்கும் பால்தான்...

நாளை
**22.08.2018**
செவ்வாய்க்கிழமை
ஆவணி 06

திதி: ஏகாதசி மு.ப. 09.59 வரை
நட்சத்திரம்: பூராடம் முழுவதும்
சுபநேரம்: 04.35 – 06.05 வரை
ராகுகாலம்: 12.05 – 01.35 வரை



### சினம்

சினம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு நீ உனக்குக் கொடுத்துக் கொள்ளும் தண்டனை!



## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 5 | 3 | 6 | 8 | 9 | 2 | 1 |
| 9 | 6 | 8 | 2 | 5 | 1 | 4 | 3 | 7 |
| 3 | 2 | 1 | 7 | 4 | 9 | 8 | 6 | 5 |
| 1 | 9 | 7 | 8 | 3 | 2 | 6 | 5 | 4 |
| 5 | 4 | 3 | 6 | 1 | 7 | 2 | 8 | 9 |
| 2 | 8 | 6 | 5 | 9 | 4 | 1 | 7 | 3 |
| 8 | 5 | 4 | 9 | 7 | 6 | 3 | 1 | 2 |
| 7 | 1 | 2 | 4 | 8 | 3 | 5 | 9 | 6 |
| 6 | 3 | 9 | 1 | 2 | 5 | 7 | 4 | 8 |

நேற்றைய விடை

ஒரு பையன் இரு சக்கர வாகனத்தில் விரைவாகச் சென்றுகொண்டிருந்தான். அப்போது எதிர்பாராமல் வந்த சீசி ... மீது மோதி ... கீழே விழுந்தது. வண்டியை ஓட்டிச் சென்றவன் அந்தக் கிளிக்கு முதலுதவி செய்து ... விட்டான். விழித்துப் பார்த்த கிளி மனதில் நினைத்துக்கொண்டது. பாவம் நாம் மோதிய அந்த வண்டிக்காரன் ... இறந்து ... [illegible]

## புலவரின் கணிப்பு....



அரசர் கண்பார்வையற்றபுலவர் ஒருவரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தலாம் என்று எண்ணினார். ஆனால் அமைச்சரோ புலவர் கண்பார்வையற்றவர்தானே, என்று நினைத்து கிழிந்த பொன்னாடையைக் கொடுத்தார்.
பொன்னாடையைத் தடவிப்பார்த்தார் புலவர்.
புலவர் அதன் வடிவமைப்பைத் தான் தடவிப்பார்க்கிறார் என்று நினைத்த அரசர் புலவரிடம், புலவரே! அதில் அழகான வடிவமாக பூ இருக்கிறது, மாங்காய் இருக்கிறது என்றார்.
அரசருக்குப் பதிலளித்த புலவர்,
"ஆம் மன்னா பூவும் இருக்கிறது, காயும் இருக்கிறது அதில் பிஞ்சும் இருக்கிறது" என்றாராம்.
(பிஞ்சு என்று புலவர் மாம்பிஞ்சைக் குறிப்பது போல பொன்னாடையின் கிழிந்ததன்மையைச் சுட்டியதால் தன் தவறை உணர்ந்தார் அரசர்.)



## அமெரிக்க சுதந்திரச் சிலை

அமெரிக்காவில் நியூயோர்க் துறைமுகத்தில் உள்ள உலகப் புகழ்பெற்ற சுதந்திரத் தேவியின் சிலைக்கு 115 வயது பூர்த்தியாகிறது. இந்தச் சிலையைத் தற்போது செப்பனிடுகிறார்கள் இதனை அழகுபடுத்துவதற்கு மட்டும் 25மில்லியன் அமெரிக்க டொலர் செலவுசெய்யப்படுகிறது. இந்தத் தொகையை அமெரிக்க மக்களே ஒன்றிணைந்து திரட்டுகிறார்கள். சிறுவர் சிறுமிகள் கூட ரொட்டிகளை விற்றும் கார்களைக் கழுவித் துடைத்தும் பணம் சேர்க்கிறார்கள். கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி நிதி சேர்க்கிறார்கள். அமெரிக்க நாட்டு மக்கள் சகலரதும் பங்களிப்பும் சுதந்திரதேவி சிலையில் இருக்க வேண்டியே இப்படிச் செய்கிறார்கள்.

கடல்பயணிகள் கப்பலில் வரும் போதே அதோ நியூயோர்க் என சட்டென அடையாளம் காட்டும் வகையில் மிகப் பிரமாண்டமாக உயர்ந்தும் நிற்கும் இந்தச் சிலையை 115 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தனை சிறப்பாகச் செய்திருக்கிறார்களே என்று வியப்புறுகிறார்கள் மக்கள்.

இந்தச் சிலை கம்பீரமாக வலக்கையை உயர்த்தி நிற்கிறது. உலகுக்கே ஒளி தருகிறேன் என்பது போல் கையில் பெரிய தீபச் சுடர் எரியும் தோற்றத்தில் உள்ளது. இந்தச் சிலை அடிப்பீடத்திலிருந்து தீபச்சுடர் உச்சி வரை 305அடி உயரம் உடையது. சிலையின் உயரம் மட்டும் 151 அடியாகும். சிலையின் இடக்கையில் சுதந்திரப் பிரகடனப்பத்திரம் உள்ளது. அதில் அமெரிக்கா சுதந்திரம் அடைந்த திகதி பொறிக்கப்பட்டுள்ளது. சுதந்திரதேவியின் தலையை உளிக் கீரிடம் அலங்கரிக்கிறது. அவளது காலடியில் விடுதலையின் அறிகுறியாக ஒரு முறித்தெடுக்கப்பட்ட அடிமைச் சங்கிலி கிடக்கிறது.

1886ஆம் ஆண்டு பிரான்ஸ் நாடு சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வகையில் அவர்களால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட சிலை இது. இதற்குச் செலவிடப்பட்ட தொகை அக்காலத்திலேயே 4கோடி ரூபாய்கள். பிரடரிக் அஸ்கடினர் தோல்டி என்ற சிற்பி இதனை நிர்மாணித்தார்.

# அகந்தை அழிந்தது

பஞ்சபாண்டவர்களில் (தருமர் அருச்சுணன், வீமன், நகுலன், சகாதேவன்) தலைமகனான தருமர் கருணை வடிவானவர். எவர் வந்து கேட்டாலும் இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லாமல் வாரி வாரி வழங்குபவர். நாளாக நாளாக இவருக்குத் தன்னைப் போல் ஈகையாளர் எவரும் தரணியில் இருக்க முடியாது என்ற எண்ணம் மனதில் படியத் தொடங்கியது.

இந்த எண்ணத்தை மாற்ற அவர் நண்பனான கண்ணபிரான் விரும்பினார். அந்தக்காலத்தில் பாதாள உலகை மாபலி என்ற மன்னன் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தான். ஈகையிலும் விருந்தோம்பலிலும் இவனுக்கு நிகர் எவரும் இருக்கவில்லை. ஆனால் மிகுந்த அடக்கமும் நண்பண்புகளும் நிறைந்தவன். கண்ணபிரான் தருமரை ஒரு தடவை பாதாள உலகுக்கு அழைத்துச் சென்றார். அப்போது தருமருக்கு தாகம் ஏற்பட்டது. எனவே தருமரும் கண்ணபிரானும் அங்கிருந்த ஒரு வீட்டினுள் நுழைந்து குடிப்பதற்கு நீர் கேட்டனர். அப்போது அவ் வீட்டுப் பெண்மணி பொற்செம்பு ஒன்றில் நீரைக் கொண்டு வந்து கொடுத்தார். நீரை அருந்தியபின் தருமர் "பெண்ணே, தாங்கள் நீர்கொடுத்த பாத்திரம் தங்கத்தாலானது. எனவே அதனைப் பத்திரமாய்க் கொண்டு போய் வைத்துவிடுங்கள்" என்றார். கண்ணனோ மனதுக்குள் சிரித்துக் கொண்டே நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

பெண்மணி "ஐயா, ஒருவரிடம் ஒருமுறை கொடுத்ததை. அது எவ்வளவு விலை உயர்ந்த பொருள் எனினும் திரும்ப வாங்கும் பழக்கம் எங்கள் நாட்டில் கிடையாது. நாங்களும் ஒரு முறை பயன்படுத்தியதை மறுமுறை பயன்படுத்தாமல் வீசி எறிந்துவிடுவோம்" என்று கூறினாள்.

இதனைக் கேட்டு தர்மர் மிகுந்த வியப்படைந்தார். அந்த நாடு பெரும் செல்வம் கொழிக்கும் நாடு என்பதைப் புரிந்துகொண்டார். பின்னர் தருமரும் கண்ணபிரானும் அந்தப்பெண்ணிடம் விடைபெற்றுக் கொண்டு மகாபலி மன்னனது அரண்மனையை அடைந்தனர். அரண்மனையில் மகாபலி மன்னர் இருவரையும் வரவேற்று வணங்கி ஆசனத்தில் அமர வைத்தான். அப்போது கண்ணபிரான் "மகாபலி மன்னனே! இன்று உனது அவைக்கு தானதருமங்களில் சிறந்த தருமபுத்திரரை அழைத்து வந்திருக்கிறேன். இவர் தினமும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வாரி வழங்கக் கூடியவர்" என தருமரை மன்னனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.




அரசன் "கேள்விப்பட்டிருக்கிறேன் கண்ணபிரானே! அவரோ வாரி வழங்குகிறார். ஆனால் நான் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் என்னிடம் தானம் பெற ஒருவரும் வருவதில்லை. இங்கே கொள்வாரும் கிடையாது. கொடுப்பதற்கும் வாய்ப்பில்லை. தாங்களோ தருமரிடம் தினமும் எண்ணற்றவர்கள் தானம் பெறுவதாகக் கூறுகிறீர்கள். அப்படியானால் அந்த நாட்டில் எண்ணற்றோர் வறுமையில் வாடுகிறார்கள் என்பது புரிகிறது. அதனால் அவருடைய ஆட்சி எப்படிப்பட்ட பரிதாப நிலையில் உள்ளது என்பதும் தெளிவாகப் புரிகிறது. அப்படிப்பட்டவரைப் பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமே இல்லை என்றார். மகாபலியின் இந்த வார்த்தைகளைக் கேட்ட தருமர் வெட்கித் தலை கவிழ்ந்தார். அவர் மனதில் இலேசாக ஏற்பட்டுக்கொண்டிருந்த அகந்தையும் இந்த நிகழ்ச்சியோடு அடியோடு அழிந்தது.


# ஈரல்

மனித உடலில் காணப்படும் உறுப்புக்களில் ஒப்பீட்டளவில் கூடிய நிறையைக் கொண்டது செங்கபில நிறமான ஈரல் ஆகும். இது உடலின் பல அரிய செயற்பாடுகளுக்கு இன்றியமையாதது. இது ஒரு சுரப்பியாகவும், சேமிக்கும் உறுப்பாகவும் தொழிற்படுகிறது. இது சுரங்கும் 'ஹெப்பாரின்' எனப்படும் 'ஓமோன்' உடலினுள்ளே குருதி உறையாதிருப்பதில் பங்கெடுக்கிறது. இதைவிட பித்தத்தையும் ஈரலே சுரக்கிறது. இந்தப் பித்த நீரானது கொழுப்பைக் குழம்பாக்கி சமிபாட்டில் உதவுகிறது. எமது உடலில், மேலதிகமான காபோவைதரேற்றானது குளுக்கோசாக மாற்றப்பட்டு ஈரலிலேயே சேமிக்கப்படுகிறது. இவற்றைவிட குருதிச் சிவப்பணுக்களின் வாழ்க்கைக்காலம் முடிவுற்றதும் ஈரலிலேயே அழிக்கப்படுகிறது.

இறைச்சி உண்பவர் ஈரலைச் சிறந்த உணவாக சிறுவர்களுக்குக் கொடுப்பார்கள். ஆடு, கோழிஎன்பனவற்றின் ஈரலில் அதிகளவு புரதம், விற்றமின் 'ஏ' ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன.



ஈரலைப் பாதிக்கும் நோய்கள் செங்கண்மாரி (ஏ ஹெபடைடிஸ்) 'சிரோசிஸ்' போன்றவையாகும். (செங்கண்மாரி நோய் குருதியில்) பித்தம் சேர்வதால் ஏற்படுகின்றது. இந்த நோய் கண்களையும் தோலையும் மஞ்சள் நிறமாக மாற்றும். 'சிரோசிஸ்' எனப்படும் நோய் மதுஅருந்துபவர்களில் அதிகம் காணப்படுகிறது. மதுவிலுள்ள அற்ககோல் ஈரற் கலங்களை இறக்கச் செய்வதால், ஈரலின் குருதிக்கலன்கள் பாதிக்கப்பட்டு குருதி நேரிடையாக உணவுக் கால்வாயில் பாய்கின்றது. இதனால் நோயாளி குருதி வாந்தி எடுப்பார். நோயாளி மது அருந்துவதை முற்றாக நிறுத்தினால் ஓரளவு நோயை நிவர்த்தி செய்யலாம்.




புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்

உடுவிலூர் கலா

# இருண்ட பாதைதனில் இளையோரின் பயணம்

போர் முடிவடைந்த பின்னரும்கூட வடமாகாண மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடவில்லை. வாள்வெட்டு, வன்புணர்வு, கொலை, கொள்ளை, போதை, கடத்தல் என அருவருக்கத்தக்க வன்முறைகள் தலைதூக்கிக் கொண்டு தான் உள்ளன. அண்மைக் காலங்களில் எமதுசமூகத்தில் வன்முறைகளும், அட்டூழியங்களும்கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. போர்க்காலங்களில் ஷெல் விழுமா? வெள்ளைவான் வருமா? துப்பாக்கி ரவைகள் பதம்பார்க்குமா? எம்பிள்ளைகளைப் பறி கொடுப்போமா? என்கின்ற அச்சத்தில் உறங்க மனமின்றித் தவித்தோம். இப்போது வாள்வெட்டுக் கும்பல் வீட்டுக்குள் நுழையுமா? கொள்ளையர்கள் எமது வீடுகளில் தம் கைவரிசையை காட்டுவார்களா? பெண்களுக்கு பாதுகாப்புக் கிடைக்குமா? என்கிற ஏக்கத்தில் மறந்தும் தூங்காது விழிக்க வேண்டிய பரிதாப நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இரவு வேளைகளில் அடுத்தவர் வீடுகளுக்குள் நுழைந்தது. உடைமைகளைச் சேதமாக்கியும், கொள்ளையடித்தும் பாலியல் வன்புணர்வு செய்தும் வன்முறைக் கலாசாரங்களை பதிவு செய்யும் சில கும்பல்களால் யாழ் குடாநாடே அச்சத்தில் உறைந்துள்ளது.



### இனத் துரோகிகள்

இத்தகைய நாசகாரச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யார்? வேற்று இனத்திலிருந்து வேற்றுச் சமூகத்திலிருந்து வந்தவர்களா? வாள்வெட்டுக்கும்பலா? கொலைஞர்களா? கொள்ளையர்களா? வன்புணர்வாளர்களா? இல்லை. வன்முறைகள் சகலதும் தெரிந்த நாசதாரிகளா? சிந்திக்க வேண்டும். களைப்பு, நோய், துன்பம், சோர்வு என தம் சொந்த வீடுகளில் நிம்மதியாகத் தூங்காவிடாது இத்தகைய அட்டூழியங்கள் செய்கின்ற இனத்துரோகிகளை எப்படித்திருத்துவது? யார் திருத்துவது? திருந்தவே மாட்டார்களா?

இன்று எச்சமூகம் கொண்டுள்ள பெரிய பிரச்சினையாக கொலை, கொள்ளை, வன்புணர்வு, வாள்வெட்டு என்பன இருந்தாலும், இவையாவர்க்கும் அடிநாதமாகப் போதைப் பொருள்களே உள்ளன. இந்த அழிவுக் கும்பலில் 18-30 வரையான இளையோர் உள்ளனர் எனக்கூறப்படுகின்றது. இவர்களில் சிலர் மாணவர்கள் என்பது கசப்பான உண்மையாகும். இவர்களது எதிர்காலம் என்னவாகும்? இவர்களது குடும்ப மதிப்பு என்னவாகும்? சமூகத் துரோகிகளாக இனத்துரோகிகளாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவர்களை உரிய தண்டனை கொடுக்க வேண்டியதும், சமூகத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டியதும் காலத்தின் கட்டாய அழைப்பாணையாக உள்ளது.

ஊர் உறங்கும் வேளையில் வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வாள்களோடு வீரமுழக்கம் செய்கின்றனர். சில கோயில் வெளிகளில், பற்றைகளில் கூடும் இளைஞர்கள் பலர் புகைப்பிடிப்பதும், மது அருந்துவதும் கெட்டவார்த்தைகள் பேசுவதுமாகக் காணப்படுகின்றனர். இவர்களைச் சுற்றி இருப்பவர்களால் இந்தச் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடிவதில்லை. தெருவில் செல்லும் பெண்ணின் அருகே சென்று அவளது தங்கச் சங்கிலியை அறுக்கிறார்கள். கொள்ளையர்கள் தாம் தப்பித்துக் கொள்வதற்காக வயோதிபப் பெண்களை வன்புணர்வு செய்து கொலை செய்கிறார்கள். இப்படியும் கடைநிலை மனிதர்களா?

> ஒழுக்கப் பிறழ்வுடைய பிள்ளைகளை இனம் கண்டு திருத்தும் பணியை யாவரும் முன்னெடுக்க அரசும், சட்டமும் ஒன்றிணைய வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு பயந்து வாழும் நிலையை விடுத்து பெற்றோரை பயபக்தியோடு பிள்ளைகள் வணங்கும் நிலையை கொண்டு வரவேண்டும்.

### போர்க் காலத்திலும் அதன் பின்னரும்

தொடர்ந்து போர் தந்தவடுக்கள் ஆறவில்லை. குருதி வெள்ளத்தில் குற்றுயிராய் கிடந்தும் ஒழுக்கமாய் வாழ்ந்த நாம் இன்று ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்வது நியாயமா? போர்க்காலத்தில் இராணுவக் கெடுபிடியால் இளைஞர்களைப் பாதுகாக்க பதறியடித்து ஓடினோம். கல்வைத்த இடமெல்லாம் கடவுள் என வணங்கினோம். அதன் பயன்தான் இதுவா? எஞ்சியிருப்பவர்களை பாதுகாக்க வேண்டியவர்களே எம்மினத்தை அழித்து மகிழும் கொடுமையல்லவா இது. 2009இற்கு முன் இளைஞர்கள் ஒழுக்கத்தை முகவரியாகக் கொண்டு தமது உயிரைக் கையிலேந்தி வாழ்ந்தவர்கள். போர் நிறைவுற்றதும், மேய்ப்பன் இல்லாத மந்தைகள் என்பதை நிரூபிக்க போதைப் பொருள்களுக்கு அடிமையாகி வாள்வெட்டுக் கும்பல்களை உருவாக்கி யாழ்ப்பாணத்தை அமைதியிழக்கச் செய்கிறார்களே. இளையோர் சமூகம் போதையின் துணையோடு இருளை நோக்கி நீண்டதூரம் பயணித்து விட்டது. நாளைய இவர்களது நிலை என்ன?

சிறைக்குள் அடைப்பட்டு தமது காலத்தை நாசமாக்குகின்ற அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு இளைஞனும் ஒருதாயின் மகனே. தாய் எப்படி தனது மகனைக் கைவிட்டாள்? பத்துமாதம் சுமந்து வலியுணர்ந்து தனது உதிரத்தையே பாலாக ஊட்டியவள் மகனின் பாதையை கவனிக்காது விட்டது ஏன்? ஆடம்பர மோகமா? பணத்தாசையா? இன்று வாள்வெட்டுக்கோ கொலைக்கோ கொள்ளைக்கோ வன்புணர்வுக்கோ தன்னை அர்ப்பணித்து கடைநிலை மனிதனாக சமூகச் சீரழிவுக்கு காரணமாகியுள்ள ஒவ்வொரு இளைஞனுக்கும் அவனது சிறை வாழ்க்கைக்கும் தாயே பொறுப்புக்கூற வேண்டும். ஊசி திருடிய போது கண்டிக்காத தாயை மிகப்பெரிய திருடன் என தண்டனைக்காளாகிய பின்னர் தாயின் காதைக் கடித்த மகனை ஒவ்வொரு தாயும் நினைவில் கொள்ள வேண்டும்.

### போதை தரும் பாதை

இன்று சில கிராமங்கள் போதைப் பொருள்களாலும் வன்முறைகளாலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. முப்பது வருடங்களுக்கு முன்நோக்கி நகர்ந்தால் கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம், கிறிஸ்தவ சபைகள் என்பன கிராமங்கள் தோறும் ஓய்வுநாள் பாடசாலை வாலிப பாசறை என நடத்தி சிறுவர்களையும், வாலிபர்களையும் ஆன்மிகத்துக்குள் வழிநடத்தினர். இந்தச் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேபோல அறநெறிப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை பெற்றோர் அனுப்பி வைக்க வேண்டும். மதத்தலைவர்கள் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி இளைஞர்கள் வாழ்வியல் நெறிமுறைகளை புனருத்தானம் செய்ய வேண்டும். எம்முடைய பிள்ளைகளா? என்ற சுயநலமின்றி கல்வி மான்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் தடுமாறி சீர்குலைந்து நிற்கும் இளையோர் வாழ்வியலை செப்பனிட உடனடியாக களமிறங்க வேண்டும். பார்வையாளராக அன்றி பங்காளிகளாக எமக்காக எம் சமூகத்துக்காக, எம் இனத்துக்காக எம்மை நாமே அர்ப்பணித்துச் செயற்பட வேண்டும்.

ஒழுக்கப் பிறழ்வுடைய பிள்ளைகளை இனம்கண்டு திருத்தும் பணியை யாவரும் முன்னெடுக்க அரசும், சட்டமும் ஒன்றிணைய வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு பயந்து வாழும் நிலையை விடுத்து பெற்றோரை பயபக்தியோடு பிள்ளைகள் வணங்கும் நிலையை கொண்டு வர வேண்டும். பயந்து ஒதுங்குவதால் வன்முறையாளர்கள் வாந்திபேதிக் கிருமியாய் பல்கிப் பெருகுவர். இதனால், அநியாயமாக அவர்களது எதிர்காலம் காவுகொள்ளப்படுகிறது. ஏராளமான இளைஞர்கள் வாள்வெட்டில் ஈடுபட்டு ஏனைய அட்டூழியங்களையும் செய்து, அடுத்தவர்களையும் துன்புறுத்தி தமது வாழ்வியலையும் நாசமாக்கியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் சமூகவெளி குப்பை மேடாகி விடும். எம்மினம் தொடர்ந்து தொடர்ந்து அழுகிறது. அழிக்கப்படுகிறது. போரில் எண்ணுக்கடங்காத இளைஞர்கள் காவு கொள்ளப்பட்டார்கள். ஆனால் மண் மீட்க, மொழி மீட்க இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார். களச் சாவடைந்தனர்.

### தாய்மாருக்கு...

இன்று நடப்பதென்ன? எம்மினப் பெண்களை பாதுகாக்க வேண்டியவர்கள் வேலியே பயிரை மேய்வது போல செய்கிறார்களே. உலகினுக்கு நாகரிகம் போதித்தவன் தமிழன். தமிழ் மரபில் வந்து தமிழினத்தையே கொன்று போடலாமா? கொச்சைப்படுத்தலாமா?

அன்பான தாய்மாரே, உங்கள் பிள்ளைகள் உங்கள் கைகளில் அடங்கி இருக்கும் புத்தகம் போன்றவர்கள். அதனைப் படித்துப்பார்க்காது வீசுவதோ, மூடிவைப்பதோ பாரதூரமான குற்றமாகும். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.... என்ற சினிமாப் பாடல் வரிகள் தாய்க்குலத்தை தட்டி எழுப்புகின்றதை ஒவ்வொரு தாயும் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களுடைய பிள்ளைகளை திருடன், கொலைஞன், வன்முறையாளன் என சமூகம் காறி உமிழ்வதை உங்களால் சகித்து வாழ முடிகிறதா? உங்கள் பிள்ளைகள் மேல் கண்ணும் கருத்துமாக இருங்கள். அவர்களது பாதையை செப்பனிடுங்கள். பொலிஸோ, சட்டமோ ஒவ்வொரு இளைஞனையும் குற்றவாளிகள் பட்டியலில் இட்டு வரிசைப்படுத்த முன் தாய்மாரே உங்கள் பிள்ளைகளை கருத்தூன்றிக் கவனியுங்கள்.



## நல்லூர் கந்தன் 6 ஆம் நாள் திருவிழா

### ஏறுமயிலேறி வருவாய் முருகா

விண்முட்டும் பெருமான் கையில் வீற்றிருக்கும்
வண்ண மயில் வாகன வடிவேல் குமரா
கண்விழித்துன் காட்சிகளைக் கண்டு மகிழ
காலமெல்லாம் கருணைதனைப் பொழிந்திடுவாய் குமரா
பண்சொரியும் பாடல்களைப் பாடிவரும் பாவையர்கள்
பக்திக் குகந்தவனே பரந்தாமன் மருகோனே
வெண்கொற்றக் குடையிழந்து பொன்கொண்ட மனையிழந்து
வேதனைப் படுவோர்தம் வேதனையைத் தீருமையா
புண்பட்ட நெஞ்சங்கள் கண்பட்ட போதைகளால்
புண்பட்டகுழல்வோர்தம் புலம்பலைத் தீருமையா
எண்எட்டுத் திக்கிலும் வாழ் ஏழைகள் துயர்தீர
ஏறுமயிலேறி ஏற்றமுடன் வருவாய் முருகா

மு. கணிசாசம்



நாவற்குழி

# சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2018





**7ஆம் நாள் மாம்பழத்திருவிழா**

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற

விஜய் ரீவி கலக்கப்போவது யாரு புகழ்


**பழனி & நிஷா**

கலந்து சிறப்பிக்கும் காமெடி கதம்ப நிகழ்ச்சி

*மெய்யடியார்களே!*

நிகழும் சர்வமங்கலகரமான விளம்பி வருடம் ஆவணித்திங்கள் 6ஆம் நாள் (22.08.2018) புதன்கிழமை எம்பெருமான் சித்தி விநாயகரின் வருடாந்த உற்சவத்தின் 7ஆம் திருவிழா நடைபெற உள்ளது. அன்றையதினம் 9.30 மணியளவில் கொடித்தம்ப பூசையும் தொடர்ந்து வசந்தமண்டப பூசை என்பன நிகழ்வுற்று பிரசித்திபெற்ற தவில் நாதஸ்வர வித்துவான்களின் இன்னிசைக் கச்சேரியோடு **கண்டிதலதா மாளிகையிலிருந்து வரவழைக்கப்பட்ட நிஜமான யானையில்** எம்பெருமான் உள்வீதியில் வலம் வருவார்.

அன்று மாலை 6 மணியளவில் விநாயகப் பெருமான் தாய் தந்தையராகிய பார்வதி பரமேஸ்வரரிடம் மாங்கனியைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வும் பின்பு முருகப்பெருமானுக்கு அபிசேகமும் நடைபெறும். தொடர்ச்சியாக அன்றைய உற்சவகால பூசைகள் முடிவுற்று இரவு 8.00 மணியளவில் நிஜமான யானையின் பவனியுடனும் புகழ்பெற்ற நாதஸ்வர தவில் மேதைகளின் இன்னிசையுடனும் **சுவிஸ் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட வான வேடிக்கைகளுடனும்** எம்பெருமான் விநாயகர் வெளிவீதி உலா வருவார்.



அதனைத் தொடர்ந்து இரவு 10.00 மணியளவில் கொழும்பு **கலாசூரி திவ்யா சுஜேனின் அபிநய ஷேத்ரா நடனப்பள்ளி வழங்கும் "உமா பரிணயம்"** நாட்டிய நிகழ்வும் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அதிவிசேடமாக தென்னியாவில் புகழ்பெற்ற **விஜய் தொலைக்காட்சியில்** கலக்கப்போவது யாரு நகைச்சுவை நிகழ்ச்சியில் புகழ்பெற்று விளங்கும் நிஷா மற்றும் பழனி ஆகியோரின் விசேட காமெடி கதம்ப நிகழ்ச்சியும் இடம்பெறும். எனவே எம்பெருமானின் அடியவர்கள் யாவரும் பெருமானை வேண்டி காரிய சித்திகளையும் பெற்று நிகழ்ச்சிகளை கண்டுகளிக்குமாறும் வேண்டிக்கொள்கின்றோம்.



**7ஆம் திருவிழா உபயகாரர்கள்**

## வாடகைக்கு கடை தேவை

அரச நிறுவனமான நோத்சீ லிமிட்டெட் நிறுவனத்துக்கு வாடகைக்கு கடை தேவையாகவுள்ளது. பிரதான தபால் நிலையத்துக்கும் சத்திரச் சந்திக்கும் இடையில் விரும்பத்தக்கது.

021 222 2733, 077 960 0734

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம். இராசாவின் தோட்டம் வீதியில் 8 பரப்பு 5 $^{3/4}$ குளி காணியில் 4 படுக்கை அறையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு - 044 7544 452647 (Viber)

## மன்னார் நகர சபை
## அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் -2018

முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தினால் மன்னார் நகர சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாக கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நியந்தனைகள்**

01. இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.
02. ஊழியர் விதவைகள் தபுதாரர்கள் , அனாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் 03 வருட காலம் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**பொதுத்தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்
03. நல்லொழுக்கம் உடையவராகவும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி மன்னார் நகர சபை எல்லைக்குள் 5 வருடங்கள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்

**கோரப்படும் பதவி வகை**

| இல | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | காரியாலய காரிய சகாயர் III | 02 |
| 02 | வேலை/வெளிக்களத் தொழிலாளி III | 02 |

**சம்பள அளவுத்திட்டம்**

2016.01.01 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 03/2016 இன் அட்டவணை 1 இற்கமைவாக PL-1-2016 சம்பள அளவுத்திட்டம் :-24250-10X250-10X270-10X300-12X330-36410 சுற்றறிக்கையின் படி அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**கல்வித்தகைமை**

க.பொ.த.சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே அமர்வில் 05 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். போதியளவு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டபடி பாடசாலை ஒன்றில் தரம் 8 அல்லது தரம் 9 இல் சித்தியடைந்திருத்தல் கல்வித்தகைமையாக கொள்ளப்படும்.

**கோரப்படும் பதவி வகை**

| இலக்கம் | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 03 | கனரக வாகன இயக்குனர் - III | 02 |

2016.01.01 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 03/2016 இன அட்டவணை 1 இற்கமைவாக PL-3-2016 சம்பள அளவுத்திட்டம் :- 25790-10x270-10x300-10x330-10x350-38990 சுற்றறிக்கையின் படி அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**கல்வித்தகைமை**

க.பொ.த.சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அத்துடன் ஒரே அமர்வில் 05 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**தொழில்சார் தகைமைகள்**

விண்ணப்பதாரி கனரக வாகன இயக்குனருக்குரிய துறைசார் தேசிய தொழில் பயிற்சி தகைமை – மட்டம் 04 (NVQ - LEVEL -04) சித்தியடைந்திருத்தல்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட செயல்வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் (Class of Vehicle C, C1) உடையவராக இருத்தல்.

ஆகக்குறைந்தது 3 வருடங்கள் கனரக வாகன இயக்குனருக்குரிய சேவை அனுபவத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

மேலதிக தகைமைகள், அனுபவம் விசேட தகைமையாக கருத்தில் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் தகைமைகளும் பரிசீலிக்கப்படும் பரீட்சாத்தி நேர்முகப்பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கமைய ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. மன்னார் நகர சபை அலுவகத்தில் ரூபா 100.00 இனைச் செலுத்தி விண்ணப்ப படிவத்தை பெற்று பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
02. விண்ணப்ப படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்களை பூரணப்படுத்தாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு **செயலாளர், நகர சபை, மன்னார்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இட துபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகமையற்றவரென நியமனத்திற்கு முன்னராகவோ அல்லது நியமனத்தின் பின்னரோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரிய வரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் இரத்துச் செய்யப்படும்.
06. விண்ணப்ப முடிவுத்திகதி :- 20.09.2018
07. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பை தாமதிக்கச் செய்யும் , மாற்றியமைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் மன்னார் நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

**செயலாளர்**
**நகர சபை, மன்னார்** (CS/19152)(11,17) 21.08.2018.

## வீட்டுப்பணிப்பெண் தேவை

இணுவில் மேற்கு பகுதியில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரியும் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 6450 317, 077 848 4638

## வேலையாள் தேவை

- கப் யூஸ் அடிப்பதற்கு ஆள்கள் தேவை.
- அலுமினிய பொடி உள்ள பட்டா வாகனம் தேவை.

அம்மா யூஸ்
இல.28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 711 1530, 077 758 7079



## இராஜ கோபுரம் அமைப்பதற்கான கூறுவிலை கோரல்



வரணி சிட்டிவேரம்

### கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு சப்த தள இராஜ கோபுரம் அமைப்பதற்கான கூறுவிலைகள் தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன,

**கூறுவிலைகள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படல் வேண்டும்.**

- ஆலய மூலஸ்தான கால்புறவாய் அளவு :- 9' 04"
- கோபுர அடி விஸ்தீரணம் :- 28' 02" x 38' 09"
- வியாழ வரி வரையான உயரம் :- 18' 08"
- வியாழ வரிக்கு மேலான உயரம் :- 59' 01"
- இராஜ கோபுர மொத்த உயரம் :- 77' 09"
- ஏழு தள உயரங்கள் முறையே :- 9' 04" - 8' 01" - 8' 01" - 8' 01" - 8' 01" - 8' 01" - 9' 04"
- நில மட்டத்துக்கு கீழ் ஆழம் :- 10'
- திருக்கதவு அளவு :- 15' x 10'
- வியாழ வரி வரை கருங்கற்களாலும் அதற்கு மேலுள்ள தளங்கள் செங்கற்களாலும் அமைக்கப்படல் வேண்டும்.
- கோபுரத்தின் நாற்புறமும் முகபுத்திர அமைப்பு / புடைப்பு அமைதல் வேண்டும்.
- கண்ணகி வரலாற்றுடன் தொடர்புபட்ட பாவைகள் உள்ளடங்கலாக, 210 இற்கும் குறையாத, தெய்வீக கலையம்சங்களுடன் கூடிய பாவைகள் அமைக்க கோபுரத்தில் இடம்பெறல் வேண்டும்.
- கூறுவிலையானது அத்திவாரத்திற்கான மண் அகழ்வு தொடக்கம் கலசம் வரையான ஒவ்வொரு தளங்களையும் நிறைவு செய்யத் தேவைப்படும் கூலி, மூலப்பொருள் அளவு, கால எல்லைகளையும் தெளிவாகத் தனித்தனியாகவும் விவரமாகவும் குறிப்பிடுதல் வேண்டும்.
- Raft/ Mat Foundation, Column, Slab, Beam, BOQ தொடர்பான விவரங்கள் அட்டவணைகள், வரைபடங்களுடன் தொழில்நுட்ப விடயங்களை உள்ளடக்கியதாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- கூறுவிலை சமர்ப்பிப்போர் தங்களால் இராஜகோபுர கட்டுமானத்துக்கான மூலப்பொருள்களையும் தருவிக்க முடியுமாயின் அதற்கான பொருள் அளவு மற்றும் செலவுகளை விவரமாகக் குறிப்பிட்டு தனியாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- கூறுவிலை சமர்ப்பிப்போர் தங்களால் செய்யப்பட்ட / செய்யப்படுகின்ற வேறு ஆலய கோபுர திருப்பணிகள் தொடர்பான விவரங்களையும் இணைத்தல் வேண்டும்.

கூறுவிலைகள் **29.08.2018 புதன்கிழமை பி.ப.06.00** இற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக **வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய கருமபீடத்தில்** நேரில் கையளிக்க வேண்டும்.

**கூறுவிலைகள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் 01.09.2018 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு** ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார். அன்றைய தினம் கூறுவிலை சமர்ப்பித்தோர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கட்டாயம் வருகை தருதல் வேண்டும்.


மேலதிக விவரங்களை அறிய தொ.இல. **071 646 4353 அல்லது 021 205 0899** இற்கு தொடர்பு கொள்ளவும்.

**- ஆலய பரிபாலன சபை -**
**வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்.**

(CS/19152)(11,17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 . 08 . 1964



மறைவு 23 . 07 . 2018

### அமரர் கந்தசாமி விஜயகுமார் (மேசன் குமார்)

கடந்த 23.07.2018 இறைபதமடைந்த கந்தசாமி விஜயகுமார் (மேசன்குமார்) அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (22.08.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.42, விநாயகர்புரம்,
இயக்கச்சி, பளை.
077 672 8297 (லக்ஸ்மன்) (AKN/519)(11,17)

குடும்பத்தினர்.

# வடக்கு மீன்பிடித்துறையின் நவோதயம்




## ரூபா 400 மில்லியன் செலவில் தேசிய பொருளாதாரத்துக்கு இன்னுமொரு வலுவூட்டும் முன்னெடுப்பு

### மயிலிட்டி மீன்பிடி துறைமுகம் புனர்நிர்மாணம் மற்றும் மீள் இயங்க செய்வதன் ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்,
வடமாகாண சபை மற்றும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன்,
கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதாரம் பற்றிய பிரதியமைச்சர்
**கௌரவ அமீர் அலி அவர்கள்**
மற்றும்
கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதாரம் பற்றிய இராஜாங்க அமைச்சர்
**கௌரவ திலிப் வெதஆரச்சி அவர்களின்**
பங்குபற்றதலுடன்
கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சர்
**கௌரவ காமினி விஜித் விஜயமுனி சொய்சா அவர்களின்**
அழைப்பின் பேரில்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
**மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களின்**
தலைமையில்
**2018 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி, காலை 10.00 மணிக்கு**
**வரும் சுப வேளையில் மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் நடைபெறும்.**

கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி
மற்றும் கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு

## இலங்கை முதியோர் சுகவாழ்வுக்கழகம்

(துர்க்கா அம்மன் வீதிக்கெதிராக)

கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பழை.

**நூறு ஆண்டுகள் வாழ்க. நோய் நொடியில் இல்லாமல் !**

இலங்கையில் முதன்முதலாக 100 ஆண்டுகள் வாழ்ந்த முதியோர்களை எங்கள் கழகம் கௌரவித்து விசேட சஞ்சிகை வெளியிட்டுள்ளது. நீங்களும் இச்சஞ்சிகையை வாசித்து அவர்களின் வாழ்க்கை முறை களை கடைப்பிடித்து 100 ஆண்டுகள் வாழ்வதற்கு முயற்சிக்கலாம். யுத்தகால நிலையில் 100 ஆண்டுகள் வாழ்ந்தவரை உலகத்தின் "கின்னஸ்" புத்தகத்தில் பதிவிட வேண்டும். சாதனையாளர்களை கௌரவிக்காத எந்த ஒரு நாடும் வளர்ச்சி அடைந்ததில்லை.

துர்க்காதேவி அம்பாளையும் வணங்கிவிட்டு வீடு செல்லும் முன் ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டியாக பிரசுரித்த சஞ்சிகைகள், புத்தகங்கள், எடுத்துக் கொண்டு வாசித்து நீங்களும் ஆரோக்கிய வாழ்க்கையை கடைப்பிடிக்கலாம். மேலும் இயற்கையான உணவுவகைகளும், மென்பானங்களும் உங்களுக்கு விருப்பமானவற்றை எடுத்துச்சென்று உட்கொண்டு நீங்களும் நீண்ட காலம் வாழலாம் தாய் நாட்டுக்கு வரும் புலம் பெயர் தமிழர்களும் நாடு திரும்பும்போது உள்ளூர் உற்பத்திகளை அடுத்த சந்ததிகளுக்கு அறிமுகப் படுத்தினால் தம் தாய் நாட்டுக்குச் செய்யும் மிகப் பெரிய நன்றிக்கடனை பெற்றுக்கொள்வீர்கள்.

Join Our Society, Enjoy A Healthy Ageing Life & Depart Happily

எங்கள் சங்கத்துடன் இணைந்து, மகிழ்வான வாழ்வுடன் விடைபெறுங்கள்!

க. கமலசேகரம், காரியதரிசி

077 663 6554, 077 606 8656


## முதலாம்ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் கந்தையா

திதி:- ஆவணிமாத பூர்வபக்க ஏகாதசி (21.08.2018)

தோற்றம்:- 27.04.1929 | மறைவு:- 02.09.2017

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை!
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம்நினைவில் வாடுகின்றோம்!
எம் வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.

40, வைரவர் கோயில்வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர்.

(CS/19153)(11.17)

## மரண அறிவித்தல்

### திருமதி சோதிமணி அமிர்தலிங்கம்

(மகாஜனக் கல்லூரி பழைய மாணவி, ஓய்வுபெற்ற முன்பள்ளி ஆசிரியை)



பிறப்பு 13.01.1949 | இறப்பு 17.08.2018

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை தற்காலிக வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி சோதிமணி அமிர்தலிங்கம் 17.08.2018 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) - விசாலாட்சி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் (முன்னாள் சமூக சேவைகள் உத்தியோகத்தர், சண்டிலிப்பாய்), அன்பு மனைவியும், ஜானகி (பிரான்ஸ், மகாஜனக் கல்லூரி பழைய மாணவி), சனந்தனன் (பொறியியலாளர் - நியூசிலாந்து), அம்புஜன் (பிரான்ஸ் - மகாஜனக் கல்லூரி பழைய மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிந்தாமணி பரராசர் வாமதேவன் (ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்), குகமணி (ஆஸ்திரேலியா), கலாநிதி தேவதாசன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சாரதாமணி (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் கொங்காமணி (ஜெயபம் - ஐக்கிய இராச்சியம்), ஆனந்தகுமாரன் (நெதர்லாந்து), புராந்தகன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாதன் (பிரான்ஸ்) லாவண்யா (நியூசிலாந்து), சஜித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாதுர்யன், வர்ஷா, அபினன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவப்பிரகாசம், ஆசிரியமணி பஞ்சாட்சரம் (ஓய்வுபெற்ற அதிபர்), குமாரசாமி (ஓய்வுபெற்ற பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர்), வேல்சாமி (பொறியியலாளர்), பீட்டர் பொன்கலன் (முன்னாள் பிரதேச சபை தலைவர், நெடுங்கேணி) மற்றும் செல்வரெட்ணம் (ஐக்கிய இராச்சியம்), பாலசுந்தரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சௌந்தராம்பிகை (ஆஸ்திரேலியா), இந்திராதேவி (நெதர்லாந்து) உஷா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2018) புதன்கிழமையும், தகனக்கிரியை 23.08.2018 வியாழக்கிழமையும் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - பிள்ளைகள்

ஜானகி - 0033952900939, சனந்தனன் - 0064212879228,
அம்புஜன் - 0033695030140

பஞ்சாட்சரன் (கனேசன்-அதிபர், இலங்கை) - 0765787488

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் திரு.க.சிவநேசன்

அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சின்னம்மா கயிலாயபிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர் நலன்புரிச் சங்கம்,
சாவகச்சேரி பிரதேசசபை.

(IN/7575)(11.17)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**ஆதன இல- 18/10, ஞானசம்பந்தர் வீதி, 2ஆம் ஒழுங்கை, வட்டாரம் - 09**

வலிகாமம் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட வட்டாரம் - 09, ஞானசம்பந்தர் வீதி, 2ஆம் ஒழுங்கையிலுள்ள இல.18/10 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் திருமதி P. வேலுப்பிள்ளை என்னும் பெயரில் காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனமானது வேலுப்பிள்ளை மனோராசன் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4352/30.01.2003 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் ஆரம்பத்தில் ஆறுமுகம் பெண் வள்ளியம்மைக்குச் சொந்தமாகவிருந்ததென்றும் அவர் இறந்த பின்னர் குறித்த வேலுப்பிள்ளை மனோராசனின் பிதா ஆறுமுகம் வேலுப்பிள்ளை உரிமையாக வந்தடைந்தது எனவும் குறித்த ஆறுமுகம் வேலுப்பிள்ளை இறந்த பின்னர் தனக்கு முதுசமாக வந்தடைந்தது எனவும் ஆகையினால் குறித்த ஆதனம் தனக்கே சொந்தமும் உரித்துமானது எனவும் வெளிப்படுத்தியிருந்தார்.

துரையப்பா மகள் யோகேஸ்வரி பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4386/05.02.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை மனோராசன் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

துரையப்பா மகள் யோகேஸ்வரி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது துரையப்பா மகள் யோகேஸ்வரி ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தவிசாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

CS/19158)(11.17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 21 . 01 . 1950 | மறைவு 22 . 07 . 2018

### அமரர் முருகேசு கிருஷ்ணபிள்ளை

கடந்த 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முருகேசு கிருஷ்ணபிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.08.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காந்தியூர், புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்.
076 372 9734

(IN/7574)(11.17)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### நல்லநாதன் நாகேஸ்வரன் ஆசாரியார்(வேலணை)



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 80/6, ஸ்ரீநகர் பூந்தோட்டத்தை தற்காலிக வசிப்பிடமாகவும்கொண்ட நல்லநாதன் நாகேஸ்வரன் 19.08.2018 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லநாதன் - பகவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை - கலாநிதி தம்பதிகளின் அன்பு மருமகனும், அருள்மொழியின் அன்புக் கணவரும், கம்சிகா, கிருஷ்ணர், ரிசாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராதிகா, யோகேஸ்வரன், கவிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், லதா, சுரேஸ், சதீஸ், கமலன், நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2018) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் வேலணை வங்களாவடியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலணை தெற்கு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை.

தகவல்
குடும்பத்தினர்.

0779547048

## வடகிழக்கு...

டுள்ளது.

இதேவேளை, சிறப்புச் செயலணியில் வடக்கு மாகாண முதலமைச்சரின் பெயர் உள்ளடக் கப்பட்டிருந்தபோதும், கடந்த மாதம் இடம் பெற்ற முதலாவது கூட்டத்தை முதலமைச்சர் புறக்கணித்திருந்ததுடன், இதில் பங்கேற்கப் போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத் திக்கான அரச தலைவர் சிறப்புச் செயலணி, மைத்திரிபால சிறிசேனவினால் அமைக்கப் பட்டது. 48 பேர் அதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த ஜூலை 30ஆம் திகதி செயலணியின் முதலாவது கூட்டம் நடைபெற்றிருந்தது. கூட் டத்தின் முடிவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் அழைக் கப்படவில்லை என்று அரச தலைவர் மைத்திரி பால தனது உயர் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியிருந்தார். கூட்டமைப்பை அழைக் காமை தொடர்பில் தனது உயர் அதிகாரிக ளைக் கடிந்திருந்தார்.

எதிர்வரும் 27ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு, அரச தலைவர் செயலகத்தில் செயலணியின் இரண்டாவது கூட்டம் நடைபெறவுள்ளது. அதற்கான அழைப்புக் கடிதம் அரச தலைவர் செயலகத்தினால் நேற்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடி தம் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன், அடுத்த கூட்டத்தில் ஆராயப்படவுள்ள விடயங்களுடன் தொடர்புடைய மாவட்டச் செயலர்களுக்கும் அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள் ளதாக அறிய முடிகின்றது. (5)

## வட, கிழக்கை...

சி.வி.விக்னேஸ்வரன்.

ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். இலங்கையில் நிரந் தர அமைதியை ஏற்படுத்துவதற்கான கார ணிகளை ஆராய்வதற்காக அவர்கள் வந்தி ருந்தனர். அவர்கள் வடக்கு முதலமைச்சரைக் கைதடியில் உள்ள அவரது செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். அந்தச் சந்திப் புத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார் முதலமைச்சர். அவர் தெரிவித் ததாவது:

தமிழ் மக்கள் சம மதிப்புடன் வாழும் நிலை ஏற்பட்டால் மட்டுமே அமைதியையும், நல்லி ணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். மக்கள் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற் படுத்த முடியாது என்ற விடயத்தை அவர்க ளுக்குச் சுட்டிக்காட்டினேன்.

வடக்கு மாகாணத்தில் இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது பற்றியும், மகாவலித் திட் டம் தொடர்பிலும் அவர்களுக்கு விளக்கினேன்.

முன்னாள் போராளிகள் தொடர்பாக அவர் கள் கேட்டனர். முன்னாள் போராளிகளை முகாம்களில் வைத்திருந்தபோது அவர்களில் பலரை இராணுவத்தினர் தம் வசமாக்கியுள்ள னர். தமக்குத் தேவையான தகவல்களைப் பெற முன்னாள் போராளிகளை இராணுவம் பயன்படுத்துகின்றது. முன்னாள் போராளிக ளின் வாழ்க்கை நிலை உயர்ந்தாலும், அவர் கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கின்றனர் என்பதைக் குறிப்பிட்டேன்.

சமூகத்தில் முன்னாள் போராளிகள் தொடர் பான கரிசனை இருக்கின்றது. முன்னாள் போராளிகளுடன் இணைந்திருப்பதற்கு கிராம மக்கள் தயங்கும் நிலையும் காணப் படுகின்றது. அவ்வாறு முன்னாள் போராளிக ளைத் தவிர்க்க இயலாது. அரசும், வடக்கு மாகாண சபையும் இணைந்து முன்னாள் போராளிகள் தொடர்பான செயற்றிட்டங் களை நடைமுறைப்படுத்தவேண்டும். அவ் வாறான செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடைமுறைப்படுத்துகின்றோம் என்றும் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

அறியாத பல விடயங்கள் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளோம் என்று அவர்கள் தெரிவித் தனர் - என்றார். (ற-106)


காணி விற்பனைக்கு

076 697 2287

## பெயர் மாற்றம்

புதுத்தோட்டம் பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **செல்லன் புதுனசாமி** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **செல்லன் புனிதராசா** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

(AC/5484)(1.37)

**செல்லன் புனிதராசா**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும்-நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17.12.1997 | 08.07.2018 |

### அமரர் செல்வி காண்டீபன் விபூஷனி

(யா/இராமநாதன் மகளிர் கல்லூரி வர்த்தகப்பிரிவு - 2018)

படிப்பினிலே உயர்ச்சி பெற்று பார்புகழ வாழ்வா யென்றா
காலன் உனை அழைத்துக் காதவழி சென்றானம்மா!
அறநெறி தவறாது அன்பு கொண்டு அக்கம்பக்கம் சுற்றம் எல்லாம் அனுசரித்து
உறவினர்கள், நண்பர்கள் உள்ளமெல்லாம் நிறைவான
எண்ணங்கள் நிலைக்க வைத்தாய் - இன்று
நீ இல்லாமல் நிலை குலைந்து நிற்கின்றோம்.


அன்னாரின் இறப்புச் செய்தியை கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும் எம்முடன் சேர்ந்து துன்ப துயரங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (21.08.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 29.06.1930 | 18.08.2018 |

### யோசப் கிறிஸ்தோப்பர்

யாழ். அப்பன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யோசப் கிறிஸ்தோப்பர் 18.08.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் கிறிஸ்தோப்பர் - எலிசபெத் பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான எட்வேட் பாலசிங்கம் கிறேஸ் செல்வம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரூசன் மேரிராணியின் ஆருயிர்க் கணவரும், றொகான் (நோர்வே), நேசன் (நோர்வே), நாதன் (நோர்வே), அனற் செல்வினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கிறேஸ் அற்புதமலர் மற்றும் அருட்சகோதரி பெனிக்னா, J.E.கிறிஸ்தோப்பர், லூட்ஸ் தவபாலர், அருட்தந்தை C.A.G.கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அன்புராஜா, குணேடியா, தவசிங்கம் எட்வேட், கனிஸ்ரா ஆனந்தராணி மற்றும் மைக்கல், பூலியன் எட்வேட் ஆகியோரின் அருமை மைத்துனரும், துளசி, சிவராணி, யோகேஸ்வரி, மகிழ்ராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சயந்தன், நிஷேவிதா, அஜந்தன், கௌசிகா, அனோஜன், கரோலின், கிறிஸ்ரி ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் நாளை (22.08.2018) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பன் வீதி,

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS/19104)(1.1.17)

**021 221 9625, 071 350 6134**

Galaxy Star
வெற்றி வாரம் 265 / திகதி 19.08.2018
வெற்றி இலக்கங்கள்
06 | 06 17 58 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4,038,464/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1493
சீட்டிழுப்பு திகதி 20.08.2018
வெற்றி இலக்கங்கள்
11 15 22 53 R
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ 33, 111, 544=
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3072 திகதி:2018.08.20
திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
08 15 40 43 U 50
38,157,615/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 348
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.08.20
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 61,802,140/-
அத கோடிபதி
வெற்றி இலக்கங்கள்
27 30 35 54 C
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## ஈர விழிகளுடன்
## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பெஞ்சமின் குணநாயகம்



தோற்றம்
03.03.1946

மறைவு
21.08.2015

ஆண்டுகள் மூன்று ஆனாலும் ஆறுமோ எம் துயர்
வாழ்வில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் உம்மை மறவோம்
உம் பிரிவால் துயருறும்

154, கோவில் வீதி, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
21.06.1948


மறைவு
22.07.2018

### அமரர் கந்தையா சண்முகலிங்கம்

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும் ஒரு கூட்டுக்கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி நேர் வழியில் வைத்த
எம் குடும்ப சூரியன் எம் அன்புத்தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி எந்நாளும் வணங்குகின்றோம்.

57/25, நிருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**



# விசமிகள் இட்ட தீயில் எரிந்து கருகின தென்னை, பனைகள்

## விசுவமடுவில் நேற்று இரவு சம்பவம்

விசுவமடு, ஒக. 21

விசுவமடு பிரமந்தனாறு வீதியில் உள்ள பனை மரங்கள், மற்றும் தென்னைமரங்கள் நேற்று இரவு பற்றியெரிந்தன. இனந் தெரியாத நபர்களால் பனைகளுக்கு தீ வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி விசுவமடு. பிரமந்தனாறு வீதியில் புன்னைநீராவியடிப் பகுதியிலேயே சம்பவம் இடம்பெற்றது. நேற்று இரவு 9. 30 மணியளவில் பனை மரங்கள்பற்றி எரிந்தன. ஒரு சில பனைகளுக்கு வைக்கப்பட்ட தீ அங்குள்ள பல பனைமரங்களுக்கும் பரவியது. அதிலிருந்து தென்னைகளுக்கும் பரவியது. அந்தப் பகுதி இளைஞர்கள் தீயைக்கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கினர். பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்தனர். சலிப்படையாத இளைஞர்கள் தண்ணீர் கொண்டு தீயைக் கட்டுப்படுத்தினர். சுமார் 50 பனைமரங்களும், 10 தென்னைகளும் தீயில் எரிந்து நாசமாகின. தீயின் தழல்கள் நிலத்தில் பரவி அதனூடாகவும் தீ பரவ முயற்சித்தது. எனினும் இளைஞர்கள் இரவிரவாக முயற்சித்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். நடைபெறவிருந்த பெரும் ஆபத்து இளைஞர்களின் முழு முயற்சியால் காப்பாற்றப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தீயணைக்கும் படை தயாராகவில்லை. அதற்கென கட்டடம் அமைக்கப்பட்டு, உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எனினும் தீயணைப்புப் படை ஒன்று இது வரை உருவாக்கப்படவில்லை. இதனால் அங்கு இது போன்ற பெரும் துயரச் சம்பவங்கள் தொடர்ந்தும் அரங்கேறுகின்றன. எனவே விரைந்து தீயணைப்புப் படையை உருவாக்க வேண்டும் என்று பலரும் கேட்டுக் கொண்டனர். (21)

## இலங்கையில்...

பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த ஜூலை மாதம் டிஜிபோட்டியில் சீனா தனது இராணுவத் தளம் ஒன்றை அமைத்த சில மாதங்களில் இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வசப்படுத்தியுள்ளது.

பீஜிங்கின் நலனுக்காக ஏனைய நாடுகளின் நலன்களை வடிவமைக்கும் நோக்கத்தை இது கொண்டுள்ளது. இந்தத் திட்டங்களால் சீனாவின் மூலதனத்தைச் சார்ந்திருக்கும் நிலை இந்த நாடுகளுக்கு ஏற்படுத்தப்படக்கூடும்.

இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகம் இதற்கு உதாரணம். கடனுக்குப் பதிலாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன அரசு குத்தகைக்குப் பெற்றுள்ளது என்றுள்ளது. (ற)

## சம்பந்தனின்...

சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கை இணைக்கின்றோம். இனவாதத்தைத் தூண்டுகின்றோம் என்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மகிந்த அணியினால் முன்வைக்கப்படுகின்றன. அவை அனைத்துமே பொய். இன்று தமிழர்கள் அரசை ஆதரிக்கின்றனர். தமிழ் மக்கள் தமது கட்சியை நம்புவதை விடவும் அரசை நம்புகின்றனர்.

முதன்மையான இரண்டு கட்சிகளைச் சார்ந்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் செயற்படுகின்றனர். இதற்கு முன்னர் அவ்வாறு இருந்ததில்லை. மகிந்த சிறந்த தலைவர். போரை வெற்றிகொண்ட தலைவர். அவரால் தமிழ் மக்களைத் தக்கவைக்கவோ அவர்களின் மனங்களை வெற்றிகொள்ளவோ முடியாது போய் விட்டது.

இதுவே எமக்கு மிகப்பெரிய தோல்வியாக அமைந்தது. ஆனால் அரசு தலைவர் மைத்திரிபால சிறிசேன தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் மனங்களை வெற்றிகொண்டு நாட்டில் நல்லிணக்கத்தைப் பலப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். சிங்கள மக்களின் முழுமையான ஆதரவுடன் தமிழ் மக்களுக்கான தீர்வு வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வெளிப்படையாகத் தெரிவிக்கும் அளவுக்கு நாம் தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொண்டுள்ளோம். இதுவே நல்லாட்சியில் எமக்குக் கிடைத்த வெற்றி. இந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் தீர்வுகள் குறித்து உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார். (உ-5.31)

## வடமராட்சி...

மொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அதை மீறி இரவில் கடல் அட்டை பிடிப்ப தற்குரிய அனுமதி உள்ளிட்ட நடைமுறைகள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத் தால் அனுமதிக்கப்பட்டன. இதனை அடுத்தே அரச தலைவரின் வருகையின் போது பெருமெடுப்பில் போராட்டத்தில் குதிப்பதற்கு வடமராட்சி மீனவர் சங்கங்கள் முடிவெடுத்து அறிவித்தன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இன்று இரவு 7 மணிக்கு யாழ். நகரில் உள்ள விடுதி ஒன்றில் கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சருடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கடற்றொழிலாளர் சம்மேளனம் மீனவர் சங்கங்களுக்குத் தெரிவித்ததை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

### மீனவர்கள் கைது

வடமராட்சி கிழக்குக் கடற்பரப்பில் அனுமதியின்றி கடலட்டை பிடித்தனர் என்று தெரிவித்துக் கடற்படையினரால் 81 மீனவர்கள் கடந்த சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவர்களின் 27 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

ஆனால் அவர்களிடம் இரவில் நீரில் மூழ்கிக் கடலட்டை பிடிக்க அனுமதி உண்டு என்று தெரிவித்து அன்று மதியம் அவர்கள் கடற்படையினரால் விடுவிக்கப்பட்டனர். ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே இவர்களைக் கைது செய்தனர்.

அவர்களின் படகுகள், தொழில் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டுக் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்கள் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் மதியமளவில் கைது செய்யப்பட்டவர்களிடம் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதி உள்ளது என்று தெரிவித்தனர். அதையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர். அதனால் அந்தப்பகுதி மீனவர் அமைப்புக்களும், மீனவர்களும் கொதிப்படைந்தனர். கடற்படை முகாம் முன்பாகக் கூடி வாதிட்டனர். போராட்டத்துக்கான அறிவிப்பையும் விடுத்தனர்.

### போராட்டம் இல்லை

இந்த நிலையில் அரச தலைவர் வரவின் போது நடத்தப்படவிருந்த போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று வடமராட்சி கடற்றொழில் சமாசத் தலைவர் வர்ண குலசிங்கம் நேற்று உதயன். பத்திரிகையிடம் தெரிவித்தார்.

"இன்று மீன்பிடி அமைச்சருடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடற்றொழில் சம்மேளனத்தால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் முடிவு எட்டப்படாவிட்டால் பெரும் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்படும், நாளை இரவு வடமராட்சி சம்மேளனத்துக்குட்பட்ட மீனவர் தொழிலுக்குச் செல்லாது பணி நிறுத்தம் செய்கின்றனர். இதுவே இறுதிச் சந்தர்ப்பம்" என்று அவர் தெரிவித்தார்.

வடபகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான இன்று இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

### முன்னரும் சந்திப்பு

வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் தங்கியிருந்து கடலட்டை பிடிப்பது தொடர்பாக முன்னரும் கொழும்பில் சந்திப்பு நடந்திருந்தது. கொழும்பு அரசின் மீன்பிடி அமைச்சருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மீன்பிடி அமைச்சருக்கும் இடையே இந்தச் சந்திப்பு நடந்தது.

பகலில் மட்டுமே கடலட்டை பிடிக்கலாம், ஒரு படகில் இருவர் மட்டுமே கடலில் மூழ்கிக் கடலட்டை பிடிக்கச் செல்லலாம், கடற்கரையில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பாலே கடலட்டை பிடிப்பில் ஈடுபடலாம், லைலா சுருக்கு வலை, லைலா வலை என்பவற்றைப் பயன்படுத்த முடியாது என்பது போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு அதில் விதிக்கப்பட்டன.

### காற்றில் பறந்த வாக்குறுதி

எனினும் கடந்த சனிக்கிழமை இரவு வேளை கடலட்டை பிடித்தபோதே 81 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இரவில் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதி இருந்தது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறி உள்ளூர் மீனவர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ தெரியாமல் இந்த அனுமதி கடந்த 15ஆம் திகதி கொழும்பில் இருந்து வழங்கப்பட்டுள்ளது. (ற-29.113)

## விக்கியின்...

மிட்டுள்ளார் என்ற வடக்கு முதலமைச்சரின் கூற்றை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மறுத்துள்ளார்.

விகாரைகள் கட்டப்படவுள்ளன என்று குற்றஞ்சாட்டியுள்ள வடக்கு முதலமைச்சர் அவை எந்த இடத்தில் கட்டப்படவுள்ளன என்பதையும் கூற வேண்டும் என்று ஆளுநர் சவால் விடுத்துள்ளார்.

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்த பின்னர் கிளிநொச்சியைச் சிங்கள பௌத்த மயமாக்க ஆளுநர் திட்டமிட்டுள்ளார். இரண்டு விகாரைகளைக் கட்டுவதற்கு ஆளுநர் செயலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியிருந்தார். (ற)

## கேக்...

திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கடை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கேக் விற்பனை நிலைத்தில் இருந்து முன்னரும் இரு தடவைகள் போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படும் நிலையில் 3ஆவது தடவையாகவும் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

"பாடசாலை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் மாவை போதைப் பாக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் இயங்கும் சிறப்புப் பிரிவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதையடுத்து நேற்று ஐந்து சந்தியில் உள்ள கேக் விற்பனை நிலையம் சிறப்புப் பொலிஸ் பிரிவால் முற்றுகையிடப்பட்டது. அங்கு 30 பைக்கட்டுக்களாகப் பொதி செய்யப்பட்ட நிலையில் ஒரு கிலோ மாவாப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது" என்று பொலிஸார் தெரிவித்தனர். அவற்றை விற்பதற்கு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கடை உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### முன்னரும் கைது

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் கேக் விற்பனை நிலையம் என்ற பெயரில் இயங்கிய மாவா விற்பனை நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டது. வடக்கு மாகாண மூத்த பொலிஸ் மா அதிபர் றொசான் பெர்ணான்டோ பணிப்புக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வியாபார நிலையத்தில் கடமையாற்றிய 3 பேரும், மாவாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 4 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். யாழ். குடாநாட்டுக்கு மாவா போதைப்பொருளை வழங்கும் முதன்மை சந்தேநபர் புத்தளத்தில் உள்ளார் என்றும், அவரையும் ஏனைய சிலரையும் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் அப்போது மன்றுக்குத் தெரிவித்திருந்தனர்.

கடந்த 7ஆம் திகதியும் ஐந்துசந்தியில் உள்ள கேக் விற்பனை நிலையத்தில் பெருந்தொகை மாவா போதைப் பாக்குக் கைப்பற்றப்பட்டிருந்தன. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

### மக்கள் விசனம்

ஐந்துசந்திப் பகுதியில் கேக் விற்பனை நிலையத்தில் இருந்து போதைப் பொருள்கள் கைப்பற்றப்படுவது வழமையான செயற்பாடாகியுள்ளது. பொலிஸாரால் கைதுகள் நடைபெறும் நிலையில் தொடர்ச்சியாக அங்கு போதைப் பொருள் விற்பனை நடைபெறுவது எவ்வாறு என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். கைதுகளின் பின்னரும் அச்சமின்றிப் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதால் இதற்குப் பின்புலப் பாதுகாப்பு இருக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ற-106)

## உயிரிழந்த....

பிடிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, கடைவீதியில் வாடகைக்கு அறையெடுத்துத் தங்கிருந்த முதியவர் ஒருவர் அவரது அறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், வேலணையைச் சேர்ந்த கந்தசாமி (வயது-61) என்பவரே உயிரிழந்தார். நேற்று அதிகாலை 3.30 மணியளவில் அவர் அறையை வாடகைக்குப் பெற்றுள்ளார். மு.ப. 10 மணியான பின்னரும் அவர் வெளியே வராததால் விடுதிப் பணியாளர்கள் அறையைத் திறந்து பார்த்துள்ளனர். அப்போது அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, வவுனியா கோயில்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

கோயில்குளம், 5ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த க. கதிர்ச்செல்வன் (வயது-30) அறையில் போர்வையில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார். மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பாகவே அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவை தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-110)

# பிக்கப் விபத்தில் மூவருக்கு காயம்



கிளிநொச்சி, ஒக. 21

கிளிநொச்சி, முழங்காவிலில் நேற்று நடந்த விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

முழங்காவில் 19ஆம் கட்டைப் பகுதியில் காலை 6.30 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது. பிக்கப் ரக வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளாகியது. எதிரே வாகனம் வருவதைக் கண்டு சடுதியாகத் திருப்ப முற்பட்டபோது இந்த விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. பிக்கப் ரக வாகனத்தில் பயணித்தவர்களே காயமடைந்தனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-6)

# சீமெந்தினாலான வீதி வேண்டாம் நெடுந்தீவில் நேற்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக. 21

கொங்கிறீட் வீதி வேண்டாம் என்று தெரிவித்து நேற்று நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அது தொடர்பான மனு ஒன்றும் பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையிலும், போக்குவரத்துப் பிரச்சினை யைப் போக்கும் வகையிலும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் 7 கொங்கிரீட் வீதி அமைத்தது. இதனை அங்குள்ள ஒரு தரப்பு மக்கள் வரவேற்றிருந்தனர். இந்த நிலையில்



ஒரு தொகுதியினர் குறித்த வீதி எமக்கு வேண்டாம் எனக் கூறி நேற்று போராட்டத்தில் ஈடுப்பட்டதுடன் வடக்கு மாகாண ஆளுநர், மாகாண முதல்வர், பிரதேச செயலர் ஆகியோருக்கு மனுக் கொடுத்துள்ளனர். (21.8)

## குடாக்கடலில்...

யாழ். மாநகர சபை ஆணையாளரும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்று நடை பெற்றது. அதில் உறுப்பினர் ம.அருள்குமரன் இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையின் உயிரியல் கழிவுகளை அகற்றும் பொறுப்பு தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் உயிரியல் கழிவுகளைச் சுத்தம் செய்யாது நேரடியாகக் கடலுக்குள் கொட்டுகின்றது. இது மிக ஆபத்தான விடயம். இந்தச் செயற்பாட்டால் கடல் வளம் பாதிக்கப்படும். கடற்றொழில் செய்பவர்களுக்கும் ஆபத்தை ஏற்படும்.

மருத்துவமனை நிர்வாகம் இந்த நிறுவனத்துக்கு அதிக கட்டணம் செலுத்துகின்றது. ஆனால், அந்த நிறுவனம் தனது பணியைச் சரியாகச் செய்யாது சிறைச்சாலைக்கு அண்மித்த பகுதி ஊடாகக் கழிவுகளை கடலுக்குள் கொட்டுகின்றது. இந்த விடயத்தில் மாநகர சபையினர் நேரடியாகத் தலையிட முடியாதுள்ளபோதும், மருத்துவமனை நிர்வாகத்துடன் பேசி உரிய தீர்வை உடன் காண வேண்டும் என்றார்.

சபை உறுப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டு உண்மையானது. நாமும் இது தொடர்பில் ஆராய்ந்து பார்ந்தோம். மருத்துவமனை உயிரியல் கழிவுகள் நேரடியாகக் கொட்டப்படுகின்றன. இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் உள்ளோம். அதற்கான சட்டவலு எம்மிடம் இல்லை என்று சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மருத்துவமனைப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும் என்று சபை முதல்வர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கான பதிலைப் பெற யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் எஸ்.சத்தியமூர்த்தியைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் அது பயனளிக்கவில்லை. (உ-ற-8)

## யாழ்...

தலைக் கண்டித்து நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை மருத்துவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

"மக்கள் சேவை, பரிசு வாள்", "தலைவிரித்தாடும் வன்முறை பின்னணியில் யார்?", "பொதுமக்கள் வாழ்க்கைக்கான இடையூறை இல்லாமல் செய்", "யாழ். மண் சட்ட ஒழுங்கு யார் கையில்?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக அவர்கள் சிறிது நேரம் நின்றிருந்தனர்.

"மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவும் இந்த மருத்துவ மனையில் 150 மருத்துவர்கள் வரையானாரே சேவையாற்றி வருகின்றோம். இப்படியான வன்செயல்கள் மத்தியில் நாம் அச்சத்துடன் சேவையாற்ற முடியாது. எமது பாதுகாப்பு கேள்விக்குள்ளாகி இருக்கின்றது. இதுபோன்ற செயல்கள் தொடர்ந்தால் இரவு வேளைகளில் சேவை செய்வது தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டி வரும். மருத்துவர் வீடு தாக்கப்பட்டது தொடர்பில் பொலிஸார் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படியே போனால் இந்தப் போராட்டம் விரிவுபடுத்தப்படும்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவர்கள் வலியுறுத்தினர்.

"இது ஒரு பாரதூரமான விடயம். குற்றவாளிகள் உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டும். பொலிஸாரால் இவர்களைக் கைதுசெய்யமுடியும். மருத்துவமனையில் தற்போது குழப்பம் நிலவுகின்றது. அனைத்து உத்தியோகத்தர்களும் பதற்றத்தில் உள்ளார்கள். சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை பற்றி எமக்குத் தெரியப்படுத்தவேண்டும். அப்போதே மருத்துவமனை சுமுகமாக இயங்க முடியும்" என்று மருத்துவமனைப் பணிப்பாளர் எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் சம்பியன் வீதியில் உள்ள மருத்துவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் இரவு வந்த கும்பல் வீட்டிலிருந்த பொருள்கள், யன்னல் கண்ணாடிகள் என்பவற்றைத் அடித்து நொருக்கியது. 3 உந்துருளிகளில் வந்த சுமார் 6 பேர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண மூத்த பொலிஸ் மா அதிபர் கூறியிருந்த 12 மணி நேரத்துக்கு இந்தச் சம்பவம் நடந்தது. (ற-7)

## இந்தியாவுக்குப்...

செலவில் அந்தப் பணியை முன்னெடுப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படவுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று காலை இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

பலாலி வானூர்தித் தளத்தை பிராந்திய வானூர்தி நிலையமாகத் தரமுயர்த்துவதற்கு அரசு முடிவெடுத்துள்ளது. இந்தப் பணிகளை இந்திய அரசு முன்னெடுப்பதற்கு இணங்கியிருந்தது. பலாலி வானூர்தித் தளத்திலிருந்து உடனடியாகத் தமிழகத்துக்கான வானூர்திச் சேவைகளை ஆரம்பிப்பது என்றும், அதற்குரிய அடிப்படை அபிவிருத்திப் பணிகளை மாத்திரம் முதலில் முன்னெடுப்பது என்றும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தியத் தூதுவர் இடையிலான சந்திப்பில் முடிவு செய்யப்பட்டிருந்தது. தமிழகத்துக்கான வானூர்திச் சேவையை ஆரம்பித்த பின்னர் பிராந்திய வானூர்தி நிலையமாக பலாலியை மாற்றுவதற்குரிய ஏனைய அபிவிருத்திப் பணிகளைத் தொடங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து வானூர்திகள் உள்வருவது, வெளிச்செல்வதற்காக பாதை வரைபடம் வரையும் பணி பொது வானூர்தித் திணைக்களத்தினால் ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், சிவில் வானூர்தித் திணைக்களம் தன்னிடமுள்ள 900 மில்லியனை பலாலியை அபிவிருத்தி செய்யப் பயன்படுத்தவுள்ளது. அதற்கு மேலதிகமாக ஆயிரம் மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்டால், தமிழகத்துக்கான வானூர்திச் சேவையை ஆரம்பிப்பதற்குரிய அடிப்படை அபிவிருத்திப் பணிகளை 6 மாதங்களுக்குள் முழுமை செய்து தரலாம் என்று தலைமை அமைச்சரின் அமைச்சருக்கு அறிவித்துள்ளது. அதன் பின்னர் பிராந்திய வானூர்தித் தளமாகப் பலாலியைத் தரமுயர்த்துவதற்குரிய ஏனைய அபிவிருத்திப் பணிகளை இந்திய அரசின் ஊடாக முன்னெடுக்கலாம் என்றும் பொது வானூர்தித் திணைக்களம் யோசனை முன்வைத்துள்ளது.

இதனையடுத்து, தலைமை அமைச்சரின் அமைச்சு, பொது வானூர்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு, சுற்றுலா அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களும் இணைந்து ஆயிரம் மில்லியன் ரூபாவை பொது வானூர்திப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு வழங்கும் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சரின் அமைச்சின் ஊடாக தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (உ-5)

## இயலாத்...

பில்கூட முதலமைச்சர் உண்மையை உரைக்கவில்லை. வெற்றிடத்தை நிரப்புவதற்கு மாகாண சபை எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் என்ன என்பதே எனது இந்தக் கூற்றின் நியாயத் தன்மை. 'இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபையினால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை' என்று இது தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை அதை நிரூபிக்கின்றதாக அமைகின்றது" என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட கேள்வி, பதில் ஊடக அறிக்கையில், வடக்கு மாகாண நிர்வாகத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பத் தகுதியானவர்கள் இங்கு இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். கொழும்பு அரசினால் வெற்றிடங்களில் ஒரு தொகுதி நிரப்பப்படவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். வெற்றிடங்கள் நிரப்பப்படாமை வடக்கு அரசின் செயற்றிறன் இன்மை என்று கூற முடியாது எனவும், அப்படித் தெரிவிப்பதானது தேர்தலை இலக்காகக் கொண்ட செயற்பாடு என்றும் கூறியிருந்தார். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தானே தயாரித்து அனுப்பியுள்ள கேள்வி பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**கேள்வி:** தேர்தலை இலக்கு வைத்தே மாகாண சபை மீதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார். நீங்கள் தான் மாகாண சபை மீதான பல குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர் என்ற வகையில் இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?

**பதில்:** மாகாண சபையின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளை நான் 2014ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக எடுத்துக் கூறி வருகின்றேன். அரசமைப்பு ரீதியாக மாகாண சபைக்குரிய முக்கிய வகிபாகம் நிறைவேற்றுச் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக இருக்கும் முதலமைச்சரும் அமைச்சரவையும் மாகாண சபைக்கு பொறுப்பு கூறல்வேண்டும் என்பதாகும். சபையில் என்னால் கேட்கப்படும் கேள்விகளுக்கு முதலமைச்சரோ, அமைச்சர்களோ பொறுப்பாகப் பதில் வழங்குவது கிடையாது. மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்ற முறையில் மாகாண சபையின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளை ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது எனது கடமையெனக் கருதி செயற்படுகின்றேன். இதனைத் தேர்தலை நோக்காக கொண்டது எனக் கூற முனைவது இயலாத் தன்மையை மூடி மறைப்பதற்கான வர்ணம்.

**உண்மையை உரைக்கவில்லை**

வடக்கு மாகாண சபையில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பில்கூட முதலமைச்சர் உண்மையை உரைக்கவில்லை. இதில் முக்கிய விடயம் இந்த வெற்றிடங்களை யார் நிரப்புவது, எவ்வாறு நிரப்புவது என்பது அல்ல. மாறாக இவற்றினை நிரப்புவதற்கு மாகாண சபை எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் என்ன என்பதே ஆகும். எனது இந்தக் கூற்றின் நியாயத் தன்மையை 'இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண சபையினால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை' என்று இது தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை நிரூபிக்கின்றதாக அமைகின்றது.

உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில் கடந்த ஜுன் மாதம் 30ஆம் திகதி வரை பாடசாலைகள் தவிர்ந்த வடக்கு மாகாண சபையின் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களாவன, மூத்த நிலை 590, மூன்றாம் நிலை 123, இரண்டாம் நிலை 4,672, ஆரம்ப நிலை 2 ஆயிரத்து 63, சேவை நிலை குறிப்பிடாதவர்கள் 62 பேர் என மொத்தமாக 7 ஆயிரத்து 510 ஆகும்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆயிரத்து 791 ஆக இருந்த வெற்றிடப் பட்டியல் 2016ஆம் ஆண்டு டிசெம்பரில் 2 ஆயிரத்து 957 ஆகக் குறைந்து இன்று 7 ஆயிரத்து 510 ஆக உயர்வடைந்துள்ளது. 2015ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து கடந்த ஜுன் மாதம் வரை இரண்டாம் நிலையில் 2 ஆயிரத்து 742 நியமனங்களும் ஆரம்ப நிலையில் 189 நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளது.

மூத்த நிலை மற்றும் மூன்றாம் நிலை அதிகாரிகள் மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களில் சில சேவைகளைச் சேர்ந்தவர்கள், கொழும்பு அரசினால் ஆள்சேர்ப்புச் செய்யப்பட வேண்டியவர்கள். இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கொழும்பினால் ஆள்சேர்ப்புச் செய்யப்படல் வேண்டும் என்பதற்காக அவர்கள் செய்யவில்லை என அவர்கள் மேல் குற்றம் சுமத்தி விட்டு நாம் தப்பித்துக் கொள்ள முடியாது.

**அக்கறையில்லை**

மக்கள் மீது நாம் உண்மையில் அக்கறை கொண்டவர்களாக இருப்பின் வெற்றிடங்களை நிரப்புமாறு அதற்கான நியாயப்பாடுகளுடன் தொடர்ச்சியான அழுத்தங்களை கொழும்பு அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்குக் கொடுத்திருத்தல் வேண்டும். அவ்வாறாக நியாயப்பாடுகளுடனான அழுத்தங்களை முதலமைச்சர் அல்லது ஏனைய அமைச்சர்கள் பிரயோகித்தமைக்கான ஆதாரங்களாக கடிதங்களை அல்லது கூட்ட அறிக்கைகளினை அவர்களினால் சமர்ப்பிக்க முடியுமா? என வினவ விரும்புகின்றேன்.

சில வெற்றிடங்கள் தகுதியான விண்ணப்பதாரிகள் இன்மை காரணமாக நிரப்பப்படவில்லை என்பதனையும் நியாயபூர்வமான கருத்தாக ஏற்றுக் கொள்ளலாம். ஏனைய 3 ஆயிரத்து 9 வெற்றிடங்கள் நேரடியாக மாகாண சபையினால் நிரப்பப்பட வேண்டியவை. துறைசார் திணைக்களங்களுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் தயாரிக்கப்படாமையினாலும், மாகாண சபையின் அசமந்தப் போக்கினாலும் இவை நிரப்பப்படவில்லை. வடக்கு கிழக்கு ஒன்றாக இருந்து வடக்கு மாகாணம் தனி மாகாணமாக உருவாக்கப்பட்டதன் பின்பு, இரண்டாம் நிலை, ஆரம்ப நிலைகளிற்கான சில துறை சார் ஊழியர்களின் சேவைப் பிரமாணக் குறிப்புகளினை இன்னும் வடக்கு மாகாணத் திணைக்களங்கள் ஆக்கவில்லை. வடக்கு மாகாண சபையின் செயற்றிறனின்மையே இதற்குரிய காரணம் -என்றுள்ளது. (உ-5)

## சென்றலைட்ஸ் காலிறுதிக்கு தகுதி பெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 21
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ் ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற்று சென்றலைட்ஸ் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் வில்ளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. செல்ரன் 87 ஓட்டங்களையும், நிசான் 56 ஓட்டங்களையும், கௌத மன் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வின்ஸ் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் அனஸ் ராஜ் 4 இலக்குகளையும், நேனசியஸ் ஓர் இலக்கை யும் வீழ்த்தினர்.
304 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வின்ஸ் விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதைய டுத்து 101 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்ற லைட்ஸ் அணி.
பந்துவீச்சில் நிரோசன் 2 இலக்குகளைக் கைப்பற்றி னார். (ம-23)


## சண் ஸ்ரார் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஒக். 21
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்ட தொடரில் புங்குடுதீவு சண் ஸ்ரார் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் சண் ஸ்ரார் அணி வெற்றிபெற்று அரையிறுதிக் குத் தகுதி பெற்றது. (ம-23)




# அன்ரனிஸ் கழகம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 21
தாழ்வுபாடு சென். அன்ர னிஸ் விளையாட்டுக் கழ கம் நடத்தும் ரி-20 துடுப் பாட்டத் தொடரில் 'தாழ்வு பாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று கிண்ணம் வென் றது.
நானாட்டான் பொது விளை யாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தாழ்வுபாடு சென். அன்ர னிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பேசாலை சென். விக்டோ றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.




முதலில் துடுப்பெடுத்தாடிய பேசாலை விக்டோரிஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற் றது. அதிகபட்சமாக விவேக் 20 ஓட்டங்களையும், சிந்துசன், ஆனந்தன் ஆகியோர் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் சுகந்தன், அஜந்தன் இருவரும் தலா 3 இலக்குகளையும், ஜெறோன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
138 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்கு டன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தாழ்வுபாடு சென். அன்ரனீஸ் அணி 16.3 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப்பெற்று வெற்றி பெற்றது.
றோய் ஆட்டம் இழக்காமல் 29 ஓட்டங்களையும், ஜீசஸ் ஆட்டம் இழக்காமல் 28 ஓட்டங்களையும், சுகந் தன் 27 ஓட்டங்களையும், நிலுக்சன் 24 ஓட்டங்களை யும் பெற்றனர்.
பந்துவீச்சில் தீலிபன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.
ஆட்ட நாயகனாக தாழ்வுபாடு சென். அன்ரனீஸ் அணி யின் சுகந்தன், சிறந்த துடுப்பாட்ட வீரனாக சித்தி விநா யகர் அணியின் கணேஸ், சிறந்த பந்து வீச்சாளராக தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் அணியின் ஜெறோன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

## 'ஏபி' கழகம் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 21
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத் தில் ஏபிஅணிவெற்றிபெற்றுஅரை யிறுதிக்குத் தகுதி பெற்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தி னம் மாலை இடம்பெற்ற ஆட் டத்தில் ஏபி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளை யாட் டுக் கழக அணி 18.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. வினோத் 30 ஓட்டங்களையும், அனோசன் 22 ஓட்டங்களை யும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஏபி விளையாட்டுக் கழக அணியின்சார்பில்விஸ்ணு 4 இலக்குகளையும், பார்த்தீபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
119 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதி லுக்குத் துடுப்பெடுத்தாடிய ஏபி விளையாட்டுக் கழக அணி 15.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறை வில் ஓர் இலக்கை இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக ராகுலன் 67 ஓட்டங்க ளையும், லிங்கநாதன் 32 ஓட் டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கார்தியேன்சன் ஓர் இலக் கைக் கைப்பற்றினார். (ம-23)

## விண்மீன் அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 21
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற் றும் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி அரை யிறுதிக்குத் தகுதி பெற்றது.
உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறு தியாட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# கடற்கரை கரப்பந்தில் கலையரசி சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 21
வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் சைனிங்ஸ் விளையாட்டுக் கழக மூத்த உறுப்பினர் அமரர் நடராசா வைத் தியலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ண த்துக் காக நடத்திய கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் கலையரசி அணி சம்பியனா னது.
வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற இறுதியாட்டத்தில், கலையரசி அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது.
முதலாவது செற்றை கலையரசி அணி 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றை ஆவரங்கால் மத்திய அணி 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. முதலிரு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் இருந்தன. இத னால் இறுதி செற்றில் வெற்றியைத் தீர்மா னிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற் 15:06 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் கலையரசியின் வசமாக முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
ஆட்ட நாயகனாக கலையரசி அணியைப் பிரதிநிதித்துவம் செய்த டிலக்சன் மற்றும் தொடராட்ட நாயகனாக ஆவரங்கால் மத் திய அணியைப் பிரதிநிதித்துவம் செய்த சுஜீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட் டனர்.




(ம-422-108)

## சுபசிச் ஓய்வு

குரோசிய கால்பந்தாட்ட அணியின் கோல் காப்பாளரான டானியல் சுபசிச், பன்னாட்டு கால்பந்தாட்ட அரங்கில் இருந்து தனது ஓய்வை அறிவித்தார். 2009ஆம் ஆண்டு குரோசிய அணியில் அறிமுகத்தை மேற்கொண்ட 33 வயதான டானியல் சுபசிச், குரோசியாவுக்காக 44 ஆட்டங்களில் விளையாடியுள்ளார்.
ரஷ்யாவில் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் அண்மையில் நடைபெற்றது. குரோசிய அணி இறுதியாட்டம் வரை முன்னேறியது. குரோசியாவின் இந்த இமாலய அடைவுக்கு கோல் காப்பாளர் சுபாசிச் முக்கிய காரணம். இதனால் அவர் ஓய்வை அறிவித்துள்ளமையானது குரோசிய அணிக்கு பெரியதொரு பின்னடைவு என்றே கருதப்படுகிறது.
குரோசிய அணிக்குள் இருந்த அனுபவ வீரர் மான்சுகிக் கடந்த வாரம் ஓய்வை அறிவித்திருந்தார். அவரைத் தொடர்ந்து சுபசிச்சும் ஓய்வை அறிவித்துள்ளமை குரோசியாவுக்கு விழுந்துள்ள பெரியதொரு அடியே. (ம)






# கெடாபி அணியை வீழ்த்தியது மட்ரிட்

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையில் நடைபெறும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி வென்றது.
லா லிகா தொடர் மிகவும் பழமையானது. புகழ் மிக்கதும்கூட. 2016-2017 பருவ காலத்தில் ரியல் மட்ரிட் அணி கிண்ணம் வென்றிருந்தது. 2017-2018 பருவ காலத்தில் மட்ரிட்டிடம் இருந்து கிண்ணத்தைத் தட்டிப்பறித்தது பார்சிலோனா. 2018-2019 பருவகாலம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது.
ரியல் மட்ரிட் அணி பார்சிலோனாவிடம் இருந்து மகுடத்தைத் தட்டிப் பறிக்க வேண்டிய இக்கட்டான நிலை உள்ளது.
இந்தப் பருவகாலத்துக்கான முதலாவது ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி கெடாபி அணியை எதிர்த்து மோதியது. ஆட்டத்தின் முதல் இருபது நிமிடங்கள் வரை கோல் கணக்கு எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. 20ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் கார்வஜெல். வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரியல் மட்ரிட் அணி. இரண்டாம் பாதியின் 51ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் பேல். முடிவில் அந்த அணி 2:0 என்ற கால் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 21

**கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் அமரர் விஸ்ணுசுந்தரம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 21 வயதுப்பிரிவினருக்கான அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் சண்டிலிப்பாய் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## செல்சியில் தொடர்வேன் என்கிறார் ஹசார்ட்

"செல்சியை விட்டு வெளியேறும் எண்ணமில்லை" என்று தெரிவித்தார் அந்த அணியின் நடுக்கள வீரரான ஹசார்ட்.
பெல்ஜியத்தின் தலைவரான ஹசார்ட் கழகத்தைப் பொறுத்தமட்டில் செல்சி அணிக்காக விளையாடி வருகிறார். இவர் ரியல் மட்ரிட் அணிக்காக ஒப்பந்தமாகவுள்ளார் என்று அண்மைக்காலமாக செய்திகள் வெளியாகின. இந்தத் தகவல்களை முழுவதுமாக நிராகரித்தார் ஹசார்ட்.
2018-2019 பருவ காலத்தில் செல்சி அணிக்காகத்தான் விளையாடுவேன். அதே வேளை தொடர்ந்து செல்சியில் இருப்பேனா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க இயலாது என்று ஹசார்ட் மேலும் தெரிவித்தார். (ம)

## கபில்தேவாக அல்ல பாண்டியாவாகவே உள்ளேன்

### பாண்டியா பளார் பளார்

"நான் கபில்தேவாக இருக்க விரும்பவில்லை. பாண்டியாவாகவே இருந்துவிட்டுப் போகிறேன்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் சகலதுறை வீரர் ஹார்டிக் பாண்டியா.
தனது அதிரடி ஆட்டத்தால் ரசிகர்களைக் கட்டிப்போட்டவர் பாண்டியா. தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அவர் அரைச்சதம் கடந்தார். மூன்றாவது ஆட்டத்தில் சதம் விளாசினார். இதையடுத்து ஊடகங்கள் அவரை கபில்தேவுடன் ஒப்பிட்டன. பின்னர் பாண்டியா தடுமாற்றத்தை வெளிப்படுத்த வசைகளை வாரிக்குவித்தன. இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றினார் பாண்டியா. இதையடுத்து சில ஊடகங்கள் மீண்டும் அவரை கபில்தேவுடன் ஒப்பிட ஆரம்பித்துள்ளன. இதையடுத்தே கபில்தேவுடன் தன்னை ஒப்பிட வேண்டாம் என்ற கோரிக்கையை விடுத்துள்ளார் பாண்டியா.
"ஊடகங்கள் பாண்டியாவாகிய என்னை தாமாகவே கபில்தேவுடன் ஒப்பிடுகின்றன. பின்னர் தவறு நேர்ந்துவிட்டால் நான் கபில்தேவ் இல்லை என்று தாமாகவே முடிவெடுத்து விடுகின்றன. சுருங்கச் சொன்னால் தூற்றுவதும் அவர்கள்தான். போற்றுவதும் அவர்கள்தான். என்னை ஏன் கபிலுடன் ஒப்பிட வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. எனக்கு ஒப்பிடலில் விருப்பம் இல்லை. நான் கபில்தேவ் இல்லை. பாண்டியாவாகவே இருந்துவிட்டுப் போகின்றேன்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடை




யில் தற்போது நடைபெற்றுவரும் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தினார் என்று பாண்டியா மீது ஊடகங்கள் கடும் விமர்சனத்தை முன்வைத்திருந்தன. ஹர்பஜன், கவாஸ்கர், சப்பல் உள்ளிட்ட முன்னாள் வீரர்களும் பாண்டியாவைக் கடுமையாக விமர்சித்திருந்தனர். (ம)

English Diploma
ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து முழுமையாக கற்க விரும்புவர்களுக்கும்
பல்கலைக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கும்
ஆங்கில ஆசிரியராக வர விரும்புபவர்களுக்கும்
வெளிநாடு செல்ல உள்ளவர்களுக்கும்
H.N.D.E கற்கை நெறியினை பின் தொடர உள்ளவர்களுக்கும்

Full Time - 6 Months, 4 Months, 3 Months, 2 Months
Part Time - 1 Year, 6 Months, 4 Months, 3 Months

Reading, Listening, Writing, Speaking, Presentation Skills, Public Speaking

New Batches 25 - 08 - 2018 (சனி) (Weekend) 9.00 am, 1.00 pm
Start on:- 27.08.2018 - (திங்கள்) 9.00 am, 1.00 pm, 3.00 pm

ELAS
Sir Pon Ramanathan Road, Thirunelvely, Jaffna. (பல்கலை எதிரில்)
021 221 2410, 076 697 3040, 076 223 5678

வேலைவாய்ப்பு
கொக்குவிலில் இயங்கும் பிரபல பிறிண்டிங் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பணியாளர்கள் உடன் தேவை!
அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பழக விரும்புவர்கள்
- புத்தகம் கட்டுநர்கள் (Binding) பெண்
- Screen Printing தெரிந்தவர்கள் ஆண்/பெண்
- Envelope ஒட்டுபவர்கள் பெண்
- திருமண அழைப்பிதழ் தயாரிப்பவர்கள் பெண்

● கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
வியாழக்கிழமை (23.08.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
136, கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
PRINT MASTER 0776622981 | 0777481696



# இந்தியா வலுநிலை



இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் வலுவான முன்னிலை பெற்றது இந்திய அணி. இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலிரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. இதனால் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை இந்தியாவுக்கு உள்ளது.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
0768226240
V2 TRAVELS

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 329 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கோக்லி 97 ஓட்டங்களையும், ரகானே 81 ஓட்டங்களையும், தவான் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அன்டர்சன், புரோட், வோக்ஸ் மூவரும் தலா 3 இலக்குகளையும், ரசிட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து சிறந்த ஆரம்பம் கண்டது. குக், ஜெனிங்ஸ் இணைந்து இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைச் சேர்த்தனர். அதன் பின்னர் பாண்டியா விக்கட் வேட்டை நடத்த இங்கிலாந்து நிலைகுலைந்து 161 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பட்லர் 39 ஓட்டங்களையும், குக் 29 ஓட்டங்களையும், ஜெனிங்ஸ் 20 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பந்துவீச்சில் பாண்டியா 5 இலக்குகளையும், இசாந் சர்மா, பும்ரா இருவரும் தலா 2 இலக்குகளையும், சமி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



168 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் இரண்டு இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. புஜாரா 33 ஓட்டங்களுடனும், கோக்லி 8 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அரைச்சதம் கடந்தார் புஜாரா. இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. 72 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஸ்ரோக்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் புஜாரா. எனினும் மறுமுனையில் கோக்லி சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். நேற்றைய மூன்றாம் நாளின் இரண்டாவது செசன் நிறைவில் (தேனீர் இடைவேளையின்போது) இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 270 ஓட்டங்களைக் குவித்திருந்தது. கோக்லி சதம் கடந்திருந்தார். (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி பார்வதிப்பிள்ளை பரமலிங்கம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல 647/ 7 ஆம் யுனிற் கல்மடுநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதிப்பிள்ளை பரமலிங்கம் கடந்த (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பரமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பெருமையினார் கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தெய்வானை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன், கனகம்மா மற்றும் இராமநாதன், சிவகாமி காலஞ்சென்ற லிங்கநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் கோபாலபிள்ளை, கண்மணி, மீனாட்சி, பராசக்தி காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பரமேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற தயாபரன் (பிரான்ஸ்) மற்றும் ரவீந்திரன், சந்திரபாலா, யசோதா (டென்மார்க்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் கேதீஸ்வரன், றஞ்சினி, குகராசா காலஞ்சென்ற கம்சன், பிரதீபன், சிவரூபன் (நீதிமன்றம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத்தாயும் வரதலக்ஷமி (கனடா), கிருஷ்ணவேணி (பிரான்ஸ்), ஜெயராணி, சர்வேஸ்வரி, குலநாதன் (டென்மார்க்), அஜனாஜா, விமலநாதன், பாலதர்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2018) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தீபன் 077 600 7729,
021 228 5463

தகவல்:
குடும்பத்தினர்.

## வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக். 21

தொடுவானம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி அக்கிராயன் மகா வித்தியாலயத்தின் பிரான்ஸ் பழைய மாணவர்கள் ஒன்றியத்தின் ஆதரவில் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட வடமாகாண ரீதியிலான கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் நாளைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.